# தமிழருவி

**கலை இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகை**

மலை -1 அருவி -3



தெள்ளிய சிந்தனைக்கு வள்ளுவர் பெருமானார்
விவசாயமும் நாமும்
நட்சத்திர எழுத்தாளர்
புதிய வேதம்
சிறுவர் உளவியலும் கற்பித்தல் முறையும்
சைவ சித்தாந்தததத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்............
இராமராஜ்ஜியம்
குழந்தை ம. சண்முகலிங்கத்தின் செவ்வி
பொது அறிவு
பனையோலை இராமன் க(ா)தைகள் நகைச்சுவைத்தொடர்
மானுடவிடியலை நோக்கி நகர....
கோயிலில் மறைந்திருக்கும் உண்மைகள்
செவ்வியல் தமிழ்லக்கியத்தில் பெண்மை

விலை 50/-

வெளியுலகில் சிந்தனையிற் புத்து புத்தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். - பாரதியார்


இயக்குநர், உதவி ஆசிரியர் :

த. கணேசமூர்த்தி

பிரதம ஆசிரியர் :

ம. பா. மகாலிங்கசிவம்

கௌரவ ஆலோசகர் :

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்



முகவரி:

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தொலைபேசி :

077 7743055
021 490 7619

அலுவலக முகவரி

தமிழருவி,
பலாலி வீதி,
டிப்போ அருகாமை,
உரும்பிராய்.

E.mail :
tkm.tamilaruvi@gmail.com
Skype : tkm.tamilaruvi


## ஈழத்துச் சஞ்சிகைகளுக்குத் தோள் கொடுப்போம்.

இன்று சஞ்சிகைகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. அந்தக் குறைந்தளவானோரிலும் ஈழத்துச் சஞ்சிகைகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கையோ மிக மிகச் சொற்பம் என்றே கூறலாம்.

விசேடமான வடிவமைப்புக்களுடன் வண்ண வண்ணப் பக்கங்களைத் தாங்கிவரும் தமிழகச் சஞ்சிகைகளுடன் ஈழத்துச் சஞ்சிகைகள் வடிவத்தில் மட்டும் போட்டியிட முடியாதிருக்கலாம். ஆனால் தரத்தில் தமிழகச் சஞ்சிகைகளுடன் போட்டியிடவோ, விஞ்சவோ முடிந்த தரத்தில் சிறந்த மல்லிகை, ஞானம், ஜீவநதி போன்ற சஞ்சிகைகள் மாதாந்தம் வெளிவந்து கொண்டிருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

தமிழருவியும் அத்திசை நோக்கிய பயணத்தையே ஆரம்பித்துள்ளது.

எனினும் பெரும் எண்ணிக்கையான வாசகர் குழுவை எட்டுவதிலும், ஆக்கங்களைப் பெறுவதிலும் சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டே வருகின்றன.

ஈழத்துச் சஞ்சிகைகளைத் தோள்கொடுத்துத் தூக்கி விடுவதன் மூலம் நன்மை பெறுபவர்கள் ஈழத்தவர்களே. ஈழத்து எழுத்தாளர்களுக்கே அதிக வாய்ப்புக்கள் கிடைக்கும். இன்று மூத்த எழுத்தாளர்கள் என்று போற்றப்படுபவர்களிற் பெரும்பாலானவர்கள் ஈழத்துச் சஞ்சிகைகள் மூலம் வளர்ந்தவர்களே என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

எனவே ஊரிலுள்ள நூல்நிலையங்களிலும், வாசிகசாலைகளிலும் ஈழத்துச் சஞ்சிகைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பாடசாலைகள் தமக்குக் கிடைக்கின்ற நிதியின் ஒரு பகுதியை இவற்றைக் கொள்வனவு செய்ய ஒதுக்கவேண்டும். எமது நண்பர்கள், உறவினர்களின் பிறந்த தினங்களின் போது ஈழத்துச் சஞ்சிகை ஒன்றைப் பரிசாக அளிப்பது அவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதாகவும் அமையும்.

ஈழத்தவர்கள் இனியேனும் விழித்துக் கொள்வார்களா?

07.06.2011 ஆசிரியர்கள்.

# சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு



## கட்டுரைத் தொடர் - 3

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
*B.A. Dip-in-Edu, S.L.E.A.S., M.A.*

**சங்கர பண்டிதர் (1821-1891)**

யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்திலே சிவகுருநாதபிள்ளை தெய்வயானை ஆகியோர் செய்த தவத்தின் பயனாக 1821ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21ஆம் திகதி சங்கரபண்டிதர் தோன்றினார். இவர் தனது ஐந்தாவது வயதிலே கந்தரோடை நாகநாத பண்டிதரிடம் சென்று தமிழ், சமய நூல்களைக் கற்க ஆரம்பித்தார். சிறிய வயதிலேயே தமிழ் மொழியில் நிறைந்த புலமையைப் பெற்றார். பிஞ்சு உள்ளத்திலே ஞான வேட்கை குடிபுகுந்திருந்த காரணத்தினால் சமய நூல்களையும் தத்துவ நூல்களையும் தேடிக் கற்றார். இதனால் சைவ சமய பக்தியும் சைவ சாஸ்திர பற்றும் இவரிடம் தோற்றம் பெற்றன. சைவ சமய மூல நூல்களைக் கற்றுத் தெளிய வேண்டுமானால் சமஸ்கிருத மொழியின் அறிவு அவசியம் என்பதை உணர்ந்து கொண்டார். வேதாரணியத்துப் பிராமண பரம்பரையில் வந்தவரும், சுன்னாகத்தில் குருகுலம் நடத்தி வந்தவருமாகிய சுவாமிநாததேசிக மூர்த்தியிடம் சென்று கல்வி கற்று வடமொழியில் பாண்டித்தியம் உடையவரானார். இரகுவம்சம், குமாரசம்பவம், முதலிய சமஸ்கிருத நூல்களை இவரிடம் கற்றறிந்தார். சுன்னாகத்தில் அக்காலத்தில் வாழ்ந்த நாகநாத பண்டிதரின் உதவியினாலும் பல சமஸ்கிருத நூல்களை கற்றார். நாகநாத பண்டிதர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், சிங்களம் ஆகிய பல மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலமை உடையவராகத் திகழ்ந்தார். இந்தியாவின் திருப்புகலூரில் வடமொழி வல்ல சாஸ்திரிகள் ஒருவரிடம் சென்று வியாகரணம், தர்க்கம், மீமாம்சை, நாடகம் எல்லாம் கற்று அவற்றிலே பாண்டித்தியம் உடையவரானார். அறிவுப் பசி கொண்ட சங்கரபண்டிதர் தமது சுய முயற்சியினாலும் பல அரிய சமஸ்கிருத நூல்களைத் தேடிக்கற்றார்.

சங்கரபண்டிதர் ஸ்ரீமத்வை.முத்துசாமி தேசிகரிடம் நிர்வாண தீட்சை பெற்று அகோர சிவாச்சாரியார் பத்ததியைப் பின்பற்றித் தனது பூஜை வழிபாட்டினை நடாத்தி வந்தார். கிரியை முறையைக் கூறும் ஆகமங்கள், பத்ததிகள் என்பவற்றிலே தமது அறிவை வளர்த்துக் கொண்டார். ஞானப்பிரகாச முனிவரின் நூல்கள், அரதத்தாசாரியார், அப்பைய தீட்சிதர் ஆகியோரது நூல்களையும் கற்றார். சுவாமிநாததேசிகரிடம் சங்கரபண்டிதர் சிவஞான போதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த நூல்களையும் கற்றார்.

சங்கரபண்டிதர் சுன்னாகத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கற்றவராயினும் அவரை நீர்வேலி சங்கரபண்டிதர் என்றே கூறும் வழக்கம் காணப் படுகிறது. இவர் நீர்வேலியைச் சேர்ந்த தங்கமுத்து அம்மாளை மணம் புரிந்தார். சங்கரபண்டிதரை மருமகனாகப் பெற்றமையால் நீர்வேலிக் கிராமம் புகழ் அடைந்தது.

பண்டிதர் முதலில் சுன்னாகத்திலும் பின்னர் நீர்வேலியிலும் வேத வேதாங்கங்கள், ஆகமங்கள், பத்ததிகள், கிரியை நூல்கள்,தத்துவ நூல்கள் முதலியவற்றையும் தமிழில் காணப்படுகின்ற அரிய நூல்களையும் மாணவர்களுக்குக் கற்பித்தார். பண்டிதரிடம் கல்வி கற்றவர்களில் சபாபதிக் குருக்கள், முருகேசு பண்டிதர், சங்கானை அருணாசல சாஸ்திரிகள், மாதகல் ஏரம்பையர், கோப்பாய் சபாபதி நாயகம் பண்டிதரின் மகனாகிய சிவப்பிரகாசபிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மிக்க அபிமானம் கொண்டும், சமயப் பற்றுக் கொண்டும் விளங்கிய பண்டிதர் நூல்களைப் பரிசோதித்து எழுதியும், செய்யுள் வடிவில் அமைந்த சில சமஸ்கிருத தமிழ் நூல்களுக்கு உரை

எழுதியும், சமய பிரசங்கங்கள் செய்தும், மாணவருக்குக் கல்வி புகட்டியும் தமது பணிகளைச் செய்து வந்தார்.

சங்கர பண்டிதர் கோவில்களிலும் அறிஞர் சபைகளிலும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலியவற்றிற்குப் பொருள் கூறிப் புராணபடனம் செய்வதில் சிறந்து விளங்கினார். இவர் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவாகக் கூறி விளக்குவதில் வல்லமை பெற்றிருந்தார்.

சங்கர பண்டிதர் ஆற்றிய பிரசங்கங்கள் மிகச் சிறப்பு மிக்கனவாக அமைந்திருந்தன. இவரது சில பிரசங்கங்கள் நூல் வடிவும் பெற்றிருந்தன. பண்டிதர் பரமத கண்டன தலமதஸ்தாபனமாகவும் பிரசங்கங்களைச் செய்தார். ஆறுமுகநாவலர், காசிவாசிசெந்திநாதையர், போன்று சைவசமயத்தை தூசிப்பவர்களுக்கு எதிராக பண்டிதரும் குரல் கொடுத்தார். இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் இவருடைய சமயப் பிரசங்கங்கள் இடம்பெற்றன. தமிழ் மொழியில் மாத்திரமல்லாது சமஸ்கிருத மொழியிலும் சொற்பொழிவாற்றும் வல்லமையைப் பெற்றிருந்தார். சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் பாடசாலையிலே தில்லை வாழ் அந்தணர்களும், சமஸ்கிருத வித்துவான்களும், பிறரும் கூடிய சபையிலே"பதிவிசேட நிருபணம்" என்னும் பொருளிற் சமஸ்கிருதத்திலும் சொற்பொழிவாற்றிப் பெரும் புகழும், கௌரவமும் பெற்றுக் கொண்டார்.

சங்கர பண்டிதர் வடமொழி, தென்மொழிக் கடலை நிலை கண்டவர். சித்தாந்த சைவப் பிரசாரக சிரோரத்தினம், சைவசிகாமணி என்ற பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தார். இவர் பல நூல்களை எழுதியது மட்டுமன்றிப் பல கட்டுரைகளையும் அக்கால பத்திரிகைகளில் எழுதியுள்ளார். அந்நியர்களாகிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சியில் சைவ சமயம் பெரும் இன்னல்களை எதிர்நோக்கியது. இந்நிலையில் ஆறுமுக நாவலரும் சங்கரபண்டிதரும் பிற அறிஞர்கள் சிலரும் செய்த சமயப் பணியினால் சைவசமயம் அழிவில் இருந்து பாதுகாக்கப்பட்டது.

சங்கர பண்டிதர் சமய தத்துவ நூல்களையும் உரைகளையும் சமஸ்கிருத மொழிகளை கற்கும் நூல்களையும் எழுதினார். இவரால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள்

1. பால சிஷை முதலாம் புத்தகம்
2. பால சிஷை இரண்டாம் புத்தகம்
3. தாது மாலை
4. அமரம் என்னும் சமஸ்கிருத நிகண்டு
5. பிரசாத சட்கலோகித் தமிழுரை
6. சித்தாந்த சாராவலி
7. அக நிர்ணயம் - தமிழ் உரை
8. அகபஞ்சஷ்டித் தமிழுரை
9. சிவப்பிரகாச பாஷ்யத் தமிழ் மொழி பெயர்ப்பு
10. சைவ பிரகாசனம்

சைவபிரகாசனத்திலே பிரத்தியட்ஷம், அனுமானம், ஆப்தவாக்கியம் எனும் தர்க்கப் பிரமாணங்களை முதலிலே விரித்துக்கூறி அவற்றிற்கு இயையுமாறு சுருதியிலக்கணம், சமயலக்கணம் முதலியவற்றை விளக்கிஅதன் பின் சைவ சமய நிரூபணமும் பதிமுதலிய முப்பொருளின் இலக்கணமும் முத்தி சாதனமும் கூறியுள்ளார்.

குமாரசுவாமிப் புலவர் சங்கர பண்டிதரிடம் கல்வி கற்றுத் தமக்கு உண்டாகும் ஐயங்களை எல்லாம் அவரிடம் கேட்டுத் தெளிந்து கொண்டார். இவர் தாம் எழுதிய தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் சங்கர பண்டிதரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"வடமொழி தென்மொழிகளில் உள்ள இலக்கிய இலக்கணங்களையும் ஆகம சித்தாந்த தருக்க நூல்களையும், தர்ம சாஸ்திரங்களையும் நன்கு கற்றவர். ஆசிரியர் மாட்டுக் கற்றளவில் அமையாது மீட்டும் மீட்டும் பல நூல்களை தேடிக் கற்றவர். நூல்களைத் தேடிக் கற்றலிலும், வட நூல்களை தமிழில் மொழி பெயர்த்தலிலும், தமிழில் நூல்கள் செய்தலிலும், மாணவர்க்கு சங்கதமும் தமிழும் கற்பித்தலிலும், பிறமதங்களைக் கண்டித்துச் சைவ மதத்தை நாட்டிச் சைவப் பிரசங்கம் செய்வதிலும் பெரும்பான்மையும் காலங் கழித்தவர்".

சங்கர பண்டிதர் அவர்கள் 1871ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இறைவனை எய்தினார். சங்கர பண்டிதரின் சைவப் பிரசங்கப் பணியைப் பாராட்டி முருகேசு பண்டிதர் வழங்கிய வாழ்த்து.

"சைவத்தை நாட்டிப் பரமதமோட்டத் தயங்குமொரு
தெய்வத்தை போல் வரு சங்கர பண்டித தேசிகர் தாம்
மெய் வைத்த கண்டிகை வெண்ணீற்றினோடு
விளங்கிடச் செய்
சைவப் பிரசங்க தெள்ளமுதென்றினிச் சார் குலமே."

### சுவாமிநாத பண்டிதர்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நல்லூர்ப் பகுதியிலுள்ள கந்தர்மடத்தில் சுவாமிநாத பண்டிதர் 1980 ஆம் ஆண்டளவில் தோன்றினார். ஆறுமுக நாவலரைத் தெய்வமாகக் கருதி வாழ்ந்த குடும்பத்திலே தோன்றிய சுவாமிநாத பண்டிதர் தனது வாழ் நாளையே சைவத் தமிழ்ப் பணிக்கு அர்ப்பணித்தார். வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளையிடம் தமிழ் மொழியை நன்கு கற்றறிந்தார். உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். நாவலர் பாரம் பரியத்தைப் பின்பற்றிச் சைவப் பிரசங்கம் செய்யும் பணியினை மேற்கொண்டார். இவர் சைவ வித்தியானுபாலன அச்சகத்தை நிறுவிச் சொத்துக் களை முதலீடு செய்து நாவலர் அவர்களின் நூல்களையும் தமது அறிவில் எழுதிய நூல்களையும் தரமான முறையில் அச்சிட்டு அடக்கமான விலையில் விநியோகம் செய்து வந்தார்.

மகாபாரதத்தின் ஆதிபருவத்திற்கு வித்துவ சிரோன்மணி நயம்பட எழுதிய உரையையும், திருவாதவூரடிகள் புராணம், நிகண்டுமுதலிய நூல்களையும் பிழையில்லாமல் பதிப்பித்தார். திருவாவடுதுறை ஆதீனத்துத் தம்பிரான் சுவாமிகளிடம் திராவிடமாபாடியத்தைப் பெற்று அச்சிட்டு வெளியிட்டார். மதுரை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவப் பிரசங்கம் செய்த பொழுது மகாசந்நிதானம் மனமுருகி மகிழ்ந்து தாம் அணிந்திருந்த கௌரி சங்கர உருத்திராக்க மாலையைக் கழற்றிப் பண்டிதர் அவர்களுக்கு அணிவித்தார்கள். மூவர் தேவாரத்தையும் பல ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பு நோக்கிப் பரிசோதித்துச் சுத்த பாடமாக அச்சிட்டு வெளிப்படுத்தினார். தேவார அடங்கன் முறையினைத் தலவரிசை தவறாமல் பதிப்பித்தார். திருமுறைகளின் பெருமையினை ஆராய்ந்து திருமுறைப் பெருமை எனும் சிறந்தொரு நூலை வெளியிட்டார்.

"சைவ சமயப் பற்று உடையவர், பகைவருக்கு அஞ்சா இயல்புடையவர், புலோலி கதிரைவேற் பிள்ளையோடு மிகுந்த நட்புடையவர், அருட்பா, மருட்பா வழக்கு நடந்த நேரத்திலே அவருக்கு மிகவும் துணையாயிருந்தார்" எனச் சுவாமி நாத பண்டிதரைப் பற்றி ஈழநாட்டுத் தமிழ் புலவர் சரித்திரத்தில் கணேசையர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். சிவஞான போத மாபாடியம், திருக்கோவையார் உண்மை, தேவாரம் அடங்கன் முறை, திருவிளையாடற் புராணம், குமரகுருபர பிரபந்தம், சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தம் முதலிய சைவ சித்தாந்த நூல்களை வெளியிட்டார். சிறந்த நூல்களைச் சேகரித்தும் செந்திநாதையர் சேகரித்து வைத்திருந்த நூல்களை விலைக்கு வாங்கியும் சிறந்த ஒரு நூல் நிலையத்தை ஆரம்பித்துப் பாதுகாத்து வந்தார். இவருடைய சமயப் பணியையும் தமிழ்ப்பணியையும் போற்றித் தருமபுர ஆதீனத்தார் இவருக்கு வித்துவ சிரோன்மணி என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தார்கள். இவர் சிவபதம் அடைந்த பொழுது பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பாடிய இரங்கற்பா இவருடைய சிறப்பினை விளக்கும் பாடலாகக் காணப்படுகிறது.

"சொன்னார்கள் அந்தோ சுவாமிநா தப்பெரியோன்
மன்னான பண்டிதரும் மாண்டானால் - என்னே தான்
இந்து முடித் தான்சமயம் என்படுமோ என்படுமோ
செந்தமிழும் எனப்படுமோ தேர்".

### சதாவதானி ந.கதிரவேற்பிள்ளை. (கி.பி 1844 -1907)

1844ஆம் ஆண்டில் மேலைப் புலோலியின் தம்பசிட்டிக் கிராமத்தில் சைவப் பற்றும் தமிழ்ப் பற்றும் மிகுந்த குடும்பத்தில் திரு.நா.கதிரவேற் பிள்ளை திருஅவதாரம் செய்தார். இவர் காசிவாசி செந்திநாத ஐயரிடமும் தி.த.கனகசுந்தரம்பிள்ளை என்ற அறிஞரிடமும் தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவசித்தாந்தம், வடமொழி, தொல்காப்பியம், சங்க இலக்கியம் என்பவற்றை எல்லாம் கற்றுப் புலமை எய்தினார். சைவப்பணி, சொற்பொழிவுகள், நூல் வெளியீடுகள், பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதுதல், தமிழ் அகராதியை உருவாக்குதல் எனப் பல துறைகளிலும் பணியாற்றினார். சுப்பிரமணிய கனகசபையை நிறுவித் திருமுறை ஓதும் வழக்கத்தையும், அதற்கு விளக்கம் கொடுப்பதையும், பண்ணோடு பாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சுப்பிரமணிய பராக்கிரமம், சைவ சந்திரிகை, சிவாலய மகோற்சவ விளக்கம், சைவ சித்தாந்த சருக்கம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவற்றுடன் கூர்ம புராண விரிவுரை, பழனி தல புராண விரிவுரை ஆகிய நூல்களையும் வெளியிட்டார்.

சொற்பஞ்சமின்றி உபந்நியாசங்கள் செய்வதில் சிறந்து விளங்கினார். வித்துவ சபைகளிலும், அரச

சபைகளிலும் அஞ்சாது நின்று பேசுவார். தடைப்படாமலும், விரைவாகவும் பல மணி நேரம் நின்று ஆயாசமின்றி பேசும் வன்மை இவருக்கு உண்டு. இவரை வலிந்து வாதுக்கழைத்துத் தோல்வி அடைந்த வித்துவான்களும் பலராவர். பேரிலக்கியமாகிய தொல்காப்பியமும் தமிழ் மறை ஆகிய தேவர் குறளும் என்றுமிவரது நா நுனியிலிருந்து குதி கொண்டாடும். இவர் அட்டாவதானம், சதாவதானம் செய்வதிலும் ஆற்றல் படைத்தவர். இவர் மாயாவாதத்தை நிராகரித்துப் பேசும் தன்மை வாய்ந்தவராதலினாலே சென்னையில் உள்ள வித்துவான்கள் யாவரும் கூடி "மாயாவாத துவம்ச கோளரி" என்னும் பட்டத்தினை வழங்கியுள்ளார்கள். அப்பொழுது அச் சபையிலிருந்து அப்பட்டத்தை அளித்தவர் "ஸ்ரீகாசிவாசி செந்திநாதையர்" என வித்துவ சிரோன்மணி சி.கணேசையர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். பெரும் முயற்சி செய்து அகரவரிசைப்படி தமிழிலே மிகச் சிறந்த அகராதிநூல் ஒன்றை உருவாக்கினார். தமிழ் நாட்டிலே மிகச் சிறந்த சைவத் தமிழ் அறிஞராக இருந்த திரு.வி.கலியாணசுந்தரனார் இவரின் மாணவராவார்.

## அம்பலவாண நாவலர் (1860 – 1915)

இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் நாவலர் பெருமானின் மாணவர். செந்தமிழிலும் வடமொழியிலும் வல்லுநர். நாவன்மை மிக்கவர். சைவப் பிள்ளைகள் சைவச் சூழலிலே கல்வி பயிலும் வாய்ப்புக் கிராமங்கள் தோறும் உருவாக வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமானின் சிந்தனையைச் செயல் வடிவம் ஆக்கியவர்.

வட்டுக்கோட்டை சைவ வித்தியாசாலையை உருவாக்கி கல்விப் பணி புரிந்தார். சிதம்பரத்திலே ஆறுமுக நாவலர் பெருமானின் சிந்தனையை செயல் வடிவம் ஆக்கியவர். சிதம்பரத்திலே ஆறுமுக நாவலர் சந்தான ஞான சம்பந்த சுவாமி ஆதீனம் என்னும் ஓர் மடத்தை நிறுவினார். பல நூல்களை தமிழிலும் வடமொழியிலும் எழுதி வெளியிட்டார். இவர் இயற்றிய 'நாவலர் சற்குரு மணிமாலை' நாவலர் பால் இவருக்கு இருந்த பேரன்பைப் புலப்படுத்தும் நூலாக உள்ளது. உமாபதி சிவாச்சாரியார் அருளிய பௌஷ்கர விருத்தியை வடமொழியிலே அச்சிட்டு வெளியிட்டார். பெரிய புராணத்தில் நிறைந்த பயிற்சி உடையவர் சேர்.பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம் ஆகியோர் இவரைத் தமது குருவாகப் போற்றி வழிபட்டார்கள். இவர் தனது அந்திய நாட்களில் சிதம்பரத்திலே தங்கியிருந்து நடராஜப் பெருமானை நாள் தோறும் வணங்கி வந்தார்.

## சபாபதி நாவலர் (1843 – 1903)


இவர் வட கோவைப் பகுதியிலே (கோப்பாய்) சுயம்பு நாத பிள்ளையின் புத்திரராக அவதரித்தார். நீர்வேலி சங்கர பண்டிதரிடம் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை கற்றறிந்தார். வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளையிடம் திருக்குறளை பரிமேலழகர் உரையுடன் முறையாக கற்றார். சிறந்த ஆங்கில அறிவும் பெற்றிருந்தார். ஆறுமுக நாவலரால் சிதம்பரத்தில் ஸ்தாபிக்கப் பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராக இருந்தார். திருவாவடுதுறை ஆதீனத்துப் பதினாறாவது சந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் அருள் உபதேசம் பெற்றுப் பன்னிரண்டு வருடங்கள் சைவ சித்தாந்த நூல்களை முறையாகக் கற்று வந்தார். இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த சித்தாந்த சாகரமாய் அவ்வாதீனத்தின் வித்துவ சிகாமணியாய் விளங்கினார்.

"அவையிலிருந்து கேட்போர் மகிழப் பேசும் இவரது உரை வன்மையினையும், மாயாவாதம் முதலிய சமயவாதிகளை எல்லாம் வாயடங்கச் செய்யும் நியாயவாதத் தன்மையினையும் நோக்கி இவருக்கு நாவலர் எனும் சிறப்புப் பெயரை மனம் மகிழ்ந்து அவ் ஆதீனத்துச் சுப்பிரமணிய தேசிகர் அளித்தனர்". என 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தில்' கணேசையர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சிதம்பரசபாநாத புராணம், சிவகர்ணாமிர்தம், சதுர்வேதி தாற்பரிய சங்கிரகம், திருச்சிற்றம்பல யமகவந்தாதி, வைதீக காவிய தூஷண மறுப்பு, யேசுமத சங்கற்ப நிராகரணம், திராவிடப் பிரகாசிகை என்பன இவர் எழுதி வெளியிட்ட நூல்களிற் சிலவாகும். இவர் இயற்றிய யேசுமத சங்கற்ப நிராகரணம், சிவஞானசித்தியார் பரபக்கப் போக்கும் நோக்கும் உடைய செய்யுட்களால் அமைந்த சிறந்த நூலாகும். இவர் ஞானாமிர்தம் என்னும் செந்தமிழ் பத்திரிகையை நடாத்தி வந்தார்.

(தொடரும்)

# கோவில்களில் மறைந்திருக்கும் உண்மைகள்



இன்றைய மக்களுக்கு கோயில் மதிப்புத் தெரியவில்லை அதன் பயனை உச்சப்படுத்தவும் உணர்த்தவும் வழிப்படுத்த உண்மையான பூசாரியர்களும் மதத்தினரும் அர்ப்பணிப்புடன் செயறபட்ட தன்மை இல்லாமல் போய்விட்டது. ஏன் பாடசாலை, கல்லூரி களிலும், தொழில்துறையும் தர்க்கமும் மொழியும் கற்றுக் கொடுக்கப்பட்டன. சூழலைக் கையாளத் தெரியாமலும் ஆனந்தமாய் இராமலும் இதயங்கள் இறுக மூடிக் கிடக்கின்றன. கோயிலின் மகிமையும் சிறப்பும் புரியவில்லை. எனவே தங்கள் மதிப்பை இழக்கத் தொடங்கி விட்டன.

கவலை என்றாலும் மகிழ்வைக் கொண்டாட வும் நன்றிப் பெருக் கோடும் பூவும் பழம் தேங்காயுமாக அங்கே தான் போவார்கள். மனிதன் கோயிலை எல்லா இன்ப துன்பத்தோடும் தொடர்பு படுத்திக் கொண்டான். தானாய் பல மாறுதல்கள் கண்டு மெய் சிலிர்த்தான். தினம் தினம் ஏதும் எதிர்பாராமல் போக அவனை அறியாது ஏதோ பெற்றுக் கொண்டான். கோயிலிலே தங்கியிருக்கும் எம் தேசம் அதன் உயிர்த்துடிப்பு மங்கிப்போனால் என்னாவது?

கவலை என்றாலும் மகிழ்வைக் கொண்டாடவும் நன்றிப் பெருக்கோடும் பூவும் பழம் தேங்காயுமாக அங்கேதான் போவார்கள். மனிதன் கோயிலை எல்லா இன்ப துன்பத்தோடும் தொடர்புபடுத்திக் கொண்டான். தானாய் பல மாறுதல்கள் கண்டு மெய்சிலிர்த்தான். தினம் தினம் ஏதும் எதிர்பாராமல் போக அவனை அறியாது ஏதோ பெற்றுக் கொண்டான். கோயிலிலே தங்கியிருக்கும் எம் தேசம் அதன் உயிர்த் துடிப்பு மங்கிப்போனால் என்னாவது?

பலர் உணவு, அடிப்படை வசதி இன்றி செத்துக்கொண்டிருக்கக் கோயில்களில் தங்கம், வெள்ளி, சொத்துகளாய் இருக்கின்றன. பகிர்ந்தளியுங்கள். இடித்துத் தள்ளுங்கள். அனாதை மடம், பள்ளிக்கூடம் அமைக்கலாம் எனக் குரல் கொடுக்கின்றனர். அதன் உண்மைப் பயன்பாட்டை மறந்து போய் விட்டார்கள்.

தமக்குக் கிடைத்த அளவிடமுடியா சக்தியை, ஆனந்தத்தை அங்கேதான் பெற்றுக் கொண்டிருந்தார்கள். தானாகவே நடந்தது. எனவே கிடைத்த பலன்களை ஈடு செய்ய முடியா ஆனந்தத்தில் இருப்பதில் எது சிறந்ததோ அதை எல்லாம் வாரி வழங்கியவர்கள் ஏழ்மையில் மிகவும் வாடிய இந்த மக்கள் தான். கால மாற்றத்தால் புராதன ஞானங்கள் மெல்ல மறைந்தன. எவருக்கும் புரியாத மர்மச்சடங்குகளாய் மாற்றம் பெற்றன. பல ஞானிகளின் உள்ளுணர்வு அறிவியல் விஞ்ஞானங்கள் பல மாற்றங்கள் அடைந்தன. இவர்களின் உள்நிலை கண்டு பிடிப்புகளும் உபாயங்களும் காலப்போக்கில் அர்த்தங்களும் விஞ்ஞான உத்திகளும் குறியீடு களும் எல்லா செயல்பாடு களும் மங்கிப்போயின. இதனால் மூடநம்பிக்கை கள் சடங்குகளாகக் கருதப்பட்டன.

எந்த அற்புதங் களும் இரகசியங்களும் மறைக்கப்பட்டாலும் அவை மனித நன்மைக் காகக் காத்திருக்கின்றன. எவர்க்கு என்னென்ன வேண்டுமோ இயற்கை தானாக தேடல் உள்ளவர் களுக்குத் தன் உணர்வாய் உணர்த்திக் கொள்ளும். உணர்ந்த ஞானிகள் வெளிப்படுத்தி சூட்சுமமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற வேளையிலும் நாம் இதை மறுமுறை இணைத்து ஆராய்வோம்.

கோயில், மந்திரம் யந்திரம், தந்திரம், யாகம், யோகம், தியானம், சமாதி சடங்குகள், தீர்த்தயாத்திரை, விக்கிரக வழிபாடு, ஜோதிடம், உடலில்லா உயிர்கள், தத்துவங்கள், கலைகள், மூலிகைகள், விரதம், சிவசின்னங்கள், இரச வாதம், பலிஇடுதல், புராணங்கள் என்னும் பல.

கடவுள் என்றால் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர். ஆனந்தமாகி கருணையாகி ஆதி அந்தமில்லா ஜோதியாகி இருப்பார் எனும் பொருளை அறிந்திருக்கிறோம்.

கட + உள் = கடவுள் என்னும் சொல்லைப் பார்த்தால் கடந்து உள்நிலைக்குப் போதல். இந்த உள்நிலைதான் உள்ளம், (மனம்) மனம் என்றால் உயிரின் படர்க்கைதான். உயிர் என்றால் எல்லாம் கடந்தது. ஆனந்தமாய் வார்த்தையால் உணர்ச்சியால் விபரிக்கமுடியாத ஆன்மாவாக இருப்பது. ஆகவே உயிரைத்தான் கடவுள் என்போம். உயிர் கர்மவினையால் சிக்குண்டு இருக்கிறது. அதனால்தான் தன்னை அறிய முடியா துள்ளது. உயிர் தன்னை உணர வேண்டு மானால் மனதை உள்ளடக்கி அதற்குப் பயிற்சி செய்ய வேண்டும். இயலாதவர்களுக்கு அதே மனத்தைச் சடங்குகளைக் (யாகம்) கொண்டு கோயிலை உருவாக்கினார்கள். அதே மனத்தை உள்ளடக்கி உயிரிலே உணரக் கூடியதை "யோகம்" என்றார்கள். யோகம் என்றால் ஒடுக்கம். யாகம் என்றால் படர்க்கை. இதில் மனிதன் வாழ்வில் நிறைவு பெறவேண்டும் என்றால் உடலமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல்வலிவு, சுகம், செல்வம் ஆகியவை தேவையாகும். ஏதாவது குறைந்தாலும் விருத்தி செய்ய வேண்டும் மனத்தில் என்ன குறை இருக்கிறதோ அதற்கு ஊக்கம், வலிவு கொடுத்து செயலில் கொண்டு வந்து ஈடுபடலாம். கட்டுடல் வேண்டும் என்றால் கட்டுடல் போன்று ஒரு உருவத்தைப் படைத்து அதனைத் தியானம் செய்வதும், அதன் வீரதீரங்களைப் பற்றிப் பேசுவதும், கதைகள் எழுதுவதும் வேண்டும். இதைப் படிக்கும் போது வீர உணர்ச்சி உண்டாகி செயலில் வீரம் வரும். அதேபோல் எந்தெந்த மாதிரி குணங்கள் வேண்டுமோ அத்தனை குணங்களையும் ஒரு உருவத்தில் கற்பித்து அதற்குத் தகுந்தவாறு உருவமைப்பு வைத்து அதற்கு ஏற்ற கதைகள் எழுதிப்படிக்கச் செய்வதன் மூலம் நாம் அந்தப் பலனை அடைகிறோம். அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல் வ்லிவு, சுகம், செல்வம் இப்படி ஏழு வகைக்கும் உருவங்களையும் அதற்குரிய குணாதிசயங்களை அமைத்து அவற்றை விளங்கிக் கொள்வதற்குக் கதைகள் கற்பனை செய்து சிலைகளை ஏற்படுத்தி வைத்தார்கள்.

அச்சிலை வணக்கத்திலேயே 3 திட்டங்கள் உண்டு.

இணுவில்
யோகாழீ

1. மந்திரம்
2. யந்திரம்
3. தந்திரம்

விக்கிரக சிலை மந்திரம் யந்திரம் தந்திரம் சடங்குகள் என்னும் பல நற்பயனை உள்ளடக்கியும் மெய்யியல், இரசாயனவியல், பௌதீகவியல், வானியல், உயிரியல் விஞ்ஞான சமூக கலாசார உச்ச அறிவியலின் புரியாத அனுபத்தை உணரத்தான கோயிலை அமைத்தார்கள்.

கோவில்கள் சமூகத்தில் எப்பொழுதுமே ஒரு முக்கிய பங்கை வகித்திருக்கின்றன. கல்வி, கலை மற்றும் கலாசார குவிப்பு மையங் களாக மட்டுமல்லாமல் மிகவும் சக்தி வாய்ந்த மையங்களாகவும் செயல்பட்டுள்ளன. எனவே புராதனக் கோவில்கள் வழிபாட்டுக்காக அல்லாமல் சக்தியின் கருவறையாகவே அமைக்கப்பட்டன. விருப்பத்துடனும், ஏற்றுக் கொள்ளும் தன்மையுடனும் இருந்தால், ஒருவர் தன்னை மிகவும் ஆழமான வழிகளில் மாற்றிக் கொள்ளமுடியும்.


இந்தக் கோயில்களின் வடிவமைப்பும் கட்டுமானமும் மிகவும் நுணுக்கமாகவும் சிக்கலான கணக்குகளுடனும் கட்டப்பட் டுள்ளன. இந்தக் கோவில்களின் அடிப்படை வடிவமைப்பானது கோவில் பரிக்ரமா, கோவிலின் கர்ப்பக்கிருகம், கடவுளின் உருவச் சிலையில் உள்ள முத்ரா, பிரதிஷ்டைக்காக பயன்படுத்தப்பட்ட மந்திரங்கள் இவையனைத் தையும் பொறுத்து அமைகிறது.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உள்ள உள் சக்திகளின் ஆழத்தைப் புரிந்து கொள்ளுதலை அடிப்படையாகக் கொண்டு, உள்நிலை மாற்றத்திற்கு உபயோகப்படும் மிகவும் சக்தி வாய்ந்த இடமாக இந்தக் கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு தற்பொழுது கூட இந்து சமய கலாசாரங்களில் கோவிலுக்குள் சென்றால் சிறிதளவு நேரமாவது அமைதியாக உட்கார்ந்து விட்டு செல்வது வழக்கமாக உள்ளது. வழிபாடுகளும், பிரார்த் தனைகளும் கூட அவ்வளவு முக்கியமாகக் கருதப்படவில்லை. ஆனால் ஒருவர் சிறிது நேரமாவது கோயிலுக்குள் உட்காராமல் போய்விட்டால் அது பலனற்றதாகக் கருதப் பட்டது.

இது எதற்காக் என்றால், கோயில்கள் எல்லாம் சக்தியை நிரப்பிக் கொள்ளும் இடங்களாகக் கட்டப்பட்டுள்ளன. அவ்வப் போது மக்கள் இங்கு வந்து தங்கள் உள்சக்தி நிலையைப் பெருக்கிக் கொள்ளலாம். மக்கள் தினமும் காலையில் தங்கள் வேலைகளை ஆரம்பிக்கும் முன் கோயிலுக்குச் செல்வார்கள். இதனால் தங்கள் வாழ்க்கையை அதிக சமநிலையுடனும், ஆழத்துடனும் அவர்கள் எதிர்கொள்ள முடியும்.

காலம் செல்லச் செல்ல இந்தக் கோயில் களுக்குப் பின்னே உள்ள அறிவியலைப் புரிந்து கொள்ளாமல் வெறும் சடங்குகளை யும், பாரம்பரியத்தையும் மட்டுமே பார்த்தார்கள். அதனால் தற்போது கோவில்கள் வெறும் பிரார்த்தனைக் கூடங்கள் ஆகிவிட்டன.

பண்டைய கோவில்கள் விஞ்ஞானத் திலும், உள்நிலைச் சக்தியிலும் ஆழ்ந்த ஞானம் கொண்டவையாக அரைக் கோள வடிவில் கட்டப்பட்டன. அங்கே சொல்லப் படும் ஓங்கார மந்திரங்கள் எதிரொலித்து பல ஒலி வட்டங்களை உருவாக்கி அதிர்வாகின. இந்த அதிர்வுத்தன்மை வெட்ட வெளியில் மந்திரம் ஓதினாலும் கிடைப்பதில்லை. அந்த அதிர்வுகள் அமைதியாக இருக்கும் மக்களுக்குள்ளே புதிய சக்தியாக ஊடுருவி மின்சாரமாகி ஜீவ காந்தமாகின. ஏன் அருளாகி உள்நிலை வேண்டுதலை நிறை வேற்றின. அதனால் தான் சொன்னார்கள் சில நிமிடங்கள் (15நி–20நி) கண்மூடி (சாப்பாட்டு ஆசனத்தில்) இரு கை கோத்து கால்களின்மேல் வைத்து உட்கார வேண்டும். இதனால் உடல் ஒரு வட்டத்திற்குள் செயல்பட ஆரம்பிக்க மின்சுழற்சி வெளி யேறிவிடாமல் நமக்குள்ளே சுழல ஆரம்பிக்கும். சிந்தனைகள் குறைந்து போக அமைதியாகி விடுவோம். எனவே உள்நிலை ஆற்றல் வட்டத்தைப் பூரணத்துவம் ஆக்கவே கோபுரங்கள் அரைக் கோள வடிவில் அமைக்கப்பட்டன. அவை இருண்டதாய் சிறியதாய் காற்றுப்புகாதபடி அழுத்தமாய் இறுக்கமாய் இருந்தன. அங்கே உருவான மந்திர ஒலி வட்ட மின்காந்தம் உடைந்து விடக் கூடாது என்பதற்காக இதனால் எவர்க்கும் நோய் வந்ததில்லை. அளவும் எப்படிப்பட்ட கல்லால் கட்டப்பட வேண்டும் என்பதும் தீர்மானிக்கப் பட்டிருந்தன. சில கற்கள் ஒலியைச் சிறந்த முறையில் ஒத்ததிர்வு செய்கின்றன. எனவே கருங்கல்லைக் கூடுதலாகப் பயன்படுத்தினர். சில நேரத்தில் விளிப்பு நிலையில் இருந்தாலும் கவனம் சிதறுப்பட்டுப் போனாலும் மணிகள் அடிக்கும் போது கவனம் திரும்பிவிடும். மணியோசை ம்ம்ம் என்றே கோயிலுக்குள் அதிர்வலைகளை மேலும் பெருக்கிக் கொள்ளும். அமைதி ஆழ்ந்து போக வலுவூட நாம் இருக்கும் தரையில் பலவகைத் துணிகள் இருந்தால் உடல் ஓடும் மின்சாரம் பூமி கடத்தப் படாமல் இருக்கும். பூரண அமைதியினால் ஆனந்த பரவசம்தான். இந்த நேரம் கர்மா கூட இல்லை. பிரபஞ்சத் தன்மையோடு கரைந்து போய்விடுகிறோம் பஞ்சலோகத்தி லான தகடு அதில் அட்சரங்களை எழுதி சில மந்திரங்களை – எந்த நன்மை பெற வேண்டுமோ அதற்கேற்றவாறு – உருவேற்றி உயிருக்கு எழுச்சி தரும் (அதிர்வு) மந்திரத்தை விக்கிரகத்திற்கு அடியில் புதைத்து வைப்பார்கள். தினம், தினம் மந்திரத்தை உச்சரிக்க மனிதன் சுற்றி வரவும் நீண்ட காலம் ஆற்றல் சுழன்று கொண்டு இருக்கிறது. ஒருவன் பலவீனமாக இருக்கின்றான் என்றால் சத்தியைக் கூட்டுகிறது. சக்தி அதிகமானால் தன் சக்தியை தருகின்றான் எனப் பொருள். வலம் சுழியாகத்தான் ஆற்றல் சுழன்று கொண்டிருக்கிறது. எனவே வலம் சுழியாக சுற்றுகிறார்கள். ஒவ்வொரு ஆலயமும் முறையாக நிர்வ கித்தால் ஓர் ஆற்றல் மிகுந்த இடமாக அமையும். இல்லை என்றால் எங்களிடம் இருந்து ஆற்றல் மையத்தில் இருக் கும் விக்கிரம் பெற்றுவிடும். நாம் பலவீனப் பட்டு நோய் வாய்ப்பட்டுப் போவோம்.



உடைந்த விக்கிரகமோ பிழையான மந்திரமோ இருக்கக்கூடாது என்பர். மற்றுமொருமுறை மகான்கள் தங்கள் உயிரை வெளிவிடாமல் தம் உயிரில் அடக்கம் பெற்று ஜீவ சமாதி என்ற நிலை எய்தி இருப்பர். இலங்கையில் செல்வச் சந்நதி, இந்தியாவில் 18 தலங்களில் (திருவெண்ணாமலை, திருவானைக்கா, சிதம்பரம்) மேல் சிலையை வைத்து கோயில் கட்டி வழிபடுகின்றனர். குடமுழுக்கு இவற்றுக்குத் தேவையில்லை. மந்திரம் என்றால் தூயஒலி மந்திரத்தை ஒரு ஆஸ் கோப்பி சேர்த்தால் அலைவரிசை மந்திர அம்சத்திற்கு ஏற்ப ஒரு வடிவமாக வெளிப்படும். ஒவ்வொரு வடிவத்திற்கும் ஒவ்வொரு ஒலி இருக்கிறது. அந்த ஒலிக்குத்தான் மந்திரம் எனப் பெயர். அதன் வடிவம் யந்திரம். இந்த இரண்டையும் பயன்படுத்தும் முறைதான் தந்திரம். மந்திரம் யந்திரம் தந்திரம் ஒலி வடிவம் செயல்நுட்பம் இந்த மூன்றும் தான் சக்தி மிக்க வடிவத்தை உருவாக்கும். அது ஒரு தனியான ஆழமான அறிவியல் கோயில் மேளதாள நாத ஆராதனையால் தான் மூலச் சக்தி நிலை உயரச் செய்கிறது. வாழ்க்கையைக் கவலையிலே கழிப்பதால் உள்ளே இருக்கும் எதிர்ப்பு நிலை திறந்த நிலையைத் தடை செய்கிறது. இதனால் தங்களைச் சுற்றிக் கவசத்தை ஏற்படுத்தி வெளியில் இருந்து உள்ளே நுழையாமல் பார்த்துக் கொள்கிறார்கள். எனவே கோயில் மேள தாள நாத ஆராதனை மூலம் ஓசைகளை அர்ப்பணித்துச் சக்தி நிலையைச் செய்வதன் மூலம் திறந்த நிலைக்குப் போக சக்திநிலை செயற்படுகிறது. ஆனந்தமாகி விடுகிறோம்.

இது ஒரு தந்திரம் ஒலி – வடிவம் – செயல்நுட்பம் – ஜீவகாந்தம் பெருக்கம் – விழிப்புநிலை ஆலயத்திற்குப் போக சிறந்த வழிதான் அர்ப்பணிப்போடு போவது. ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றுக்கு அர்ப்பணிப்பு இல்லை. எங்களை நாங்கள் ஓர் அர்ப்பணிப்பாகக் கொண்டு வணங்குவது. நெஞ்சுக்கு நேரே கை கூப்பியும் விழுந்தும் வணங்குகிறோம். இருகை சேரும் போது சமநிலைக்கு வந்து விடுகிறோம். நெஞ்சுக் குழியில் தான் அனாதகம் என்னும் நாளமில்லாத சுரப்பி இருக்கிறது. அது விழிப்பு நிலை பெற்று அன்பு நிலை பெற்று அதிகரித்துக் கருணையாக மாறுகிறது. கருணைதான் கடவுள் உள்ள சக்தி நிலை ஊடுருவ இலகுவாக திறந்தநிலைக்குப் போகிறோம். எந்தெந்தக் கடவுளுக்கு என்னென்ன விதமாக உகந்ததென்றே வகுக்கப்பட்டன.

மணி ஓசை, வாசனைத் திரவியம், மலர், மந்திரம், விளக்கு ஒளிகள் எல்லாம் உள்நிலையிலும் தொடர்புடையனவாக இருந்தன. எனவே இவற்றுள் சில கோயிலில் பயன்படுத்தப்படுகின்றன. இவை மூலமாக நாம் கடந்த உள்நிலை நோக்கிப் போகமுடியும். உள்நிலைக்குச் சமனான நறுமணம் வெளியில் இல்லை. ஓரளவு சமமான நறுமணப் பூவைத் தெரிவு செய்து வைக்கிறார்கள். மலர்களும் அதிர்வுத் தன்மையைப் பெற்று வெளிவிடும். காது அருகில் வைக்கும் போது அருகில் உள்ள நாளமில்லாத சுரப்பியைத் தூண்டுகின்றன. அவை மூளையோடு தொடர்புடையவை. எனவே மூளையும் நல்ல ஆற்றல் பெறுகிறது. சில மலர்கள் நீல ஒளிகளோடு வாசனை ஒத்துப் போகும். அதனால்தான் சாம்பிராணியும், ஊதுபத்தியும், வாசனைத் திரவியமும் பயன் படுகிறது. மசூதியிலும் லேபன் மணப் புகை இடப்படுகிறது. அல்லா.. அல்லா ஹ் என்று மீண்டும் மீண்டும் சொல்ல ஹ் மட்டும் திரும்பத் திரும்ப எதிரொலிக்கும். திடீர் என லேபன் மணத்துடன் தொடர்புடையது. இதைக் காட்டவே மசூதியில் லேபன் மணப் புகை வாசனைத் திரவியம் மணம் வீசுகிறது.

ஒரு குறிப்பிட்ட மந்திரத்தைத் தொடர்ந்து சரியான முறையில் ஓதுவார் எனில் அவருக்குள் மலர்வு ஏற்பட்டு உடல் கூட மணம் வீசும். மந்திரத்திற்கு ஏற்றால் போல மலர் அந்த அதிர்வின் உள்ளொளிக்கும் ஏற்பவே கோயிலின் விளக்குகளின் வெளிச்ச அளவுகள் நிர்ணயிக்கப்பட்டன. அதிகூடிய வெளிச்ச அளவும் மிகவும் முட்டாள் தனம் தான். நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன. இவை உள்ஒளிக்கு ஏற்ப புறஒளியைத் தரும்.

விளக்கு தியானம் கூட இருக்கிறது. இந்தத் தியானம் மூலம் எமது ஜீவகாந்த சக்தியை அதிகரிக்கலாம். பழைய காலங்களில் அளவான வெளிச்சத்தைப் பயன்படுத்தி உள்நிலை நோக்கித் தியானத்திற்குச் செல்லத்தான் அந்த ஏற்பாட்டைச் செய்தார்கள். எனவே தியானம் செய்கிறவர்களின் அலைகள் கோயிலின் ஆற்றலைப் பெருக்கின. அவை வெளியிலும் பரவின. எனவே கோயில் அருகால் போகிறவர்கள் கூட மாற்றம் அடைந்தார்கள். அது இன்றையவர்களுக்குப் புலப்படாதது ஏன்? கோயிலுக்குப் போய் தியானம் செய்வதில்லை. நாங்கள் ஒரு முறை சத்சங்கம்

ஆச்சிரமத்தில் மூன்று நாள் தங்கி தியானம் செய்தோம். சத்–குரு, சங்கம்–தொடர்பிருத்தல். குரு வருகிறவேளை மல்லிகைப்பூ மணம் மணத்து ஷிவா என்ற ஒலி மட்டும்தான். உடம்பே அதிர்வாகி நாங்கள் கடந்து போய் விட்டோம். சில நேரம் சந்தன மணம் கூட மணத்திருக்கும்.

கோயிலில் இருக்கும் போது நல்ல வாசத்தை மணக்கிறோம். அப்போது ஆழமான அமைதியான நிலையில் இருந்திருப்போம். இப்போது நாம் குழப்பத்தில் இருக்கிறோம். அந்த வாசம் மணக்கிறது. நாம் முந்தைய ஆழமான அமைதி பரவசத்திற்கு எங்களை அறியாமல் போய்விடுவோம். சில மந்திரத்தை ஓதுவதால் சந்தன மணம் பிறக்கும். இது உருவாகக் காரணம் இரு புருவத்துக்கும் மத்தியில் மூக்கின் நுனியின் மேல் உள்ள நாளம் இல்லா சுரப்பி. ஆக்கினை சக்கரம் இது தான் மூன்றாம் கண் என்பர். சந்தனத்தை வைத்தால் ஆழமான குளிர்ச்சியைப் பெற்று ஆக்கினைச் சக்கரம் தூண்டலால் மிகப் பெரிய சக்தி மாற்றம் எற்படும்.

குளிப்பதால் பழைய சிந்தனை அறு படுகிறது. ஈரலிப்பாக இருக்கும் போதுதான் ஒலி அதிர்வுகளைக் கூடுதலாக உள்வாங்கிக் கொள்ள முடியும். ஆற்றல் பெருகும் பட்டாடைகளை உடுத்துச் செல்பவர் ஒரு பட்டாடையை பல தடவை பயன்படுத்தி னாலும் (கசக்கினாலும்) புதிது போல இருக்கும். அதிர்வுகளைச் சிதையாமல் பாதுகாத்து மேலும் கூட்டிக் கொள்ளும். இதனால் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பர். வேதங்கள், சுருதிகள் (கேட்டு கற்றல்) சரியான ஒலி அழுத்தத்தால் காதில் கேட்கப்படுபவை. இவை விஞ்ஞான நுட்பம் உணர்ந்தவர்கள் வழியாய் வருபவை. இதில் இரகசிய பொருள் இல்லை.

எங்களை நாங்கள் அறிவதற்கு ஒலியை விடச் சிறந்தது ஏதும் இல்லை. சில ஒலி தூய்மைப்படுத்தும், சில ஒலி தூய்மைக் கேட்டை விளைவிக்கும். ஒலி அலையும் இசையில் உள்ள ஆரோகண அவரோகணங்கள் போல சரியான உச்சரிப்பு இல்லை என்றால் பயன் இல்லை. புனிதமான கோயிலுக்குள் நுழைவது, அமருதல், பயன்படுதல் சரியான முறையில் இருந்தால் ஆனந்தமாக வாழலாம். அறிவியலைக் கற்கலாம். இந்தக் கலை கற்க முடியாது உள்வாங்கிக் கொள்ளத்தான் முடியும்.

குறும்படத்தின் பெயர் - பள்ளிக்கூடம்
எழுத்துருவாக்கம், இயக்கம் - திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள்
இயக்கம்
பாடல் - திரு.த.பிரதாபன்
இசை - இசை இளவரசர் கந்தப்பு ஜெயந்தன்
தயாரிப்பாளர் - திரு. மு. ஜெயதரன், அதிபர், வ/விபுலானந்தாக்கல்லூரி
தயாரிப்பு - விபுலம் அரசியற் கல்லூரி, வ/விபுலானந்தாக்கல்லூரி

2009இல் வெளியிடப்பட்ட இக் குறும்படம் இலண்டனில் இருந்து இயங்கும் விம்பம் குறும்பட நிறுவனத்தின் விருதைப் பெற்றது. 2010இல் தமிழியல் விருதும், கல்வி பண்பாட்டு மரபு நிலை அமைச்சிடம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

## விசேட தேவையுள்ளோர்

மாற்று வலுவுள்ளோர்தனை மனதில் ஏற்று – அவர்
மகிழ்வுடன் வாழ வாழ்வில் ஒளி ஏற்று
மாற்றங்கள் காணும் உலகில் – அவரை
மதித்து வந்து தேற்றிக் கைகொடு

கடவுள் படைப்பில் குறைகளேது – அறிவுக்
கண்திறந்து பார் நிறைவுகள் நூறு
காற்றிற்கு உருவம் இல்லை கானம் இசைக்கிறது
கால்கள் மெலிந்தாலும் புள்ளிமான் வலிக்கிறது.

கிழிந்த பணநோட்டை ஒட்டிப் பயன் பெறுகிறாய்
அழிந்த கழனிகளை மீள் வளமாக்குகின்றாய் – ஏன்
விசேட உதவி தேவைப்படுவோரை மறந்து போகிறாய்?
–அவர்
விருத்திக்கு கைகொடு. சமுக விளைச்சலைப் பெருக்கிடு

தொலை பேசி தந்த கிரகாமுக்கு காதுகள் கேளா
தொலைக்காட்டி தந்த கலிலியோவுக்கு கண்கள்பாரா
தொலைந்தது உறுப்புகளன்றி உணர்வுகள் அல்ல
– நாமும்
தொலைந்த மாற்றுவலுவுள்ளோர் வாழ்வைத் தேடிக்
கொடுப்போம்.

கி. விதுசா
யா/சங்கானை சிவப்பிரகாச ம. வி
தரம் – 11

# புதிய வேதம்

## தொடர்கதை - அத்தியாயம் 03

ஐரோப்பியர்கள் வர்த்தகர்கள் என்ற போர்வையில் கீழைநாடுகளுக்குள் புகுந்து சுதேச மக்களைத் தமது கபட நோக்கங்களால் கவர்ந்து தமது அபிலாசைகளை நிறைவேற்றியதுடன் அரசியல் அதிகாரங்களால் மக்களைத் துன்புறுத்தினர். தங்கள் மதங்களையும் பரப்பி வன்முறை கலந்த ஓர் ஆட்சியையும் நிறுவியிருந்தனர். உலகநாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் நவீன விஞ்ஞானத்தின் அபிவிருத்தியாகவும் மோதலில் தொடங்கி உலகயுத்தமாக மாறி மக்கள் மனங்களில் ஒரு சனநாயகத்தைத் தோற்றுவித்தது. மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் எல்லா நாடுகளும் சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபை என்ற ஒரு அமைப்பை உருவாக்கி எல்லோரும் சமாதான சக வாழ்வுடன் வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருக்கின்றனராயினும் நாட்டுக்கு நாடு வன்முறைகள் நடந்து கொண்டுதானிருக்கின்றன. இந்தச் சூழலில் கீழைத்தேய மக்களில் பலர் அகதிகள் என்ற போர்வையில் ஐரோப்பிய நாடுகளில் புகுந்து அங்கு குடியுரிமை பெற்றும் பெறாமலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களில் எம் தமிழ் மக்களும் அடங்குவர்.


> ஐரோப்பியர்கள் வர்த்தகர்கள் என்ற போர்வையில் கீழைநாடுகளுக்குள் புகுந்து சுதேசமக்களைத் தமது கபடநோக்கங்களால் கவர்ந்து தமது அபிலாசைகளை நிறைவேற்றிய துடன் அரசியல் அதிகாரங்களால் மக்களைத் துன்புறுத்தினர். தங்கள் மதங்களையும் பரப்பி வன்முறை கலந்த ஓர் ஆட்சியையும் நிறுவியிருந்தனர். உலகநாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் நவீன விஞ்ஞானத்தின் அபிவிருத்தியாகவும் மோதலில் தொடங்கி உலகயுத்தமாக மாறி மக்கள் மனங்களில் ஒரு சனநாயகத்தைத் தோற்றுவித்தது.


தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்களை அழித்துத் தமது மதங்களைப் பரப்பியவர்களின் நாட்டுக்குள் அகதிகள் என்ற போர்வையில் புகுந்து எமது வணக்கத்தலங்களை உருவாக்கி வியக்கும் அளவிற்கு எமது கலை கலாசாரத்தை நடத்திக் கொண்டிருப்பதுடன் அரசியல் அரங்கைக்கூட அசைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம் தமிழர்கள் ஹிட்லர் ஆட்சி புரிந்த ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் எதையும் அறிவுபூர்வமாகச் சிந்திப்பவன் ஜெபநேசன். கடந்து போன வரலாற்று நிகழ்வுகளால் தனது முன்னோர்கள் பாதிக்கப் பட்டிருக்கலாம் என்பதை உணர்ந்து கொண்டுள்ளதால் மத ரீதியாக எதையும் இணைத்துப் பார்ப்பதில்லை. தமிழனாகப் பிறந்து வெவ்வேறு மதங்களைப் பின்பற்றும் தனது நண்பர் குழாமை நினைத்துப் பார்த்துக் கொள்வான். ஐரோப்பிய நாடுகள் எல்லாம், திரும்பிய பக்கம் எல்லாம் தமிழர்கள். சைவக்கோயில்களை, வைஷ்ணவக் கோயில்களை உருவாக்கி விழா எடுப்பதைக் காணமுடிகிறது. தேரோட்டம், அன்னதானம், சிதறு தேங்காய் அடித்தல் என ஐரோப்பியரைக் கவரும் விதமாகச் செய்கின்றனர். இவையாவும் உண்மையான பக்தி விசுவாசமாகச் சிந்தித்துப் பார்த்தால் ஐரோப்பியர் செய்ததை இவர்கள் புதுமுறையில் அதிகாரமோ வன்முறையோ இல்லாத நவீன பாணியில் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை நினைத்துச் சிரிப்பான் சிவனேசன்.

"அது தானே பார்த்தேன். ஏதோ சொந்த விடயமாய்ச் சிந்தித்துச் சிரிக்கிறாயாக்கும் என்றல்லோ நினைத்தேன். நேசன் மதம் மாறினாலும் பரவாயில்லை. பிழைக்கிறதிற்காகக் குறுக்கு வழி போறான் என்று விட்டிடலாம். ஊரிலை கழுத்திலை உருத்திராட்சம் கட்டிப் பஜனை பாடினவங்கள் வந்து இங்கே மதம் மாறினது மட்டுமல்லாமல் எமது மதத்தையும் கேவலப்படுத்தியும் கதைக்கிறாங்களப்பா. எங்கடை சமூகம் செய்த பாவங்களின் விளைச்சல்தான் இங்கே பிரதிபலிக்கின்றது" என்று பெருமூச்சு விட்டான் பார்த்தீபன். "பார்த்தி இதுகளைக் கதைத்து நடக்கப் போறது ஒன்றுமில்லை. அது சரி நீ அன்று போனில் கதைத்த விடயம் உண்மை தானா? சிவா என்னிடம் பலமுறை கேட்டு விட்டான். நான் எதுவும் சொல்லவில்லை. நிச்சயப்படுத்தாமல் அவன் மனதில் ஆசையை வளர்க்க நான் விரும்பவில்லை. உங்கள் வீட்டிலை சம்மதிப்பாங்களா?"

ஆக்கம்: கே.எஸ்.ஆனந்தன்



“நேசன் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. மிஸ்டர் சுந்தரம்பிள்ளை என்ன சொல்லுராரோ என்பது தான் கேள்வி”

“கணேசன் தமக்கைக்குச் சொல்லியிருப்பானா?”

“ஓரளவுக்குத் தெரிந்திருக்கலாம் என்று தான் நினைக்கின்றேன். அப்பா சம்மதித்தால் சரி” என்று கணேசன் சொன்னான்.

“எதற்கும் நாங்கள் ஊருக்குப் போய்ப் பேசி முடித்து விட்டுச் சிவாவுடன் தொடர்பு கொள்வோமே” என்று கூறிய ஜெபநேசன் சிவநேசனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்த்தீபன் வந்திருக்கும் விடயத்தைக் கூறினான்.

“நேசன் இன்று லீவு தானே?”

“ஆமாம். இன்று இரவு புறப்படுகிறோம். நீர் வீட்டிற்கு எதுவும் அனுப்புவதானால் கொண்டு வாரும்”.

“நேசன் உம்மிடம் ஒரு விடயம் கூற வேண்டும். நீர் அறிந்திருப்பீர் என நினைக்கிறேன். நாம் எதிர்பார்ப்பதை விட எதிர்பாராத திருப்பங்கள் கதைகளில், சினிமாக்களில் வருவது போல் எங்கள் வாழ்கையிலும் வருகின்றது. எல்லாம் சுமூகமாக முடிந்து விட்டால்…….” என்று மேலே சொல்ல முடியாது தயங்கினான்.

“சிவா. எனக்கு ஓரளவுக்குப் புரிந்து விட்டது. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்று ஓர் பழமொழி உண்டே. அது போலத்தான் எதுவும் நடக்க வேண்டிய காலத்தில் யாருடைய எதிர்பார்ப்புமின்றி நடந்தே தீரும்”.

“உன் நல்ல மனதுக்கு எல்லாம் நல்ல படிதான் நடக்கும். நேரில் பேசலாம் வாரும்” என்றான்.

“ஓகோ நேசன், எனக்கு நீதான் தெய்வமாகத் தெரிகிறாய். ஐந்து நிமிடத்தில் அங்கே வருகிறேன்” என்று ஒலி வாங்கியை வைத்து விட்டான்.

★ ★ ★

காலையில் பூஜை அறையில் சுவாமிப் படத்திற்கு முன் விளக்கேற்றி விட்டுக் கண் மூடி வணங்கிக் கொண்டு நின்றாள் சுவேதா. விபூதி பூசுவதற்காக அறைக்குள் வந்த சாருலதா தங்கையைப் பார்த்து விட்டு விபூதி பூசி விட்டு வெளியே வருவதற்குத் திரும்பிய வேளை சைகையினால் சத்தம் போடாமல் வரும்படி கை காட்டினாள். அவளும் பதிலுக்கு ஏன் என சைகையினால் கேட்டாள். “சுவேதா வரம் கேட்கிறாள் குழப்பிவிடாதே” என்று கூறிச் சிரித்தாள். அக்காவுடன் சேர்ந்து சிரித்த வித்தியாவும் “ஏன்டி சுவேதா அப்படி என்ன வரம் கேட்கிறாய்” என்றாள்.

“என்ன கேட்கப் போறாள் அக்காக்கள் வெளி நாட்டிற்கு போகப் போறாளவை எனக்கும் அப்படி ஒரு சான்ஸ் தரமாட்டாயா? என்று தான். இல்லையா சுவேதா?” என்று சிரித்துக் கொண்டே கூறினாள் சாருலதா. “அக்கா உங்கள் புத்தி எனக்குக் கிடையாது. நான் படித்து எல்லாம் பாஸ் பண்ணி ஊரிலேயே வேலை பார்த்து அப்பா அம்மாவின் கடமைகளைப் பார்க்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். உங்களைப் போலப் பேராசை எனக்குக் கிடையாது.” என்று கூறி விட்டு அறையை விட்டு வெளியே போனாள்.

“அம்மா இவள் என்ன சொல்லுறாள் என்று கேளுங்கோ” இடைமறித்த பார்வதியம்மாள்.

“ஏன் சுவேதா அக்காவுடன் என்ன தகராறு” என்றாள்.

“நான் சாமி கும்பிட்டுக் கொண்டு நின்றேன். தன்னைப் போல நானும் வெளிநாடு போக வேண்டும் என்று வரம் கேட்கிறேனாம். திவ்வியாவிடம் சொல்லி நக்கலடிக்கிறாள்”.

“நான் உள்ளதைத் தானே சொன்னேன். அண்ணா எழுதிய கடிதத்திலை திவ்வியாவையும் லண்டன் கூப்பிடுவதாக எழுதியுள்ளான். அதனாலை எங்கடை சுவேதாவும் அப்படிப் போகனும் என்று வரம் வாங்குகின்றாள் என்று சொன்னேன்”

“சாரு அவள் சின்னப்பிள்ளை. அவள் படிப்பு முடிந்து உங்களைப் போல வேலை பார்க்கணும். அப்புறம் அவள் விருப்பப்படி எதையும் செய்யட்டும். அதற்காக அவள் மனம் நோகும்படி எதையும் பகிடிக்குத்தன்னும் சொல்லாதேயுங்கோ” என்று கூறினாள் பார்வதி.

“அம்மா நான் வேணும் என்றா கூறினேன். சுவேதா என் தங்கச்சி தானே. அவளைச் சும்மா சீண்டி வேடிக்கையாகத்தானே கூறினேன். நாங்கள் சண்டை பிடித்தாலும் சகோதரங்கள் தானே. இப்ப சண்டையா பிடித்தோம். சும்மா பகிடிக்குத்தான் கதைத்தேன்…..” என்று அழ ஆரம்பித்தாள்.

“அக்கா நான் மட்டும் உன்னுடன் கோபப்பட்டா கதைத்தேன். நீ மட்டும் ஏன் அதை சீரியஸாக எடுத்துக் கொண்டாய். சொறி சொறி சொறி அக்கா” என்று ஓடிச் சென்று அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

எல்லோரும் அழுவதை மறந்து கலங்கிய கண்களுடன் சிரித்துக் கொண்டனர். பார்வதியும்

வாய் விட்டுச் சிரித்துக் கொண்டே "நல்ல பிள்ளைகள் போங்கள்" என்று கூறி விட்டுத் தேநீர் போட ஆரம்பித்தாள்.

"அக்கா இன்னும் எத்தனை மாதங்களுக்கு எங்களுடன் இருக்கப் போறீங்கள். நீங்கள் கனடாவிற்குப் போன பின்பு யாரோட சண்டை போடப்போறன்" என்றாள் சுவேதா.

"அக்கா வித்தியா இருக்கிறாளே" என்றாள் சாருலதா.

"அப்பா, சும்மா இருப்பாரா? வித்தியாவையும் எங்கேயாவது அனுப்பத்தான் போறார்." உனக்கு வர வர வாய் நீளுதடி சுவேதா.

பெண்ணாய்ப் பிறந்து விட்டால் எங்கேயே போகத் தான் வேணும்".

"நான் எங்கேயும் போக மாட்டேன். அப்பா அம்மாவுடன்தான் இருப்பேன்"

"பார்க்கத்தானே போறம்.அது சரி நான் சட்டை தைக்க வேணும். எழுத்திலன்று நீ சாரி கட்டு. உனக்கும் பிளவுஸ் தைத்துத்தாறேன்."

"எனக்கு பாவாடை சட்டை போதும். இல்லை என்றால் பஞ்சாபி போட்டுக்கலாம்."

"இன்னும் பத்து நாள் தானிருக்கு. என்ர ஆபீஸ் சினேகிதிகளுக்கும் சொல்லி இருக்கின்றேன் சாரு. அப்பா என்ன சொல்லுறாரோ தெரியவில்லை".

"சாரு நீ ஏன் பயந்து சாகிறாய் நான் இருக்கின்றேன். என்னுடைய பிரண்ஸ் எல்லோரும் வருவார்கள். எங்கள் வீட்டிலே நடக்கிற முதல் நல்ல விடயம் அப்பா எதுவும் சொல்லமாட்டார்".

"இன்னொரு விடயம் உங்களுக்குத் தெரியுமோ?" என்றாள் பார்வதி.

"என்னம்மா" என்று மூன்று பேரும் கேட்டனர்.

"அண்ணனுடைய நண்பர்கள் இருவர் ஜேர்மனியில இருந்தும் லண்டனில இருந்தும் அக்காவின்ர எழுத்திற்கு வருகினமாம். இங்கே தான் தங்குவார்களாம். உங்கள் அப்பா தான் சொன்னார்."

"அட இது புதுக்கதையாயிருக்கே. எங்களுக்குத் தெரியாமல் அப்பாவுக்கு அண்ணா எப்படி கூறினான்."

அதே வேளை வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. எல்லோரும் வாசலுக்கு வந்தனர். காரிலிருந்து இறங்கிய புதிய மனிதர்களைக் கண்டதும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

(வளரும்)

# தமிழ் அருவியாய்ப் பாய்கிறது!

வளர்ச்சி, பரிணாமம், கடந்து வந்த பாதை
வழக்கொழிந்து போன தடங்கள், மாற்றம்
முயற்சிகளின் வெற்றி தோல்விகள்
எல்லாமாய் இன்னும் பல கொண்டதன்
ஒரு சொல்லே வரலாறு!


நேற்றையது இன்று வரலாறு, இன்றையது
நாளை வரலாறு, பழமை, புதுமைகள்
இரண்டுமே வரலாறு, பழமைகள் அழிவதை
மட்டுமே வரலாறாய்க் கொள்வார் எவருமில்லை

நாம் தூக்கிவரும் சுமைகள் கூட வரலாறு
நிலையாக வருபவையும் வரலாறு,
மன மாற்றத்திற்காய் அமைப்பதும் வரலாறு
வரலாற்றைத் தூற்றுபவருமுண்டு, மாறாய்
வளர்ச்சியைத் தூற்றுபவருமுண்டு!

வரலாறு ஆகிவிட்டால் நிலைக்கும் பெயர்
ஒடுங்காது தமிழ் அருவியாய் பாய்வதால்
புதுமைகள் சேர்கிறது, பழமைகள்
ஜொலிக்கிறது, வரலாறு எழுதப்படுகிறது!


வரலாறு என்பது மீளாய்வு செய்ய - படம்
போட்டுக்கொள்ள, புதிய சிந்தனைகளுக்கு
வித்திட, புதிய கருத்துக்களைச்
சொல்ல, நிதானமான இலக்குடன் - அறிவை
அனைவருக்கும் கொண்டு செல்லத்
தமிழ் அருவியாய்ப் பாய்கிறது!!!

இராமலிங்கம் ஜெயபாலன்
தொட்டிலடி, சங்கானை.



என்ன சார் இது....... சம்பளத்தைக் கேட்டா பலாச்சுளை தர்றீங்க?
அதுதான் வேலைக்குச் சேரும் போதே சொன்னேனே சுளையா சம்பளம் தர்ரேன்னு....

# ஈழத்து நவீன நாடக உலகில் மிக ஆழப்பதிந்து விட்ட குழந்தை ம.சண்முகலிங்கம்



செவ்வி கண்டவர் : தமிழ்வண்ணன்

குழந்தை ம.சண்முகலிங்கம். ஈழத்து நவீன நாடக உலகில் மிக ஆழப்பதிந்து விட்ட பெயர். நாடக ஆசிரியராக, நாடகத் தயாரிப்பாளராக, சிறந்த நடிகராக, நாடக அரங்கக் கல்லூரியின் சிற்பிகளில் முதன்மையானவராக, பல்கலைக் கழக வருகை விரிவுரையாளராக........ எனப் பல்பரிமாண ஆளுமையை வெளிப்படுத்தியவர். 1958இல் நல்ல நண்பன் என்ற நாடகத்தின் மூலம் அறிமுகமான அவர் 1985இல் மேடையேற்றப்பட்ட "மண் சுமந்த மேனியர்" மூலம் நாடறிந்த நாடகத் தயாரிப்பாளர் ஆனார். எந்தையும் தாயும், அன்னை இட்ட தீ, யார்க்கெடுத்துரைப்பேன், வேள்வித்தீ முதலிய மிகப்புகழ் பெற்ற நாடகங்கள் உள்ளடங்கலாக மொழி பெயர்ப்பு நாடகங்களுடன் சேர்த்து 135 நாடகங்கள் வரை எழுதிச் சாதனை புரிந்துள்ளார். அவரது அனுபவங்களை வாசர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையிலான செவ்வி இங்கு தரப்படுகின்றது.

கேள்வி : உங்கள் நாடகத்துறைப் பிரவேசம் எத்தகைய தூண்டுதலால் இடம் பெற்றது?

பதில் :அயல் வீட்டு வயோதிபர் ஒருவருக்குப் பல்லே இருக்கவில்லை. வயோதிபருக்குப் பல் இல்லாமல் இருப்பது உலக அதிசயங்களில் ஒன்றல்ல. நான் வாலிபனாக இருக்கும்போது அந்தக் கிழவரைப் போலவே கதைப்பேன். நான் கதைத்ததைப் பார்த்து அந்த வயோதிபர் தான் வந்து விட்டார் என ஏமாந்த திரு. தவராசா என்பவர் பாத்திரம் ஒன்றைத் தந்து நடிக்கச் செய்தார். எனவே எனது ஆரம்ப குருவாக அவரையே கொண்டு நடிக்கத் தொடங்கினேன்.

கேள்வி : முதிர்ந்த கருத்துக்களை உதிர்த்து வரும் உங்கள் அறிவு நிலைக்கு முரணாகக் குழந்தை என்று அழைக்கப்படக் காரணம் என்ன?

பதில் : பெற்றோருக்கு எனக்குப்பின் குழந்தைகள் இல்லை. எனவே பிறவிப் பயனாகவே குழந்தை என்ற பெயர் பெற்றேன். வீட்டிலும் வெளியிலும் குழந்தை என்றே அழைக்கபட்டேன். "கூடி விளையாடு பாப்பா" என்ற சிறுவர் நாடகத்தை எழுதிய போது நண்பர் தாசீசியஸ் குழந்தையைப் புனைபெயராக்கி விட்டார். அது புனைபெயரானதும் நானும் உயர்ந்து விட்டேன்.

கேள்வி : உங்களால் கையாளப்பட்டுவரும், உங்களுக்குப் புகழ் சேர்த்த நவீன நாடகம் பற்றிக் கூறுங்கள்?

பதில் : இந்த நாடகம் இன்று நேற்றுப் பிறந்தது அல்ல. இது 19ஆம் நூற்றாண்டின் நவீன முறைகளில் ஒன்று. 19ஆம் நூற்றாண்டு வரலாறு, கலைகளில் புதுமை படைத்தது. இந்த நவீனத்துவத்தையே நானும் உள் வாங்கியிருக்கிறேன். பேராசிரியர் கா.சிவத்தம்பி தனது நூல் ஒன்றில் எனது நாடகங்களில் கிரேக்க நாடக அவலச் சுவை, ஏனைய நாடகப் பண்புகள், கூத்துக்களின் பண்புகள், "பேட்டோல் பிறக்ட்" என்பவரின் தூரப்படுத்தல் எனும் நோக்கு என்பவை காணப்படுகின்றன எனக் கூறியுள்ளார். எனவே இந்த நாடக முறையானது நவீனமான தொன்றல்ல. முந்தைய நாடகமுறையிற் சிறிய மாற்றமே. எழுதத் தொடங்கும் போது வடிவங்கள் எழுந்தன. இதற்கு உலக வரலாறும் அரங்கு பற்றிய அறிவும் உதவின. நாடகத்தின் உள்ளடக்கத்திற்கு ஏற்ற மாதிரி அதன் உருவம் அமைந்து விடுகிறது.

கேள்வி : நாடக எழுத்துரு ஒன்று கொண்டிருக்க வேண்டிய சிறப்பம்சங்கள் எவை?

பதில் : நாடகம் எழுதப்படுவது நடிப்பதற்காகவே தவிரப் படிப்பதற்காக அல்ல என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் எழுத முற்படும் நாடகம் எந்த வகையைச் சேர்ந்ததாக இருக்கப் போகிறது என்பதைப் பொறுத்து நாம் அழுத்தம் கொடுக்க வேண்டிய அம்சங்கள் அமையும். அவலச்சுவைக்குரிய நாடகமாயின் உரையாடல் கனதியாகவும் கவித்துவப் பண்புடையதாகவும் ஆறுதலான லயத்தில் ஆழமாகப் பேசப்படத் துணை புரிவதாகவும் அமையும். மகிழ் நெறிப் பண்புடையதாயின் மெல்லிய தொனியும், சாயலும் நகைச்சுவையும் அங்கதமும் விரவி நிற்பதாக அமையும். நாடகத்தின் மோடியைப் பொறுத்தும் எழுத்துருவில் விடயங்கள் அழுத்தம் பெறும். பொதுவாக நல்ல

எழுத்துருவில் சொற்செட்டோடு கூடிய உரையாடலும், கதையையும் கருத்தையும் விளக்கும் நிகழ்வுகளும் காட்சிப்படுத்தலுக்கும் வியாக்கியானத்துக்கும் உதவும் வாய்ப்புகளும் பார்வையாளரைச் சுண்டிக் கவரக்கூடியதான அனைத்தும் ஒவ்வொரு கணமும் கிடைக்கப் பெற வேண்டும். கதை, கட்டமைப்பு, சூழ்வு, மோதல், முரண்பாடு, பாத்திரப்பண்பு, பெருங்காட்சித்தன்மை அனைத்தும் அளவோடு இடம் பெற வேண்டும்.

கேள்வி : சிறுவர்களுக்கான நாடகங்கள் எழுதும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை எவை?

பதில் : சிறுவர் என்று நாம் யாரைக் கருதுகிறோம் என்பதை முதலில் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். 4 அல்லது 5 வயது முதல் 10 அல்லது 11 வயது வரையுள்ள பிரிவினரை நாம் சிறுவர் எனக் கொண்டு அவர்களுக்கான நாடகம் எவ்வாறு அமையும் என ஆராய்வது பொருத்தமாகும். கருப்பொருளும், கதையும், உரையாடலும், அவர்களின் உள முதிர்வுக்குட் பட்டதாய் அனுபவ எல்லைக்குள் அடங்காததாக இருக்க வேண்டும். அதேவேளை வினோத கற்பனை நிறைந்த கதைகளும் சிறுவர்களால் மிகவும் நயக்கப்படும். ஏனெனில் சிறுவர்கள் வினோதமான கற்பனை நிறைந்தவர்களாக இருப்பதால் அவர்களது கற்பனைக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பதாக நாடகம் இருக்க வேண்டும். அளவுக்கு அதிகமான காத்திரத்தன்மையைக் கொண்டிராது சிறுவர்கள் சுதந்திரமாகவும் மகிழ்வுடனும் பங்கு கொள்ளக்கூடிய விளையாட்டுப் பண்புடனும் சிறுவர் நாடகம் இருத்தல் வேண்டும். ஆடல் பாடல் அதிகம் இருப்பதுடன் உரையாடல் பேச்சு வழக்கில் இருப்பதாகவும். இயல்பாகப் பேசக்கூடியதாகவும் இருக்க வேண்டும். மேடைகளில் எப்போதும் அசைவுகளும் இயக்கங்களும் இடம் பெறக்கூடிய பெருங்காட்சிப் பண்பினை வளர்க்கக் கூடியதாகவும், படிப்பினை வெளிப்படையாக அல்லாமல் உள்ளுறையாகவும் அமைந்ததாகவும் இருக்கவேண்டும்.

> எல்லா மனிதனுக்குள்ளும் கலைஞன் இருக்கிறான். இதனால் கலைஞன் என்று தனியாளைப் புகழ்வதை நான் விரும்பவில்லை. கலைஞன், அரசியல்வாதி பத்திரிகையாளன் யாராக இருந்தாலும் எதைப்பேசுவது எப்படிப் பேசுவது என்பதுதான் முக்கியம். எனவே இவர்கள் சமூகப் பொறுப்புடையவர்களாக இருப்பது முக்கியம்.

கேள்வி: நீங்கள் தற்போது இராமநாடகக் கீர்த்தனையை இசை நாடகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது. கீர்த்தனை என்னும் மரபுசார் வடிவத்தை நவீனமாக்கும் முயற்சியில் எதிர் கொண்டுள்ள சவால்கள் எவை?

பதில்:அருணாசலக் கவிராசரின் இராம நாடகக் கீர்த்தனை கதாப்பிரசங்க மரபில் உள்ளது. முன்னர் கர்நாடக வித்துவான்களால் இதில் உள்ள பாடல்கள் சபைகளிற் பாடப்பட்டன. இப்போது அந்த நிலை இல்லாததால் மக்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்று நினைத்தோம். இதை நாடகமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை இசையமைப்பாளர் றொபேட் முன்வைத்தார். இசை நாடகத்தின் வடிவத்துள் வராத இரமநாடகக் கீர்த்தனையில் 15,16 பாத்திரங்கள் வருகின்றன. அவ்வளவு நடிகர்களைத் தேடுவது கடினம். எங்களிடம் 7,8 பேர்தான் இருக்கின்றனர். இங்கு இடம்பெறும் கதையை எவ்வாறு நகர்த்துவது என்று சிந்தித்த போது இராம நாடகக் கீர்த்தனையில் இடம்பெறும் "கட்டியம் வசனம்" என்ற சொற்றொடர் எனக்கு வழிகாட்டியது. கட்டியங்காரனைக் கொண்டே கதையை நகர்த்த முயன்றுள்ளேன். கவிக் கூற்றாக வரும் விடயங்களைப் பாத்திரக் கூற்றுக்களாக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. நான் சுருக்கித் தொகுத்தவற்றுள்ளே 58 கீர்த்தனைகள் வருகின்றன. இதற்குமேல் சுருக்கவும் முடியாது. ஒரு கீர்த்தனை பாடவே 3 அல்லது 4 நிமிடங்கள் தேவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்நாடகம் முழுக்க முழுக்க அருணாசலக் கவிராசரின் நாடகமாக வரவேண்டும் என்பதே எனது நோக்கம். பாத்திரக் கூற்றுக்கள், கட்டியங்காரன் கூற்று அப்படியே தரப்பட்டுள்ளன. பாடல்கள் தேவை, நாடக உத்தி கருதி முன்பின்னாக வருவதே நான் செய்த மாற்றம். இதன் மெட்டுக்கள், ராகங்கள் இசை அமைப்பாளர் றொபேட்டைப் பொறுத்தவை. அவர் பல மாற்றங்களைச் செய்துள்ளார்.

கேள்வி : இளம் கலைஞர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் சேதி என்ன?

பதில் : எல்லா மனிதனுக்குள்ளும் கலைஞன் இருக்கிறான். இதனால் கலைஞன் என்று

தனியாளைப் புகழ்வதை நான் விரும்பவில்லை. கலைஞன், அரசியல்வாதி பத்திரிகையாளன் யாராக இருந்தாலும் எதைப்பேசுவது எப்படிப் பேசுவது என்பதுதான் முக்கியம். எனவே இவர்கள் சமூகப் பொறுப்புடையவர்களாக இருப்பது முக்கியம். ஒரு செய்தியை வழங்கும் போது இதைச் சொல்லலாமா? என்று சிந்திக்க வேண்டும். அண்மைக் காலங்களில் தவறான பாலியல் உறவுகள் பற்றிய செய்திகள் முக்கியம் கொடுக்கப் பட்டு மிகைப்படுத்தப் பட்டு வெளியிடப்படு கின்றன. நடந்து முடிந்த சம்பவங்களுக்கு முக்கியம் கொடுக்கும் போது இனி நடக்கப் போகும் விளைவு களையும் கவனத்தில் எடுக்க வேண்டும். உதாரணமாகத் தந்தை மகளுடன் தவறான உறவு கொண்டது பற்றிய செய்தியைப் படிக்கின்ற பிள்ளையின் மனதில் எத்தகைய பயம் ஏற்படும். அது குடும்பத்துள் எத்தகைய உளவியற் பிரச்சினையை ஏற்படுத்தும் என்பவற்றையெல்லாம் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கேள்வி : உங்களது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் என்று எதைக் கருதுகிறீர்கள்?

பதில் : நான் 6ஆம் வகுப்புப் படிக்கின்றபோது சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய 3 பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டது. சங்கீதம் படிக்க விரும்பிச் சங்கீத வகுப்புக்குப் போனேன். ஏதாவது பாடலைப் பாடும்படி ஆசிரியர் கேட்டார். நான் "சொற்றுணை வேதியன்" என்ற தேவாரத்தைப் பாடினேன். பாடி முடிப்பதற்குள் "கற்றுணைப் பூட்டி கடலிற் பாய்ச்சினும் உனக்குச் சங்கீதம் வராது" என்று என்னைக் கலைத்து விட்டார் ஆசிரியர். இதன் பாதிப்பு இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நான் சிறிதளவு சங்கீத அறிவைப் பெற்றிருந்தால் எனது நாடகங்களில் அதைப் பயன்படுத்தி யிருக்கலாம். இதன் தொடர்ச்சியாகத் தமிழகத்தைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் A.S. இராமநாதன் தன்னிடம் மிருதங்கம் பழக வரும்படி கேட்டார். சங்கீத ஆசிரியரிடம் பெற்ற அனுபவத்தின் பயத்தால் நான் மறுத்து விட்டேன். எனக்குக் கிடைத்த வாய்ப்புகளைச் சங்கீத ஆசிரியர் 6ஆம் தரத்திலேயே கிள்ளி எறிந்துவிட்டார்.

சித்திரம், சங்கீதம், நடனம் என மாணவர்கள் மாறி மாறிக் கலைக்கப்படுகின்ற வாரோட்டம் இன்று வரை தொடர்கின்றது. எனவே இத்துறை ஆசிரியர்களுக்குச் சொல்ல விரும்புவது உங்களிடம் வருகின்ற மாணவன் சங்கீத வித்துவானாகவோ, நாட்டியக் கலாமணியாகவோ இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்காதீர்கள். குறித்த பாடம் தொடர்பான சாதாரண அறிவை அவர்கள் பெற்றுக் கொண்டாலே வாழ்க்கையில் அவர்களுக்குப் பல வகையில் உதவும் என்பதை மறந்து விடாதீர்கள். இது அவ்வத் துறை சார்ந்த ஆசிரியர் களுக்குச் சமர்ப்பணம்.

சித்திரம், சங்கீதம், நடனம் என மாணவர்கள் மாறி மாறிக் கலைக்கப் படுகின்ற வாரோட்டம் இன்று வரை தொடர்கின்றது. எனவே இத்துறை ஆசிரியர்களுக்குச் சொல்ல விரும்புவது உங்களிடம் வருகின்ற மாணவன் சங்கீத வித்துவானாகவோ, நாட்டியக் கலா மணியாகவோ இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்காதீர்கள். குறித்த பாடம் தொடர்பான சாதாரண அறிவை அவர்கள் பெற்றுக் கொண்டாலே வாழ்க்கையில் அவர்களுக்குப் பல வகையில் உதவும் என்பதை மறந்து விடாதீர்கள்.

## முன்பக்கத் தெருவுமில்லை முத்தமிழ் அரங்குமில்லை

அன்றொரு நாள் கரிய நிறக் கூந்தல் போல்
அமாவாசை அள்ளித் தடவிய கும்மிருட்டு.
ஆச்சி அரிக்கன் விளக்கேற்றி
அயல் வீட்டு அன்னம்மாவிடம்
அரிசி மாவெடுத்து அரித்து வறுத்து
வடைசுட்டு மோதகமும் தானவித்து
முன்பக்கத் தெருவோரம் முப்படையல் தான்படைத்து
முத்தமிழ் அரங்கிலே முந்தி இடம் படித்து
முதல் வரிசை தானெடுத்து
செப்பிய தமிழெல்லாம் இன்றில்லை
இரவிலே நிகழ்வுமில்லை முத்தமிழ் அரங்குமில்லை.
எத்தனை தடவையிலும் ஓடியிடம் பிடிக்க
முன்பக்கத் தெருவும் வேண்டும்.
முத்தமிழ் அரங்கும் வேண்டும்.
தேடியே தமிழ் வளர்க்க
ஓடி நீர் வருவீர் என்றே.
பாடிய ஏட்டை நாங்கள்
பரிசுக்காய் வைத்திருக்கின்றோம்.

கொட்டடி
சி. சிறீதரன்

# தமிழ் மருத்துவமும் ஆரோக்கிய வாழ்வும்

டாக்டர் கந்தையா சோதிதாசன் R.I.M.P (Cey)

## ஆவாரை.



'ஆவாரை பூத்திருக்கச் சாவாரைக் கண்டதுண்டோ?' என்பது எம்மிடையே வழங்கும் ஒரு மருத்துவப் பழமொழி. வீதியோரம் மஞ்சளாகப் பூத்திருக்கும் இதன் அனைத்துப் பகுதியும் சிறந்த பலன் அளிக்கும் மருத்துவ குணம் உடையவை. அதன் வேர், இலைகள், பூ கிளைகள், காய்கள் அனைத்தும் சேர்த்து ஆவாரை பஞ்சகசூரணம் தயாரித்து அதைத் தொடர்ந்து உபயோகித்தால் நீரிழிவு கட்டுப்படுகிறது என்பது தமிழருடைய மருத்துவ அனுபவம். இதன் பூக்களைக் காயவைத்துக் காலையில் ஆவாரம் கசாயம் தேனீரைப்போல தயாரித்து அருந்தலாம். இதுவும் நீரிழிவைக் கட்டுப்படுத்தும். அதிகளவு சிறு நீர் போவதைக் குறைப்பதால், காவிரி நீரையும், கடல் நீரையும் வற்றச் செய்யும் என மருத்துவ நூல்களில் சிறப்பிக்கப் பட்டுள்ளது. நவீன ஆய்வுகளில் ஆவாரை நீரிழிவைக் கட்டுப்படுத்துவது மட்டுமின்றி, ரத்தத்தில் கொலஸ்டிரால் அளவைக் குறைப்பதால் இதயத்தைப் பாதுகாக்கும், ஈமோகுளோபின் அளவு, தரம் ஆகியவற்றை அதிகரிக்கும் என நிரூபித்துள்ளனர்.

மூலிகையின் பெயர் : சீந்தில் கொடி
தாவரப் பெயர் : *TINOPORA CARDIFO*
வேறுபெயர் : அமிர்த வல்லி, சோமவல்லி, சாகாமூலி, சஞ்சீவி, ஆகாசவல்லி

முதிர்ந்த கொடியை நறுக்கி இடித்து நல்ல நீரில் கரைத்து வடிகட்டி அசையாது சிலமணிநேரம் வைத்திருந்து நீரை வடித்துப் பார்க்க அடியில் வெண்ணிற மாவு படிந்திருக்கும். மீண்டும் நீர் விட்டுக் கரைத்து தெளிய வைத்து எடுத்து உலர்த்தி வைக்கப் பளிச்சிடும் வெண்ணிறப் பொடியாயிருக்கும். இதுவே சீந்தில் சர்க்கரை எனப்படும். இது ஓர் கற்ப மருந்தாக செயற்படுகிறது. சீந்தில் சர்க்கரை, கல்லீரல் மண்ணீரல் ஆகியவையை உரம் பெறச் செய்யும். பிற மருந்தின் சேர்க்கையுடன் நீரிழிவிற்கு மருந்தாகிறது. சீந்தில் கொடி, நெற் பொறி வகைக்கு 50கிராம் 1லீட்டர் நீரிலிட்டு 150 மில்லியாக வற்றக் காய்ச்சி காலை, மதியம், மாலையாக 50மி.லி குடித்து வர மேக வெப்பம், தாகம் தீரும். முதிர்ந்த கொடிகளை உலர்த்திப் பொடியாக்கி காலை, மாலை அரைத் தேக்கரண்டி பாலுடன் சாப்பிட்டு வர உடல் உரம் பெறும். பனம் கற்கண்டுடன் சாப்பிட மதுமேகத்தால் தோன்றும் கை, கால், அசதி, மிகுதாகம், உடல் மெலிவு, விரல்களில் சுருக் சுருக்கென்று குத்துதல் ஆகியவை தீரும்.

இது நலவாழ்வை நீட்டிக்கும் காய கற்ப மூலிகை, ரத்த சர்க்கரை அளவை கட்டுப் படுத்துவதும் மட்டுமின்றி நோய் எதிர்ப்பு சத்திக்கு காரணமான *"IMMUNOGLOBIN"* இன் அளவை அதிகப்படுத்துகிறது. கொலஸ்டிராலைக் குறைக்கிறது. மதுமேகநோயால் ஏற்படும் உடல்நிறைக் குறைவைத் தடுக்கிறது.

## பாகல்:

பாகல் இலை, காய், விதைகளில் "தாவர இன்சுலின்" என்ற புரதசத்துள்ளது. சோதனைகளில், இது இன்சுலின் போல் செயல்படுகிறது. இன்சுலின் சார்ந்தது, சாராத இரு வகை நோயாளர்களுக்கும் பயன் படுவதாகவும் கணையத்தில் செயல்பட்டு பீட்டா செல்களை உயிர்ப்பிப்பதாகவும் கண்ட றியப்பட்டுள்ளது. ரத்தத்தில் குளுக்கோஸ் அளவை 50% வரை குறைகிறது.

## வெந்தயம் :

உணவில் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று வெந்தயம். உணவுக்கு ருசியைக் கொடுப்பதோடு, அதில் உள்ள பல்வேறு மருத்துவ குணங்கள் நம்மை நீரிழிவு நோயிலிருந்து பாதுகாக்கின்றன. இரவில் தூங்குவதற்கு முன் ஒரு சிட்டிகை அளவு சுத்தமான வெந்தயத்தை எடுத்து 200மி.லி. அளவு தண்ணீரில் போட்டு மூடி வைத்து விடவும். காலையில் எழுந்தும் வாய் கொப்பளித்த பின் தண்ணீரால் ஊறிய வெந்தயத்தை சாப்பிடுங்கள். வெந்தயத்

தண்ணீரையும் குடியுங்கள். இதில் காணப்படும் "ட்ரைக்கோனெல்லின்" அதிகரித்த ரத்த குளுக்கோஸ் அளவை குறைப்பதோடு, கொலஸ்ரோலையும் 25% அளவைக் குறைக்கிறது. தீமை தரும் கொழுப்பாகிய *LDL*, *VLDL* ஆகியவற்றைக் குறைக்கிறது, நன்மை தரும் HDL–ஐ அதிகரிக்கிறது. எனவே மாரடைப்பு ஏற்படாமல் காக்கிறது. குளுக்கோஸ் உறிஞ்சப்படும் வேகத்தைக் குறைக்கிறது.

**வில்வம் :**

சிவனுக்குரிய மூலிகையாகக் கருதப் படும் வில்வம் அனைத்து நோய்களையும் தடுக்கும் மாமருந்தாக நம் நாட்டில் பயன் படுத்தப்படுகிறது. வில்வ இலையிலிருந்து கிடைக்கும் பொஸ்பேற் நீரிழிவு நோயைக் குறைப்பதோடு, நோயாளர்களின் திசுவுக்கு அதிக பிராணவாயு கிடைக்கச் செய்வதோடு சோர்வடையாமல் காக்கிறது. நோயின் காரணமாக ஏற்படும் இதய ரத்தக்குழாய் அடைப்பை வில்வம் பழம் தடுப்பதாக சோதனை முடிவுகள் தெரிவிக்கின்றன.

**நாவல் :**

நாவல் மரத்தின் பழம், இலை, மரப்பட்டை, விதை என அனைத்துமே மருத்துவகுணம் கொண்டவை. நாவல் கொட்டையில் உள்ள "ஜம்புலின்" என்ற வேதியல் பொருள் இன்சுலினை தேவையான அளவு சுரக்கும் வல்லமை பெற்றது. தேவையான அளவு நாவல் கொட்டையை உலர்த்தி அதன் ஓட்டினை நீக்கி பருப்பினை மட்டுமே தூள் செய்ய வேண்டும். இதில் 5 கிராம் (ஒரு ஸ்பூன்) அளவு காலை, மாலை இரு வேளையும் 48 நாட்கள் (ஒரு மண்டலம்) சாப்பிட்டு வர, நீரிழிவு வியாதி குணமாகும். இவ்வாறு தமிழர் பாரம்பரியமாகப் பயன் படுத்தி வரும் மூலிகைகள் நீரிழிவு நோய்த் தாக்கத்தில் இருந்து விடுதலை பெற உதவுகின்றன.

## மாணவர் கட்டுரைப் போட்டி III

விஞ்ஞான வளர்ச்சியால் மனித சமுதாயத்திற்குக் கிடைத்தது நன்மையா? தீமையா? என்பதனைக் கருப்பொருளைக் கொண்டு 250 சொற்களுக்குக் குறை யாமல் கட்டுரை எழுதுங்கள்.

முதற் பரிசு 500/-

2ஆம் பரிசு 300/-

3ஆம் பரிசு 200/-

முதற்பரிசு பெறும் ஆக்கம் சஞ்சிகையிற் பிரசுரிக்கப்படும்.

முகவரி : த.கணேசமூர்த்தி, தமிழருவி,
இயக்குநர், உதவி ஆசிரியர்,
சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

குறிப்பு : கட்டுரை குறித்த மாணவரின் சொந்த ஆக்கம் எனப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆக்கங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 30.06.2011

# தெள்ளிய சிந்தனைக்கு வள்ளுவர் பெருமானார்

- புலவர் ம. பார்வதிநாதசிவம்



சிந்தனைக்கு ஒருவர் என்று உலகத்தால் போற்றப்படுபவரும் ஏத்தப்படுபவரும் வள்ளுவர் பெருமானே. அவருடைய சிந்தனைகள் எத்தனையோ ஆண்டுகள் கடந்த போதும் இன்னும் எவராலும் மறுக்கப்படவில்லை. மறுக்கப்படப் போவதுமில்லை. ஏனென்றால் அவைகள் உண்மைகள்.

நாடுபற்றி எத்தனையோபேர் விளக்கம் கூறியிருக்கிறார்கள். அழகும் சுருக்கமும் எளிமையும் அமையக் கூறிய பெருமை வள்ளுவர் பெருமானார்க்கே சொந்தமானது. நாட்டைப் பற்றி அவர் கூறும்போது "நாடென்ப நாடா வளத்த" என்கிறார். மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவையாகிய உணவு வளம் முதலாக ஏனைய பல வளங்களுக்கும் இன்னொரு நாட்டை, பிற நாடுகளை எதிர்பாராதிருப்பது நாடென்கிறார். உலகின் பிற நாடுகளை உணவுக்காக நாடாத நாடு கை ஏந்தாத நாடு - அது தான் நாடென்கிறார்.



ஒவ்வொரு நாட்டிற்கும் தன்மானம் வேண்டும். தன்மானம் மிக்க குடும்பத்தலைவன் தன் பிள்ளைகளுக்காக உறவினர் களை நாடி இருக்க மாட்டான். உறவினர்களிடமோ பிறரிடமோ கையேந்த மாட்டான். அப்படிக் கையேந்தினால் அவனுக்கு உதவிய உறவினர்கள் சொல்வதற்கு எல்லாம் தலை ஆட்ட வேண்டி வரும். அவனுடைய தனித்துவம் இல்லாமல் போகும். இது நாட்டிற்கும் மிகவும் பொருந்தும்.

இப்போது எத்தனையோ நாடுகள் உணவுத் தேவைக்குப் பிற நாடுகளை எதிர்பாக்க வேண்டிய நிலையில் இருக் கின்றன. அவை அரசியலில், கல்விக் கொள்கையில் மாற்றங்களை அடைகின்றன. இவை எல்லாவற்றுக்கும் காரணம் திருவள்ளுவர் கூறும் நாடாவளம் அந்த நாடுகளில் இல்லாதிருப்பதே.

கவிதைக்குப் பொருள் அழகு, கற்பனை அழகு, நடை அழகு எனப்பல அழகுகள் தேவைப் பட்டாலும் கருத்தழகே மூலமாக விளங்குகிறது. அது போல நாட்டிற்குப் பல தேவைகள் இருந்தாலும் உணவுக்கு கையேந்தாத பிற நாடுகளை நாடாத வளம் தேவைப்படுகிறது. அதனால் உணவுத் தேவை முதலாகப் பல தேவைகளுக்கும் பிற நாடு களுக்குக் கையேந்தும் நாடு நாடல்ல. இந்தச் சிந்தனையை வள்ளுவர் பெருமானார்

"நாடென்பநாடா வளத்தன நாடல்ல
நாட வளம் தரும்நாடு"

என்றார். இந்தக்கருத்து வள்ளுவர் காலத்துக்கும் பொருந்தும் இக்காலத்துக்கும் பொருந்தும்.

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு" என்கிறார்.

நாடு வளமுடையதாக இருந்தாலும் மக்களிடத்து அரசன் அன்புடையவனாக இருக்க வேண்டும். மக்களும் அரசனில் அன்புடையவராக இருத்தல் வேண்டும். இது முடியாட்சிக்கும் குடியாட்சிக்கும் பொருந்தும். அரசனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு முறையில் குறைபாடு இருந்தால் எல்லாவளமும் இருந்தாலும் பயன்பட மாட்டா.

"பயமின்றே வேந்தமை வில்லாதநாடு" என்கிறார் வள்ளுவர். நாட்டைப் பற்றிய கருத்துக்களைத் தனித்துவமாகக் கூறிய திருவள்ளுவர் பொருள்களைப் பற்றியும் தனித்துவமாகவே கூறுகிறார். திரைகட லோடியும் திரவியம் தேடு என்பது பழமொழி.

நாடு வளமுடையதாக இருந்தாலும் மக்களிடத்து அரசன் அன்புடைய வனாக இருக்க வேண்டும். மக்களும் அரசனில் அன்புடையவராக இருத்தல் வேண்டும். இது முடியாட்சிக்கும் குடியாட்சிக்கும் பொருந்தும். அரசனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு முறையில் குறைபாடு இருந்தால் எல்லாவளமும் இருந்தாலும் பயன்படமாட்டா.

எல்லா நாட்டினரும் எல்லா மொழியினரும் பொருள் தேடும் முயற்சியைப் பாராட்டுகின்றனர். திருவள்ளுவரும் பொருள் தேடும் முயற்சியை ஊக்கு விக்கின்றார். பொருள் தேடியவன் இப்பிறப்பு முழுவதும் பயன்படுத்தும் முகமாக வங்கியிலிட்டு வைக்கிறான். நிலமாக வாங்கியும் வீடாக கட்டியும் விடுகிறான். இவை அனைத்தும் வேண்டியவையே. ஆனால் இப்படியான பொருட்கள் எல்லாம் இறக்கும் போது அவனைத் தொடர்வதில்லை. பிறவியை நம்புகிற திருவள்ளுவர் அடுத்த பிறவிக்கும் இப் பிறப்பிலேயே சேர்க்க முடியும் என்கிறார். இப் பிறப்பில் தேடிய பொருளின் ஒரு பகுதியை மறுபிறப்பிற்கும் கொண்டு செல்ல முடியும் என்கிறார். இக்கருத்தை

"அற்றார் அழி பசிதீர்த்தல் அ∴தொருவன் பெற்றான் பொருள்வைப் புழி" என்கிறார்.

வறியவர்களுடைய வயிற்றில் பொருள் புண்ணியமாக மாறி அடுத்த பிறவிக்கும் தொடரும் என்கிறார். தனது உழைப்பின் ஒருபகுதியைப் பசித்தவனுடைய பசிப்பிணியைத் தீர்க்க அவன் கொடுக்கும் போது அது புண்ணியமாக மாறி விடுகிறது. உடலுக்குச் சேர்க்கும் பொருள் வங்கியில் இருக்கும் பணமாக இருப்பது போல உயிருக்குச் சேர்க்கும் பொருள் பசித்தோனுடைய வயிற்றில் வைப்புநிதியாக இடப்படுகின்றது. எனவே பொருள் பற்றிக் கூறுவதிலும் தெள்ளிய சிந்தையராகிய திருவள்ளுவர் தனித்துவம் உடையவராகவே விளங்குகிறார். திருக்குறள் கற்றுணர்ந்தோர்க்கு இன்பம் பயப்பது. கலங்கரை விளக்கமாக நின்று அறம் என்ற துறை முகத்தை காட்டுவது. அது தமிழ் மொழியில் தோன்றினாலும் கூட உலகிற்கு எல்லாம் பயன்படுவது. வள்ளுவர் தெள்ளிய சிந்தனைக் கருத்துக்கு இன்புறுவதும் பயன் பெறுவதும் நம் தவப்பயனே ஆகும்.

# பொன்மொழிகள்



☆ வாழ்க்கைக்குத் தேவை ஒழுக்கம் அல்ல தடுமாற்றம் இல்லாத கவனம், முழு விழிப்புணர்வு - **சற்குரு யக்கிவாசுதேவ்**

☆ சோம்பல் என்பது உழைப்பதை விடக் களைப்பைத் தரும் - **புத்தர்**

☆ அன்பு செலுத்துங்கள். காலம் குறைவாக இருக்கிறது - **ஓஷோ**

☆ அன்பு கொள்ளாதவர் கடவுளை அறியாதவர். ஏனெனில் அன்பே கடவுள் - **யேசுநாதர்**

☆ பேராசையாலோ பயத்தினாலோ தவறான காரியத்தில் ஈடுபடாதீர் - **மகாவீரர்**

☆ நீ நம்பினாலும், நம்பாமல் விட்டாலும் உனக்குள்ளே தனித்தன்மை கொண்ட பெரும் ஆற்றல் உள்ளது - **சான்றோர்**

☆ உலகைப் பற்றிய அச்சத்தில் தப்பிக் கொள்பவர்கள் தியானத்தைப் பெறமுடியாது. - **ஓஷோ**

☆ உலகிற்கு நீ ஏன் வந்தாய் என்று உணர்ந்தால் உன் வாழ்விற்கு ஓர் அர்த்தம் கிடைக்கும் - **சான்றோர்**

☆ ஆசை ஆழமாக இருந்தால் அதை அடைவதற்கான பாதை தாமாகப் புலப்படும் - **சற்குரு யக்கிவாசுதேவ்**

☆ மகிழ்ச்சியைத் தேடினால் பணம் உன் பின்னே வரும். பணத்தை நீ தேடினால் உன் பின்னால் மகிழ்ச்சி வராது - **சான்றோர்**

☆ எவன் ஒருவன் தனக்குத் தெரியாது என்று நினைக்கும் போதுதான் அதை ஆழமாகத் தேடுகிறான் - **சற்குரு யக்கிவாசுதேவ்**

☆ சிரிக்கத் தெரியாதவனும் சிந்திக்கத் தெரியாதவனும் சிறப்புப் பெறுவதே இல்லை - **தோமஸ்புல்லர்**

☆ கடவுள் என்பது எண்ணங்களை ஒருமுகப் படுத்தும் கருவி - **சற்குரு யக்கிவாசுதேவ்**

☆ குழந்தை உள்ளத்தை இழக்காதவரே பெரிய மனிதன் - **கெபில்**

☆ மற்றவர்களின் துன்பத்தை உணர முடியாதவன், மனிதத் தோற்றமுள்ள விலங்கு - **ஜீவனஸ்**

☆ அனுபவித்து செய்யாமல் பழக்கத்தால் செய்வது அதுவே கெட்ட பழக்கம் - **சற்குரு யக்கிவாசுதேவ்**

☆ பண்பிற்கு எப்போதும் பரிசு உண்டு - **ஹெர்பர்ட் போர்டர்**

☆ இறுதிக் காலத்தில் எந்தப் பொருளை நினைத்தவாறு ஒருவன் உடம்பை விடுகிறானோ அவன் அந்தப் பொருளாகவே மாறி விடுகிறான். - **கீதை 8.6**

☆ இறப்பு, பிறப்பு இடையில் ஒன்றைத்தான் செய்ய முடியும். அது தான் நேசம் - **சற்குரு யக்கிவாசுதேவ்**

☆ உனக்கு வேண்டாததை மற்றவர்களுக்குச் செய்யாதே இது தான் நேசம் - **ஓஷா**

☆ கனவு நனவாக வேண்டும் என்றால் மிகச்சிறிய சந்தர்ப்பத்தைக் கூட பயன்படுத்தத் தெரிய வேண்டும் - **சற்குரு யக்கிவாசுதேவ்**

☆ அன்பு மலராமல் போவதற்கு வாய்ப்பு இருந்தால் தான் பயம் வருகிறது - **சற்குரு யக்கிவாசுதேவ்**

# செவ்வியல் தமிழிலக்கியத்தில் பெண்மை - 3



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
முன்னைநாள் ஆய்வாளர்,
கக்சுயின் பல்கலைக்கழகம்
ஜப்பான்.

செவ்வியல் தமிழிலக்கியங்களில் ஈரடியால் கருத்துக்களை எடுத்துரைப்பது திருக்குறளாகும். குறள் வெண்பா அமைப்பிலே நூலாக்கப்பட்டமையால் "திருக்குறள்" என்ற சிறப்புப் பெயரையும் இந்நூல் பெற்றது. மனித வாழ்வியலின் மாண்புகளைக் கூறும் திருக்குறள், பெண்மையைப் பேசும்போது சில கருத்துக்களை வரையறை செய்து கூற முயன்றுள்ளது. அதிலும் சிறப்பாக ஆணும் பெண்ணும் இணைந்து நடத்துகின்ற குடும்ப வாழ்க்கை பற்றிய தெளிவான கருத்துக்களைக் கூறியுள்ளது.

"குடும்பம் என்பது ஆண் பெண்ணாகிய குடியானவர் மக்கட் பயிர் விதைத்து வளர்க்கும் மனைவயல்" என வ. சுப. மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். பெண், குழந்தையைப் பெற்று வளர்க்கும் சிறப்பானதொரு பொறுப்பை ஏற்றிருப்பவள். அதனால் மாண்புடையவளாகத் தனிச்சிறப்புப் பெற்று மிளிர்கிறாள். சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடலொன்று இப் பண்பினைப் பதிவு செய்துள்ளது. பிசிராந்தையார் என்னும் புலவர் நரைத் தோற்றமின்றியிருப்பது கண்ட சிலர் அவர் அவ்வாறு இளமைக் கோலத்துடன் இருப்பதற்கான காரணத்தைக் கேட்டனர். அவர் அதற்குக் கூறிய காரணங்கள் வருமாறு,

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கு ஆகியர்என வினவுதிர் ஆயின்
மாண்டஎன மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர்என் இளையாரும்
அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"
(புறநானூறு 191)

புலவர் முதற்காரணமாகத் தன்னுடைய மனைவியின் மாட்சிமையானதொரு குணவியல்பைக் கூறுகிறார். மக்களுடைய அறிவுநிலை, ஏவலர்பணிநிலை, அரசனின் அறம் பொருந்திய ஆட்சிநிலை, ஊரில் வாழும் சான்றோர்நிலை என்பவற்றைப்பிற காரணங்களாகக் கூறியுள்ளார்.

வள்ளுவர் 'மாண்ட என் மனைவி' என்ற புலவருடைய தொடர் குறித்த ஆழமான பொருளைப் பெண்மையின் சிறப்பியல்பாகக் கண்டார். அதனையே தனது குறளில் 'மனைத்தக்க மாண்பு' என வரையறை செய்துள்ளார். 'மனைமாட்சி' எனப் பெண்ணின் சிறப்புக் குணமாகவும் எடுத்தியம்பியுள்ளார். அவருடைய பெண்மை பற்றிய இத்தகைய சிறப்பியல்பு மிகவும் இன்றியமையாத குணவியல்பு என விளக்கியுள்ளார்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல் ஆயின் வாழ்க்கை
எனை மாட்சித்து ஆயினும் இல்"

எனப் பெண்ணின் மாண்பைத் தனித்துவமான குணவியல்பாகச் சுட்டியுள்ளார். எனவே இத்தகைய சிறப்புப் பெண்ணிடம் இல்லா விட்டால் வாழ்க்கையில் எவ்விதமான சிறப்பும் அமையாது என விளக்குகிறார்.

"இல்லதுஎன் இல்லவள் மாண்பானால் உள்ளது என்
இல்லவள் மாணாக் கடை"

நல்ல குணமுடைய மனைவி ஒருவனுக்குக் கிடைக்கும் போது வாழ்க்கையில் அவனுக்கு எல்லாச் செல்வங்களும் கிடைக்கும். அவளுடைய மாண்பு அவனுடைய வாழ்க்கைக்குப் பெரிய பாதுகாப்பாக இருக்கும். அவன் எவ்வித கவலையும் இல்லாத மனிதனாக வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் நன்கு அனுபவிப்பான். இதுவே வள்ளுவர் தரும் விளக்கம்.

நல்ல மனைவி அமையாத ஒருவனுடைய வாழ்க்கை அவலமாக இருக்கும். இல்வாழ்க்கைக் குரிய கடமைகளை அவனால் முழுமையாகச் செய்யமுடியாது. குடும்ப வாழ்க்கைக்குச் செல்வம் மட்டும் போதாது. 'மனைவி' என்ற பெயருக்கேற்ப பெண்ணின் தலைமைத்துவம் பெண்ணுக்கு இன்றியமையாதது. சங்கப் புலவருடைய அனுபவக் கூற்றை வள்ளுவர் குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு பண்புநலனாக விளக்கியுள்ளார். 'மாண்பு' என்ற சிறப்பான குணம் பெண்ணுக்கு இருப்பதால் தான் ஆண் சிறப்பான இல்லறம் செய்ய முடியும். இதனாலேயே எந்த நல்ல செயற்பாட்டையும் ஆண் மேற்கொள்ளும்போது மனைவியுடன் இணைந்துதான் செய்யவேண்டும் என்ற மரபும் தோன்றியுள்ளது. ஆணின் அக வாழ்க்கையும் புறவாழ்க்கையும் செம்மையாகவும் சிறப்பாகவும் நடைபெறுவதற்குப் பெண்ணின் மாண்பு தான் துணையாக உள்ளது. வாழ்க்கைத்துணைநலம் என்னும் அதிகாரத்திலே பெண்ணின் சிறப்பான குண இயல்புகளை விளக்க வந்த வள்ளுவர் 'மனைத்தக்க மாண்பு', 'மனைமாட்சி' என இரு தொடர்களால் சிறப்பித்துக் கூறும் குணவியல்பு உலகத்து வாழும் எல்லாப் பெண்களுக்கும் இன்றியமையாதது. ஆணின்

வாழ்க்கைத் துணை நல்மாக வாழும் பெண் மாண்புடையவளாக இருப்பதால்தான் உலகம் இன்றுவரையும் இயங்குகிறது.

மேலும் வள்ளுவர் இல்லது, உள்ளது என இரண்டு சொற்களால் குறிப்பிடும் பெண்ணின் குணநலம் இங்கு நோக்கத்தக்கது. இருப்பது, இல்லாதது என இன்றைய வழக்கிலே பயன்படும் இரு சொற்கள் இப்பண்பைக் குறிப்பன. பெண்ணிடம் இருக்கும் மாண்பு, அவளிடம் இல்லாத மாண்பு என்பதையே இல்லது, உள்ளது என்ற இரண்டு சொற்களும் குறிப்பிடுகின்றன.

'மாண்பு' என்ற சொல் இன்றைய வழக்கிலே பெருஞ்சிறப்பு என்ற பொருளில் பயன்படுத்தப் படுகிறது. தலைமைத்துவமுடையவருக்கு அடை மொழியாகப் பேசப்படுகிறது. ஆனால் வள்ளுவர் இல்லறத்தைத் திறம்பட நிர்வகிக்கும் மனைவிக்கு இச்சிறந்த குணப்பண்பு இருக்கவேண்டும் என வரையறை செய்துள்ளார். இல்லத்தில் இருக்கும் கணவன், குழந்தைகள், பெற்றோர், உற்றார் என அனைவரையும் பேணுகின்ற பெருங்கடமை இல்லாளுக்குரியது. இல்லத்தின் தலைவனாக இன்று கணவனே கருதப்படுகிறான். ஆனால் வீட்டுக் கடமைகள் அனைத்திற்கும் மனைவியே பொறுப்பாக இருக்கிறாள்.

இல்வாழ்க்கைக்கு வேண்டியது இல்லாளுடைய மாட்சியே என வள்ளுவர் வரையறை செய்யும் பண்பு வேறெந்த நூல்களிலும் விதந்து கூறப்படாத விடயமாகும். குறளுக்கு உரை செய்யும் உரை யாசிரியரும் இதனைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இல் வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே.1 பிற அல்ல" இக்குறளில் வள்ளுவர் இரு வினாக்களை எழுப்பித் தன் கருத்தை முன்வைக் கிறார். வள்ளுவர் கையாளும் இலக்கிய உத்திகளில் இதுவும் ஒன்றாகும். அவ் வினாக்களை உரையாசிரியர் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. மனைவி நற்குணம் நற்செய்கை உடையவளானால் வாழ்க்கையில் இல்லாதது என்ன?
2. நற்பண்பு இல்லாதவளானால் வாழ்க்கையில் இருப்பது என்ன?

இவ்வினாக்களின் மூலம் உலகத்துக் குடும்பத் தலைவிகளை இரண்டாகப் பகுத்துக் காட்டியுள்ளார். நற்பண்புடையவள், நற்பண்பு இல்லாதவள் என இருவகைப்பட்ட குடும்பத்தலைவிகளை இனங்காட்டு கிறார். இல்வாழ்க்கையை மேற்கொள்ளும் ஆண் ஒருவனுக்கு வழிகாட்டுகிறார். இல்லறத்தைச் செவ்வனே செய்வதற்கு ஆணுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத்துணை இன்றியமையாதது. பொருத்த மான இல்லாளைத் தேர்ந்தெடுக்கும் போது பொருட் செல்வத்திற்கே பலர் முதலிடம் கொடுக்கின்றனர். பொருட்செல்வம் எல்லாவற்றையும் பெறுவதற்கு உதவும் என்ற நம்பிக்கை ஆண்களிடையே இன்று ஆழமாக ஊறியுள்ளது. அதனால் திருமணம் செய்யும் போது பெண்ணிடம் பெருந்தொகையான பணத்தையே எதிர்பார்க்கும் மரபு ஒன்று தோன்றியுள்ளது. 'சீதனம்' என்ற பெயரில் வீடு, நகை, பணம், காணி என்பவற்றைப் பெண் ஆணுக்குக் கொடுக்க வேண்டும் என்ற வழக்கமும் தொடர்கிறது. ஆனால் வள்ளுவர் பெண்ணிடம் மாட்சி இருப்பின் இவையெல்லா வற்றையும் பெறமுடியும் எனக் கருதுகிறார்.

'இல்' என்ற சொல் மூலம் வாழ்க்கையில் எதையும் பெறமுடியாது என வள்ளுவர் அழுத்திக் கூறமுற்பட்டுள்ளார். பயன்படாத நிலையையே இல் என விளக்கியுள்ளார். 'இல்லது' என்ற சொல் பெண்ணிடம் உள்ள எல்லாத் தீயகுணப்பண்பு களையும் குறித்து நிற்கிறது. பெண்மையின் குணப் பண்பை வள்ளுவர் இவ்வாறு தெளிவுபடுத்த வேண்டிய தேவை என்ற கேள்வியும் இங்கு எழுவதற்கு இடமுண்டு.

குடும்பம் சமூகத்தின் ஓர் அங்கமாகும். எனவே குடும்ப வாழ்க்கையின் சிறப்பே சமூகத்தின் சிறப்புக்கும் காரணமாக அமைகிறது. எனவே குடும்பம் சிதையாமல் சிறப்பாக இருப்பதற்கு உரிய வழிகளைப் பற்றிய சிந்தனை வள்ளுவர் உள்ளத்தில் எழுந் துள்ளது. குடும்பத்தில் இணையும் ஆண்மையையும் பெண்மையையும் பற்றிய தெளிவை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாதது என எண்ணினார். வள்ளுவருடைய பட்டறிவும் இச் சிந்தனையைத் தெளிவுபடுத்தியது. பெண்ணோடு இணைந்து வாழும் வாழ்க்கை ஆணுக்கு இரு தடவை கிடைக்கிறது. ஒன்று தாய்மை நிலையில் தாயுடன் வாழும் வாழ்வு. மற்றது வாழ்க்கைத்துணை என்ற நிலையில் இல்லாளுடன் வாழும் வாழ்வு. இந்த இரு வாழ்க்கையில் தாயுடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வாழ்வு நடக்கும். ஆனால் இல்லாளுடன் இறப்பு வரை வாழ்வு நடக்கும். இளமை முதல் முதுமை வரை தொடரும் இல்வாழ்வு ஒரு சிறப்பான வாழ்வு. எனவே வாழ்வு முழுவதும் ஆண் பெண்மை யுடன் வாழ நேர்ந்துள்ளது. துறவுபூணும் ஆண் இதற்கு விதிவிலக்கானவன். ஆனால் உலகநடை முறையில் குடும்ப வாழ்வு எல்லோருக்கும் உரிய சிறப்பான வாழ்வாகும். எனவே ஆண் தனது வாழ்க்கைத் துணையைத் தேடும்போது பிற செல்வங்களைப் பற்றிச் சிந்தியாமல் மாட்சிபுடைய பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொள்ள வேண்டும் என வள்ளுவர் வழிகாட்டியுள்ளார். இக்கருத்து இக்காலத்து ஆண்களுக்கு வழிகாட்டுவதாகும்.

# மாதம் ஓர் இளம் எழுத்தாளர் அறிமுகம்



வளர்ந்துவரும் எழுத்தாளர்களை மாணவப் பருவத்திலேயே இனங்கண்டு ஊக்குவிக்கத் தமிழருவி விரும்புகின்றது. இவ்வகையில் சிறுகதை அல்லது கவிதை எழுதும் மாணவர்களுள் திறமையான ஒருவரது முழுப்பெயர், பிறந்த திகதி, இடம், பெற்ற விருதுகள், எழுதிய ஆக்கங்களின் எண்ணிக்கை என்பவற்றுடன் புகைப்படம் ஒன்றையும், அவரது ஆக்கங்களுட் சிறந்ததெனக் கருதும் ஆக்கத்தையும் அனுப்பிவைத்தால் பிரசுரிப்பதற்குத் தமிழருவி தயாராக உள்ளது. ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**த.கணேசமூர்த்தி, தமிழருவி,**
**இயக்குநர், உதவி ஆசிரியர்,**
**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

**எழுத்தாளர் - 3**



இணுவில் மத்திய கல்லூரி மாணவியான **செல்வி. வானதி விஸ்வநாதன்** 24.12.1991 இல் இணுவிலில் பிறந்தவர். கவிதை, சிறுகதை எழுதுதல், இசை நாடகம், நாட்டிய நாடகம், சமூகநாடகம், சிந்து நடைக்கூத்து, தனி நடனம், விவாதம் எனப் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் பரிசில் களைப் பெற்றுள்ளார்.

கடந்தகாலத் தமிழ்மொழித் தினப் போட்டி களில் இவர் பங்கேற்றிய இசைநாடகம் மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தையும் நாட்டியநாடகம் மாகாண மட்டத்தில் 2ஆம் இடத்தினையும் விவாதம் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிறுகதைப் போட்டியில் கோட்டமட்டத்தில் 1ஆம் இடத்தினையும் பெற்றுள்ளார்.

இவர் கலைசார்ந்தபல்வேறுதுறைகளில் ஈடுபட்டபோதும் கவிதைத் துறையையே தனக்கான சிறப்பான துறையாகத் தெரிவு செய்துள்ளார். தேசிய நூலகவாரம் தொடர்பானகவிதைப் போட்டிகளிலும் மாநகரசபையால் நடத்தப்பட்ட போட்டிகளிலும் மாவட்ட மட்டத்தில் முறையே 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற இவர் தமிழ்த் தினக்கவிதைப் போட்டியில் வலயமட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். பல்கலைக்கழகப் பேராசிரியராக வருவதே தமது எதிர் கால இலட்சியம் என்னும் இவரது மூன்றுகவிதைகள் இங்குதரப்படுகின்றன.

## நீ அறிவிலிஅல்ல

அறிவுயர்ந்தால் அனைத்திலுமே
சிறந்திடலாம் வெற்றியுடன்
அறிவிலியென்று உன்னை
அகிலத்தோர் சொல்லிவிட்டால்
குறைநினைத்தல் குற்றமன்றோ
குனிந்ததலைநிமிர்ந்திடுமே
அறிவிலினென்றோரை
அதிர்ச்சியில் ஆழ்த்திவிட
எத்தனையோபுத்தகங்கள்
எங்களின் மத்தியிலே
அத்தனையும் புதுமையுள்ள
புத்தகங்கள் தானன்றோ
சித்தமெல்லாம் மலர்ந்திடவே
சிறப்புறநீபடித்தால்
எத்திக்கும் சென்றிடலாம்
எவரையும் வென்றிடலாம்
சுத்தமான கருத்துக்களை
சுவைத்துநீமனதிலிட்டு
மொத்தமாகப் படித்துவிடுஅறிவுச்
சித்தனாகமாறிவிடு.

## நாடுவோம் நூலகத்தை

1. நாலுவிடயம் தெரியவேண்டுமா
நன்மைபலபெறவேண்டுமா
நாடு உன்னைப் போற்றவேண்டுமா
நாடிவிடு நூலகத்தைநீயும்.


2. பத்திரிகைவாயிலாய் நாளும்
பலவிடயம் அறிகிறோம்
பத்திரிகையைப் பார்வையிட
நூலகத்தையே நாடுகிறோம்.

3. வேதனைகளைத் தகர்த்துவிட்டு
போதனைகளைகேட்டுவிட்டு
சாதனைகள் படைத்துநீயும்
சாதிப்பவனாய் வாழவேண்டும்.

4. நூலகத்தின் பயனறிந்து
நுட்பமாகக் கற்றுவிட்டால்
ஞாலமெலாம் உனைப் போற்றும்
நல்லவனாய் மாறிடுவாய்.

5. இதிகாசக் கதையுமுண்டு
பலபுராணக் கதையும் உண்டு
அரவணைத்துக் காத்துவிட்டால்
அடுத்தவர்க்குபயனுமுண்டு.

6. நூலகத்தின் ஊடாகநாம்
நுட்பமானவிடயம் பலஅறிந்து
தரம் மிக்க தகவல்களைப் பெற்று
தகவல் உலகை அறிந்திடுவோம்.




வேற ஒன்னுமில்ல மாம்...! அவனுக்கு டூர் முக்கியம்.
ஜெக்கு பிரெஞ்ச், ஹிந்தி கிளாஸ் முக்கியம்.
அதான் டியூசன் மிஸ்ஸையும் கூடவே கூட்டிக்கிட்டோம்.

## சிறுவர் முன்னேற்றம்

யுத்தத்தை மிதித்தழித்து
எத்திக்கும் புகழ் பரப்ப
நிமிர்ந்துநிற்கும் தேசந்தன்னை
வளர்த்திடுவோம் வந்துசேரீர்.

துன்பத்தின் விளிம்பினிலே
துயருற்றமக்களுக்கு
இன்பத்தைச் சேர்த்திடவே
அன்புடனேவந்துசேரீர்.

சிந்தனைகள் சிதறுண்டு
எம்தனையேநாடிநிற்கும்
சந்ததியாம் சிறுவர்களின்
குந்தகத்தை அழித்திடுவோம்.

அந்தரத்தில் அலைபாய்ந்து
அழிவிற்குப் போகாமல்
சிந்தனையைத் தூண்டிவிட்டு
சிறப்புறவே வாழவைப்போம்.

வறுமையால் வாடிநின்று
வாழ்வுதேடும் சிறுவர்களை
வளம்பெற வைத்திடுவோம்
வந்திடுவீர் நல் மனமாய்.

சிறுவர்களின் இதயமது
சிதைந்துவிட்டால் தேசத்தின்
நாளையஉதயமது
நலமிழந்துபோய்விடுமே.

கலாசாரசீரழிவை
களைந்தெடுத்துநம் சிறுவர்
நிலாவுக்கு பயணிக்கும்
நினைவதனை தூண்டிடுவோம்.

நாளைய தலைவர்கள்
நம்முடைய சிறுவர்கள்
நலமுடனே வாழவைக்கும்
நல்வழியைக் காட்டிடுவோம்.

வெற்றி பெற்ற தேசத்தினை
வெறுமையற்ற தேசமாக்கும்
வித்தகராம் சிறுவர்களின்
வினைத் திறனைத் தூண்டிடுவோம்.

எழுதுங்கள்! வெல்லுங்கள்!

## மாதாந்த கவிதைப் போட்டி இல - 3

மாணவர்களின் கவிதை எழுதும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மாதாந்தம் கவிதைப் போட்டி நடத்தப்படுகின்றது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவருக்கு முறையே 500/-, 300/-, 200/- வழங்கப்படும். தரப்பட்ட கவிதைகளைத் தொடர்ந்து அந்த சந்தத்தில் நான்கு அடிகள் வீதம் கொண்ட மூன்று பாடல்கள் எழுதவேண்டும். இடைவெளி கீழே தரப்பட்டுள்ளது. இந்த ஆக்கம் குறித்த மாணவர்களுடைய தான் என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

த.கணேசமூர்த்தி, தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய இறுதித்திகதி 30.06.2011.

ஆசிரியர்கள்.

## பப்பி நல்ல நாய்க்குட்டி

பப்பி நல்ல நாய்க்குட்டி
பாய்ந்தே ஓடும் நாய்க்குட்டி
எப்போ தும்என் பக்கத்தில்
வந்தே நிற்கும் நாய்க்குட்டி

....................................
....................................
....................................
....................................

* * *

....................................
....................................
....................................
....................................

* * *

....................................
....................................
....................................
....................................



# பயணங்கள் முடிவதில்லை

அந்த விளம்பரப் பலகை பெரிய அளவில் வர்ண எழுத்துக்களில். முச்சக்கர வண்டி நிலையம் அது. அந்த விளம்பர அறிவிப்பில் வண்டியின் வர்ணப்படம் வரையப்பட்டு 'முற்சக்கர வண்டி' என எழுதப்பட்டுள்ளது. இது சரியா? மூன்று சக்கரங்களையுடையதால் காரணப் பெயராக இப்பெயர் இவ்வண்டிக்கு உரிய பெயராயிற்று. தமிழ் இலக்கணப் புணர்ச்சி விதிப்படி நோக்கின் மூன்று + சக்கரம் என்பதன் புணர்ச்சி முற்சக்கரமா? இல்லை முச்சக்கரமா என்பதில் தெளிவு வேண்டுமல்லவா? எண்ணுப் பெயர் புணர்ச்சிக்கென்று நன்னூலார் சிறப்பு விதியே கூறியிருக்கின்றார்.

எண்ணிறை அளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதலெட் டீறாம் எண்ணுள்
முதலீ ரெண்முதல் நீளும் மூன்றாறு)
ஏழ்குறு கும் ஆறு, ஏழ் அல்லவற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்'

என்பதன்படி "மூன்றாறு ஏழ்குறுகும்" அதாவது மூன்றும், ஆறும், ஏழும் முதல் குறுகும் மேலும்,

'மூன்றனுறுப் பழிவும் வந்ததும் ஆகும்.' என்ற சூத்திரப்படி, இறுதி உயிர்மெய்கெட நின்ற மூன்று என்னும் எண்ணினது நகர ஒற்றுக் கெடுதலும், வரும் ஒற்றாகத் திரிதலும் இடம் பெறும். எனவே மூன்று + சக்கரம் என்பதில் முதல் குறுகி 'மூ' என்பது மு என்றாகும். 'று' எனும் இறுதி உயிர்மெய் எழுத்துக்கெடும். நகர ஒற்றுக் கெட்டு, வருமொழி முதல் ஒற்றாகிய சகர ஒற்றாகத் திரி படையும். எனவே புணர்ச்சி யானது மூன்று + சக்கரம் முச்சக்கரம் என்றே அமையும். முச்சக்கரவண்டி என்பதே சரியான சொல். முற்சக்கரவண்டி என்பது தவறு. முன் + சக்கரம் என்பதன் புணர்ச்சியே 'முற்சக்கரம்' என்பதாய் அமையும். நகர ஈறு, வருமொழி முதல் வல்லினம் வரின் நகரமாகத் திரியும் எனும் விதியின் படியாம்.

பேருந்து விரைகிறது. அதைவிட வேகமாக என் மனம் விரைகிறது. மொழி பற்றிய சிந்தனைகளோட..... மொழி ஓர் இனத்தினுடைய அடையாளம் அல்லவா? இனத்தின் இருப்பை வலுப்படுத்துவது மொழி தானே. வனங்களிலே தீயை உண்டாக்கி, புகையை எழுப்பி, அதன் மூலம் தனது தொடர்பாடலை மேற்கொண்டான் ஆதி மனிதன். தொடர்ந்து, கூக்குரல், சைகை முதலானவைகள். குறிப்பிட்ட வளர்ச்சியின் பின்னர், மொழிப் பயன்பாடு உருவானது. வளரும் மொழி தனக்கென்றோர் இலக்கிய இருப்பையும் ஏற்படுத்திக் கொள்கின்றது. அத்தகைய வளர்ச்சியும் இருப்பும் உடையது நம் தமிழ் மொழி. அந்தச் சிறப்பை நாம் தொடர்ந்தும் பேணிக் கொள்ள வேண்டாமா? அதிலும் கல்விச் சமூகம் இதில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டுமல்லவா? தரம் 11 தமிழ்ப் பாடப் புத்தகத்தில் 'நிழலின் நினைவு' எனும் கவிதை அதில் 'வெய்யிலை அஞ்சி' என ஓர் அடி வருகிறது. வெய்யில் என்பது சரியா அல்லது வெயில் என்பது சரியா? இன்னும் தரம் 10 தமிழ்ப் பாட நூலில், தமிழ்மொழி வாழ்த்தே சொற்பிழை, எழுத்துப் பிழைகளுடன் அமைந்திருப்பது வேதனையைத் தருகிறது.

'தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடரத் தமிழ்நாடே என்று நூலில் உள்ளது.

'சுடர்க தமிழ் நாடே' என்பது தானே சரியானது.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து.... என்பது எழுத்துப்பிழையுடன், வனாம் அறிந்த தனைத்தும் அறிந்து... என்று அமைந்துள்ளது. இது அச்சுப் பிழையாகத் தான் அமைந்திருந்தாலும், கவனித்திருக்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமை அல்லவா? பத்திரிகை, தொலைக் காட்சி ஊடகங்கள் யாவுமே இந்த மொழிச் செம்மையைக் கவனிக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளன. ஏனெனில்அவை பொது ஊடகங்கள் அவற்றில் இடம்பெறும் சிறிய தவறுகூட 'உள்ளங்கை நெல்லிக்கனி' ஆகிவிடும். 11.02.2011 யாழ்ப்பாணம் பத்திரிகைச் செய்தி ஒன்றில் மின்தடை பற்றிய அறிவித்தல். அதில் சில இடங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவை நீங்களாக எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அவை நீங்கலாக என்று வர வேண்டியது ல, ள பேதம் இன்றி அமைந்துவிட்டது. 24.02.2011 இன்னொரு பத்திரிகையில் குளிர்பாணம் என்பதற்கு குளிர்பானம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

> **பத்திரிகை, தொலைக்காட்சி ஊடகங்கள் யாவுமே இந்த மொழிச் செம்மையைக் கவனிக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளன. ஏனெனில் அவை பொது ஊடகங்கள் அவற்றில் இடம்பெறும் சிறிய தவறுகூட 'உள்ளங்கை நெல்லிக்கனி' ஆகிவிடும்.**

விரையும் பேருந்தின் யன்னலூடாக இளங்காற்று மேனியைச் சில்லிட வைக்கிறது. கண்களை இமைச் சிறகுள் அடைகாத்துக் கொள்கின்றன. மூடிய கண்களில் அந்தத் தொலைக்காட்சி விளம்பரம் தெளிவாகத் தென்பட, விளம்பர வார்த்தைகள் காதுகளுக்குள் மெதுவாக ஊடுருவுகின்றன. ஏன் இப்படி? (பயணம் தொடரும்....)

**கைதடியூர், பாரதி**

# விவசாயமும் நாமும் நேற்று இன்று நாளை

பூமதி யோகநாதன்
விவசாயப் போதனாசிரியர்



நோய் அற்ற வாழ்வுக்கு போசாக்கு நிறைந்த உணவுகளைச் சாப்பிட வேண்டும். போசாக்கான உணவும் நஞ்சற்ற (விவசாய இரசாயன கலப்பற்றதாக) தூய்மை யானதாக நம்பிக்கைக் குரியதாக வேண்டும். அப்படி யானால் உங்கள் வீடு, பாடசாலை, அலுவலகம், கோவில், மற்றும் வதிவிடங்கள் போன்றவற்றைச் சுற்றியுள்ள இடத்தை நன்கு திட்டமிட்ட முறையில் வீட்டுத்தோட்டம், பாடசாலைத்தோட்டம், அலுவலகத் தோட்டம், வதிவிடத்தோட்டம் என்பவற்றை



அமைத்துப் பயிர் வகைகளையும் ஆடு, மாடு, கோழி, முயல் போன்ற கால் நடைகளையும் தேனீ வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு, காளான் வளர்ப்புக்களை மேற்கொண்டுஒருங்கிணைந்த பண்ணை ஒன்றை வெற்றிகரமாக முகாமை செய்வதன் மூலம் பின்வரும் நன்மைகளை பெறமுடியும்.

1) குடும்ப அங்கத்தவர்கள் விரும்பும் நஞ்சற்ற தூய்மையான போசாக்கான உணவுகளைப் பெற முடியும்.
2) தேவையான போது உடன் அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியும். (சந்தைக்கு போகும் நேரம் மீதப்படுத்தப்படும், வாடாத போசாக்கு இழப்பில்லாத மரக்கறிகளைப் பெறலாம்)
3) மாதாந்த வருமானத்தில் நாம் 60-70% வீதத்தை உணவிற்காகச் செலவிட வேண்டியுள்ளது. இதனைப் பூரணமாகவோ அல்லது குறிப்பிடத் தக்களவாகவோ குறைக்க முடியும். உதாரணமாக 5பேர் கொண்ட குடும்பத்திற்கு நாள் ஒன்றிற்கு மரக்கறி மட்டும் வாங்க அண்ணளவாக 200/=ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது. ஆகவே மாதம் 6000/=ரூபா தேவைப்படுகிறது. மேலும் பால், முட்டை, மீன், இறைச்சி, பழ வகைகள் கொள்வனவு செய்ய எவ்வளவு தேவைப்படும் என்பதை நீங்களாகவே கணிப்பிட்டு பாருங்கள்.

ஆகவே வீட்டுத்தோட்டத்தில் இருந்து எமக்கு தேவையானவற்றை உற்பத்தி செய்வோமானால் ஆகக் குறைந்தது மாதம் (10000-12000/=) பத்துபன்னிரண்டாயிரம் ரூபா மீதப்படுத்த முடியும். இது வீட்டுத்தோட்டம் பொருளாதார ரீதியாக ஒரு பயனுள்ள திட்டம் என்பதை வலியுறுத்துகின்றது. "நாம் ஊசி போகும் இடத்தைப் பார்க்கின்றோம் உலக்கை போகும் இடத்தைப் பார்க்கவில்லை"

4) அண்மைய வருடங்களாக காலநிலை மாற்றத்தின் காரணமாக கடும் வரட்சி அல்லது கடும் வெள்ளப் பெருக்கு அல்லது கடும் குளிர் காரணமாக உலகில் போகப் பயிர்கள் மூலம் கிடைக்கும் உற்பத்தி பாதிக்கப்படுவதால் உணவுத் தட்டுப்பாடு, பஞ்சம், உணவு விலை யேற்றம் என்பவற்றால் உலகம் உணவுப் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளது. இப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக விஞ்ஞானிகள், அறிஞர்கள் நிரந்தர பல்லாண்டு பயிர்கள் மூலம் உணவுகளைப் பெற்று அதை அன்றாட உணவுத் தேவையில் பயன்படுத்துவதன் மூலம் உணவுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று வலியுறுத்துகிறார்கள். இம் முறை எமது பாரம் பரிய உணவுப் பழக்கவழக்கமென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக இலுப்பைப் பிட்டு, ஒடியல் மா பிட்டு, ஒடியல் கூழ், புழுக் கொடியல் மா, பலாக்காய்க் களி, பலாக்காய் அவித்து சாப்பிடல் பழங்கள், பால் என்பன ஒரு வேளை உணவாகக் கொள்ளல்.



எனவே நாமும் வீட்டுத் தோட்டங்களில் பலா, வாழை, தென்னை, இலுப்பை, மா, ஈரப்பலா, கொய்யா, மாதுளை, விளா, வில்வம், பப்பா போன்ற நிரந்தர பழப் பயிர்களையும் மற்றும் உணவு பெறக்கூடிய பயிர்களையும் தெரிவு செய்து நட்டுப் பராமரித்தால் போகப்பயிரால் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்த்து நிறைவான போசாக்குடன் உணவுப் பிரச்சினையைத் தவிர்க்கலாம்.

மேற்படி நிரந்தரப் பயிர்கள் மூலம் சில பயிர்களில் இருந்து இலுப்பை, தென்னை போன்ற பயிர்களில் இருந்து எமது அன்றாட தேவைக்கான எண்ணை வகைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் மின்சக்தி கிடைக்காத நேரங்களில் இவ்வெண்ணைகளை எரிபொருளாகப் பயன்படுத்தி விளக்கேற்ற முடியும். அத்துடன் அன்றாட சமையலுக்குத் தேவையான விறகையும் பெற முடியும்.

5) நாம் வசிக்கும் வீடு, கடமை புரியும் அலுவலகம், படிக்கும் பாடசாலை இவைகளைச் சுற்றி நன்கு திட்டமிட்ட முறையில் பல்லாண்டுப் பயிர்களான பழப் பயிர்கள் மற்றும் வான் பயிர்கள் மற்றும்பயன் தரு பெரிய மரங்களை நடுவதன் மூலம் எமது சுற்றாடல் குளிர்மையடைகிறது, சுற்றாடலிலுள்ள கரியமில வாயு ($CO_2$) மரங்களால் உறிஞ்சப் பட்டு ஒட்சிசன் வாயு ($O_2$) வெளியிடப்படுவதால் சுற்றாடல் தூய்மைப்படுத்தப்பட்டு மனித ஆரோக்கியம் மேம்படுகிறது.

சுற்றாடலில் மரங்கள் மூலம் அதிகளவு ஒட்சிசன் கிடைப்பதால் வீட்டில் வசிப்போர், அலுவலகத்தில் கடமை புரிவோர், பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எல்லோரும் சுறுசுறுப்படைவதால் தங்கள் தங்கள் கடமைகளை சிறப்பாக செய்யக் கூடியதாய் இருக்கிறது.

**சுற்றாடலில் மரங்கள் மூலம் அதிகளவு ஒட்சிசன் கிடைப்பதால் வீட்டில் வசிப்போர்இ அலுவலகத்தில் கடமை புரிவோர்இ பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எல்லோரும் சுறுசுறுப்படைவதால் தங்கள் தங்கள் கடமைகளை சிறப்பாக செய்யக் கூடியதாய் இருக்கிறது.**

6) நாம் வளர்க்கும் மரங்கள், பயிர்கள் மூலம் பயிர்க் கழிவுகள் கிடைக்கின்றன (பயிர்க் கழிவுகள் இலை, குழைகள்) இவற்றையும் கால் நடைகள் மூலம் கிடைக்கும் கழிவுகளையும் ஒன்று சேர்த்துக் கூட்டெரு தயாரிப்பதன் மூலம் வீட்டுத் தோட்டச் செய்கை, பாடசாலைத் தோட்டச் செய்கை, அலுவலகத் தோட்டச் செய்கைக்குத் தேவையான இயற்கைப் பசளைகள் கிடைக்கின்றன. இதன் காரணமாக நாம் பயிர்ச்செய்கைக்குக் கடையில் பசளைகளை வாங்கத் தேவையில்லை.

7) நாம் அன்றாடம் காலை, மாலை வேளைகளில் ஒரு குறிப் பிட்ட குறுகிய நேரம் அதாவது காலை ஆகக் கூடியது அரை மணி நேரம் மாலை ஆகக் கூடியது அரை மணி நேரம் வீட்டுத் தோட்டத்தில் அல்லது அலுவலகத் தோட்டத்தில் தோட்ட வேலைகளில் ஈடுபடுவதன் மூலம் எமக்கு தேவையான உடற்பயிற்சி, உளப் பயிற்சி, மன அமைதி என்பன போதியளவு கிடைக்கும். இதனால் எமது உடல், உள, மன ஆரோக்கியம் மேம்படுவதால் எம்மை நோய் அணுகாது சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் சுறுசுறுப்பாக இயங்க முடியும்.

தற்போது எமது சமூகத்தைப் பிடித்துள்ள நீரிழிவு நோய், கொலஸ் ரோல் மற்றும் இதயம்சார் நோய்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைதல், இன்னோரன்ன மனிதனைப் பாதிக்கும் நோய்களை வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் தவிர்க்க முடியும் என்பதை சுகாதாரத் துறையினர் வலியுறுத்துகின்றனர்

8) நமது தேசிய உணவு உற்பத்தியை அதிகரிக்கத் தற்போது வர்த்தக ரீதியில் பயிர் செய்கை பண்ணப்படும் நிலங்களை மேலும் அதிகரிக்க வாய்ப்பில்லை. தற்போது உள்ள விவசாய நிலங்கள் வேறு நோக்கங்களுக்குப்

பயன்படுத்தப்பட்டுச் செய்கை விஸ்தீரணம் குறைவடைந்து வருவது அவதானிக்கப் பட்டுள்ளது. எனவே தேசிய உணவுற்பத்தியை அதிகரிக்க உள்ள ஒரே வழி வீட்டுத்தோட்டச் செய்கை மூலம் ஒவ்வொரு வீட்டின் உணவுற் பத்தியையும் அதிகரிப்பதுதான் எனப் புள்ளி விபரங்களும் சுட்டிக்காட்டுகின்றன.

## வீட்டுத் தோட்டத்தைத் திட்டமிடல்

வீட்டுத் தோட்டத்தைத் திட்டமிடும் போது வீட்டுத் தோட்டம் அமைந்துள்ள நிலத்தின் அமைவிடம், தோற்றம், மண்ணின் கூட்டமைப்பு, காலநிலைப் பிரதேசம், நிலப்பரப்பு, கட்டிடங்கள் அவற்றின் அமைவு, குடும்பஅங்கத்தவர்களின் சுவைத் தெரிவு என்பன முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

நகர்ப்புறம், ஓரளவு நகர்ப்புறம், கிராமம் என நாம் வாழும் பிரதேசத்தை வகைப்படுத்தலாம்.

### ❖ நகர்ப்புறம்

இங்கே வீடுகள் நெருக்கமாகவும் பயிர்ச் செய்கைக்கான நிலப்பரப்பு குறைவாகவும் அல்லது முற்றாகக் கிடைக்காமலும் இருக்கலாம். ஆனால் இங்கு வசிக்கும் குடும்பங்களில் பெரும் பகுதியினர் பொருளாதார வசதியுள்ளவர்கள். பெரிய வீட்டைக் கொண்டவர்கள். ஒளிபடக் கூடிய மொட்டை மாடிகள் மற்றும் நன்னீர் வசதிகள் (குழாய் நீர்) வழிகாட்ட லுடன் சிறப்பான வீட்டுத்தோட்டத்தை அமைக்கக் கூடிய வாய்ப்புள்ளவர்களாகக் காணப்படுவர். இவர்களுக்குக் கொள்கலன் பயிர்ச் செய்கை, தெங்கு முறைப்பயிர்ச் செய்கை, மண்ணற்ற பயிர்ச்செய்கை, பயிர் வட்டார முறை மிகவும் பொருத்தமானவை.

### ❖ ஓரளவு நகர்ப்புறம்

இந்த இடத்தில் ஓரளவு வசதி படைத்த நடுத்தரக் குடும்பங்கள் வாழ்வார்கள். வீட்டுத் தோட்டச் செய்கைக்கு வசதியாக ஓரளவு நிலப்பரப்பும் நீர் வசதிகளும் இங்கு காணப்படும். இவர்கள் மூலம் நிலத்திலும், கொள்கலன்கள் மற்றும் பயிக் கூடாரங்கள் (வலை வீடு, பொலிரனல்) போன்ற நுட்பங்கள் மூலம் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கலாம்.

### ❖ கிராமப்புறம்

இங்கே போதியளவு நீர் வசதி, நில வசதியுள்ளது. பெரும்பான்மையானவர்கள் விவசாயி களாகவும் தொழிலாளிகளாகவும் காணப்படுவர். வர்த்தக ரீதியில் இங்கு பயிர்ச் செய்கை மேற்கொள் எப்படுவதால் ஒரு சில தெரிவு செய்யப்பட்ட பணப் பயிர்களே கூடுதலாகத் தனிப் பயிர்களாகப் பயிரிடப்



படுகின்றன. இதன் காரணமாக இவர்களிற் பெரும் பகுதியினர் தமது அன்றாட சமையல் தேவை களுக்கு மரக்கறிகள், பழுங்கள் என்பவற்றைச் சந்தை மூலமாகவே கொள்வனவு செய்வதை அவதானிக்க முடியும்.

ஆனால் இவர்கள் வசிக்கும் வீடுகளில் குடும்பத்திற்குத் தேவையானவற்றை இவர்களது வீட்டைச் சுற்றியுள்ள நிலப்பரப்பில் இருந்தே பெறக்கூடிய வசதிகள் உள்ளன. அத்துடன் மழை காலங்களில் மண்ணைக் குவித்து மேடைகளிலும், கொள்கலன்களில் மண்ணை நிரப்பியும் பயிர் செய்து போகமில்லாத காலங்களிலும் விளைவைப் பெறலாம்.

## வீட்டுத் தோட்டச் செய்கைக்குச் சவாலாக உள்ள இடங்கள்

இவை கடற்கரை அல்லது உவர் நீரேரிக் கரையோரங்களை அண்மித்ததாக உள்ள நன்னீர் வசதியற்றதாகவும் வதிவிடப் பிரதேச மண்ணாகவும் உவர் மண்ணாகவும் காணப்படும்.

அல்லது பயிர்ச் செய்கைக்குப் பொருத்த மில்லாத பள்ள நிலமாகவும், கற்கள் நிறைந்த கலட்டு நிலமாகவும் பாறைகள் உள்ளதாக சதுப்பு நிலங்களாக அதாவது பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமற்றவையாக காணப்படும் இடங்களாகும்.

இவ் வகையான நிலங்களில் வசிப்போர் பயிர்ச் செய்கைக்குகந்த மண்ணை வேறு இடங்களில் இருந்து கொண்டு வந்து பொருத்தமான இடத்தில் குழிகள் வெட்டி நன்மண்ணினை நிரப்பி அல்லது வெற்று உரப்பை, சாடிகளில் மண்ணையும் கூட்டெருவையும் கலந்து நிரப்பி நன்னீரையும் பெற்றுப் பயிர் செய்யலாம்.

நுட்பம் தொடரும்.....



# என்னைக் கவர்ந்த புதுமைப்பித்தனின் சிறுகதை
# கோபால ஐயங்காரின் மனைவி

சிறுகதைக்கு கருத்து, கற்பனை, வடிவம் ஆகிய மூன்றும் பிரதானமானவையென விமர்சகர்கள் குறிப்பிடுவார்கள். புதுமைப்பித்தனின் கதைகள் கற்பனையினாலும் வடிவத்தினாலும் சிறந்து இருப்பதால் கருத்தில் வேறுபாடு கொண்டவர்களினாலும் இரசித்து வாசிக்க முடிகின்றது. அவருடைய கதைகள் நகைச்சுவை, வாழ்வின் ஏற்றத்தாழ்வு, பணம் உடையோர், அல்லாதோர் வாழ்வுகள் கலப்பு மணங்கள் ஆகியவற்றை அழகுறச் சித்திரிக்கும்.

கோபால ஐயங்காரின் மனைவி என்ற சிறுகதை கலெக்டர் வேலை பார்க்கும் கோபால ஐயங்காருக்கும் இடைச்சியாகிய பணிப் பெண்ணிற்கும் நடந்த கலப்பு மணத்தைச் சுவைபடக் கூறுகிறது. இதில் நகைச் சுவையே முதலிடம் பெறுகிறது. தொல்காப்பியரும் நகைச்சுவையை முதலில் கூறுகின்றார். அந்த நகைச்சுவை புதுமைப் பித்தனுக்கு வாய்த்தது போல வேறு யாருக்கும் வாய்க்கவில்லை என்று துணிந்து கூறலாம்.

சிறுகதைக்கு கருத்து, கற்பனை, வடிவம் ஆகிய மூன்றும் பிரதானமானவையென விமர்சகர்கள் குறிப்பிடுவார்கள். புதுமைப் பித்தனின் கதைகள் கற்பனையினாலும் வடிவத்தினாலும் சிறந்து இருப்பதால் கருத்தில் வேறுபாடு கொண்டவர்களினாலும் இரசித்து வாசிக்க முடிகின்றது. அவருடைய கதைகள் நகைச்சுவை, வாழ்வின் ஏற்றத்தாழ்வு, பணம் உடையோர், அல்லாதோர் வாழ்வுகள் கலப்பு மணங்கள் ஆகியவற்றை அழகுறச் சித்திரிக்கும்.

கலப்பு மணமாகிய இவர்களது திருமணம் நகைச்சுவையைப் புலப்படுத்துவதற்கு மிகவும் வாய்ப்பாகப் புதுமைப்பித்தனுக்கு அமைந்துவிட்டது. திருமணமாகிய ஐயங்காருக்குச் சமைத்த அவருடைய மனைவி அவருடைய உணவு முறையை அறியாதபடியால் தங்கள் வீட்டுச் சமையல் போல மாமிச உணவைச் சமைத்து விடுகிறாள். ஊத்தியோகத்தால் வீடு வந்த கலெக்டர் சாப்பிடும் அவசரத்தில் அவருடைய மனைவி மீனாட்சி சமைத்த மீன் உணவை ஒருவாய் சாப்பிட்டு விடுகிறார். அசைவ உணவைச் சாப்பிடும் ஐயங்கார் மாமிச உணவை ஒரு பிடி உண்டதுமே அருவருத்து வாந்தி எடுத்தார். மாமிச உணவை உண்டுவிட்டேன் என்ற நினைப்பினால் ஏற்பட்டது அது. இறுதியில் குமாஸ்தா மூலம் பிராமண ஹோட்டலில் இருந்து உணவைப் பெற்று உண்டார்.

உணவுப் பிரச்சினையை முடித்துக் கொண்ட கோபால ஐயங்கார் தனது இளம் மனைவியை மடியில் இருத்தி அன்பு மழை சொரிந்தார். கலப்பு மணம் புரிந்தவளாகிய மீனாட்சிக்கு அவரில் இருந்த காதலைவிடப் பயம்தான் அதிகமாக இருந்தது. இதை உணர்ந்து கொண்ட கோபால ஐயங்கார் ஒரு கிளாசில் வைனை ஊற்றிக் குடிக்கக் கொடுத்தார். அவள் குடித்தவுடன் அவளிற்கு அது இளைப் பாகவும் சிறிது காரமாகவும் இருந்தது. உடலில் புது உற்சாகம் ஏற்பட்டது. அவளுடைய வாலிபத்தை அவள் குடித்த வைன் தூண்டிவிட்டது. அவள் இப்போது பயம் குறைந்து அவரை முழுமையாகக் காதலிக்கும் வாலிபப் பெண்ணாக மாறிவிட்டாள்.

கோபால ஐயங்கார் சமையலுக்கு 25 ரூபா சம்பளத்தில் ஒரு பிராமணச் சமையல்காரரை நியமித்தார். இதனால் மாமிசமா? சைவமா? என்ற உணவுப் பிரச்சினை இல்லாமல் போய் விட்டது. அவர்களுடைய வாழ்க்கை சந்தோசமாகச் சென்று கொண்டிருந்தது.

மீனாட்சி பிறவியிலேயே மீனும் இறைச்சியும் சாப்பிடுபவள். ஆதலால் பிராமணச் சைவக்காரரின் சைவ உணவு அவளுக்கு வெறுப்பை ஊட்டியது. தான் பிறந்த வீட்டில் தான் சாப்பிட்ட மாமிச உணவை எண்ணி எண்ணி மனம் ஏங்கினாள். மாமிச உணவை இனி விரைவில் உண்ண வேண்டும் என்று நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் கலெக்டர் வீட்டுப் பணியாளன் ஒருவன் வீட்டு வேலைகள் முடிந்ததும்தான் வீட்டிலிருந்து கொண்டு வந்த மாமிச உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அந்த மாமிச உணவின் வாசனை கோபால ஐயங்காரின் மனைவி

மீனாட்சியின் மூக்கைச் சென்று அடைந்தது. அவள் மெதுவாக வந்து அவன் மாமிசம் சாப்பிடுவதைப் பார்த்தாள். அவளின் நிலையைக் குறிப்பால் உணர்ந்த அவன் ஐயங்காருக்கு தெரியாமல் மீனாட்சிக்கு நாள் தோறும் மாமிச உணவு கொணர்ந்து கொடுத்தான். ஐயங்காருக்குக் குடிப்பழக்கம் இருப்பது அவளுக்குத் தெரியும். அவன் ஒருநாள் சொன்னான் ஐயங்காருக்கு நல்ல போதையில் இருக்கும் போது மாமிச உணவு கொடுத்தாய் என்றால் அவர் சாப்பிட்டு விடுவார். பின்பு மெல்ல மெல்ல அது அவருக்குப் பழக்கத்தில் வந்து விடும் என்று. ஐயங்கார் மாமிச உணவை விரும்பிச் சாப்பிடுமளவிற்கு மாறி விட்டார். இதனைப் புதுமைப்பித்தன்

"மீனாட்சி பிராமணப் பெண் ஆவது போய்
கோபால ஐயங்கார் இடையர் ஆனார்"

அவர்கள் சாதி வேற்றுமை, உணவு வேற்றுமை எல்லாவற்றையும் கடந்து ஒன்றுபட்டு விட்டார்கள்.

காதலுக்குக் கண்கள் இல்லை என்பது பழமொழி. காதலிக்கும் போது சாதிப்பிரச்சினை கண்களுக்கு தெரியாது. சமயப் பிரச்சினை கூடக் கண்களுக்கு தெரிவதில்லை. இது புதுமைப் பித்தன் காலத்துச் சமுதாயத்தில் உண்டு. பேசித் திருமணம் செய்பவர்கள் முதலில் அது சைவ உணவுக் குடும்பமா? மாமிச உணவுக் குடும்பமா? என்பதைத் தெரிந்து கொண்டே திருமணம் செய்வார்கள். காதலித்துச் செய்பவர்கள் காதல் வேகத்தில் உறவைப் பற்றியெல்லாம் ஆராயமாட்டார்கள். திருமணத்திற்குப் பின்னர்தான் யாரோ ஒருவர் தனது உறவை விட்டுக் கொடுத்து உறவில் ஒருமைப்பாடு என்ற இடர்பாட்டிற்கு ஆளாகுவார்கள்.



*புரியுது...... நீங்க சொல்லுறது புரியுது......*
*உங்க வெயிட் நார்மலாத்தான் இருக்கு.......!*
*ஆனா இந்த வெயிட்டுக்கு இன்னும் நீங்க*
*மூணு அடி வளரணும்......*
*கொஞ்சம் குட்டையா இருக்கீங்க.*

இச் சிறுகதையில் வரும் கோபால ஐயங்கார் தனது பிராமணச் சாதியை விட்டு இடைச் சாதிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் சாதிப் பிரச்சினையை இலகுவாகத் தூக்கி எறிந்தார். சமுதாயத்தில் உள்ளவர்களின் ஏனைய பேச்சுக்கள் அவரை எதுவும் செய்ய முடியாமல் செய்து விட்டன.

குடும்ப வாழ்வில் ஈடுபடும் இருவர் மாமிச உணவும் சைவ உணவுமாக இருந்து விட்டால் அது பெரும் பிரச்சினை ஆகிவிடும். பிள்ளைகளை மாமிச உணவுக்காரராக வளர்ப்பதா? சைவ உணவுக்காரராக வளர்ப்பதா? என்ற பிரச்சனை கூட எதிர்காலத்தில் ஏற்படும். ஆனால் புதுமைப் பித்தன் இக் கதையில் யாரோ ஒருவர் உணவில் விட்டுக் கொடுப்பதை உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு எனச் சிறப்பாகச் சுட்டிக் காட்டுகின்றார். சாதிப் பிரச்சினையைக் கடந்த கோபால ஐயங்காரின் மனைவி சாப்பாட்டுப் பிரச்சனைக்குத் தீர்வு கண்ட பின் ஒன்று பட்ட அன்றில்கள் போல முதுமை வரை இணைந்து வாழ்ந்தார்கள்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்ற கருத்து உடையவர்களுக்கு இந்தக் கதை மிகவும் ஏற்றதாக உள்ளது. இடதுசாரி வாசகர், வலதுசாரி வாசகர், முற்போக்கு வாசகர் எல்லார்க்குமே சுவை பயக்கும் இந்தச் சிறுகதை புதுமைப்பித்தனின் அற்புத படைப்புக்களில் ஒன்றாக விளங்குகின்றது.

ம.பா.பாலமுரளி



தமிழருவி சஞ்சிகை நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளின் பரிசளிப்பு

சங்கானை சைவப்பிரகாச மகாவித்தியாலய மாணவி செல்வி. விதுசா கிருபாகரன் தமிழருவி சஞ்சிகையின் இயக்குநரும், உதவி ஆசிரியருமான திரு. த. கனேசமூர்த்தியிடமிருந்து பரிசினைப் பெற்றுக் கொள்கிறார். அருகில் பாடசாலை அதிபர் திரு. சிவசுந்தரம் அவர்கள் காணப்படுகிறார்.



# சிறுவர் உளவியலும் கற்பித்தல் முறையும்

முருகையா ஜெயமதன்

அந்தக் குடும்பத்திலே தந்தை கூலிவேலை செய்து பிழைப்பவர். இருப்பினும் அவரிடம் தகாத குடிப்பழக்கம் இளம்பராயத்தில் இருந்தே கூடி வந்தது. நாளாந்தம் குடித்து விட்டு வரும்போது ஏதாவது ஒரு தத்துவப் பாடலைப் பாடிய வண்ணமே வந்து சேருவார். வீடு வந்ததும் ஏதாவது ஒரு காரணத்தைக் கேட்டு மனைவியை துன்புறுத்துவதும் வழக்கமாகி இருந்தது. மனைவியை அடிக்கும் போது பேசத்தகாத "தூசண" வார்த்தைகளை மிகவும் கேவலமாகப் பேசுவார். இவ்வேளை பிள்ளைகள் அதனைக் கேட்டுப் பயத்தால் நடுங்கிக் கொண்டிருப்பார்கள். சிலவேளை பிள்ளைகள் குளறி அழுவதைப் பார்த்து அயலவர்கள் ஓடிவந்தால் அவர்களுக்கும் கேவலமான வார்த்தைகளால் அர்ச்சனை செய்து விடுவார்.

இப்படியாகத் தந்தை பேசும் வாசகங்களைக் கேட்ட ஒன்பது வயதுச் சிறுவன் பாடசாலையிலே ஒருநாள் தனது சகபாடியால் ஏதோ தவறுதலாக உசுப்பப்பட்டதற்காகத் தந்தை பேசிய அதே கேவலமான "தூசண" வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளார். இதனை உடனறிந்து கொண்ட ஆசிரியர் அந்தச்சிறுவனை அழைத்து அதிபரின் அலுவலகத்துக்கு அனுப்பிவிட அன்பான அதிபர் அவனிடம் சாதாரணமுறையில், கோபங்கொள்ளாது "இவ்வார்த்தைகள் எப்படி உனக்குத் தெரியும் ?" என்று கேட்டார். சிறுவனும் தமது வீட்டில் அன்றாடம் நடக்கும் சம்பவங்களையும் சம்பாசணை களையும் கொட்டித் தள்ளி இருந்தான். உடனே விரைந்து பெற்றோரை அழைத்த அதிபர் தந்தையாரோடு வெகு நேரமாக உரையாடி மகனுக்கு நேர்ந்த அவமானத்தையும் எதிர் காலத்தில் அவன் நிலைப்பாடு பற்றியும் உரையாடினார் . அம்மாணவனின் தந்தை தன்னிலை உணர்ந்து வெட்கித்துப்போய் நின்றார் இச்செயற்பாடு என்பது கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் போன்றது. பிற விடயங்கள் பிள்ளைகளை எப்படிப் பிழையான நிலைக்கு வழிநடத்துகின்றன என்பதற்கு உதாரணம். அதாவது பெற்றோரே பிள்ளைகளின் வழி காட்டிகள். அதனையே பிள்ளைகள் பின் பற்றுவர். இதனை எப்போதும் பெற்றோர்கள் மறுக்க முடியாது. பிள்ளைகளை அன்பாக அரவணைத்து அவர்களுக்கு எவற்றை எல்லாம் அறிவுரையாகக் கூற முடியுமோ அதுவே பிள்ளைகளுக்குக் கொடுக்கும் எதிர்காலப் பண்பாட்டு விழுமியங்கள் ஆகும். இதை விடுத்து, கவலை, துன்பம், துயரம், நாகரிகம் என்ற பெயரில் குடித்து விட்டு, வீட்டில் கும்மாளம் அடித்தால் எதிர்காலச் சந்ததியும் அடிமைப்பட வாய்ப்பாக அச்செயற்பாட்டுக்குத் தூண்டப் படுவார்கள். தந்தை குடித்து விட்டுக் கடும் சொற்களால் வைது அடிக்கும் போது பார்க்கின்ற பிள்ளை என்றோ ஒருநாள் தானும் அது போல வர வேண்டும் என மனம் துடிக்கும். இது ஒருவகை அடுத்த நிலைப்பாடு. குடித்துவிட்டுக் கொடுமைப்படுத்தும் பெற்றோரைப் பார்த்து முதலில் பயப்படும் பிள்ளைகள் காலப்போக்கில் பெற்றோருக்குக் கொடுக்கின்ற பயபக்தி, அன்பு, கட்டுப்பாடு, ஒழுக்க நெறி, பராமரிக்கும் எண்ணம் என்பவற்றை விடுத்து தந்தையை வேண்டாத பொருளாகவோ அல்லது இழி செயலால் தங்கள் மரியாதை போகிறது என்ற எண்ணப்பாட்டில் ஒதுக்கிவைக்கிற தன்மையே ஏற்படுகிறது.



எனவே பிள்ளைகள் மனநிலை எதனைப் பதிவு செய்கிறது என்பது யாருக்கும் தெரியாது. நாம் உணர்ச்சி வசப்படும் போது அருகில் நிற்கும் பிள்ளைகள் பற்றி சிந்திப்பது இல்லை. அவன் எம்மைப் பின்பற்றுகிறான் என்பதையும் மறந்து விடுகிறோம். ஒரு சிறுபிள்ளை பெற்றோரிடம் எதை எதிர் பாக்கிறது தெரியுமா? அன்பான பேச்சு, கனிவான பார்வை, அரவணைப்பு, வழிகாட்டல், நம்பிக்கை போன்றன. தனது பெற்றோர் எப்போதுமே அன்புடன் அரவணைக்க வேண்டும் என்று எதிர்பாக்கும் பிள்ளைக்கு என்னவிடை வைத்திருக்கிறார்கள் என்றால் "நேரமில்லை" என கூறபோகிறார்களா? இது சிறந்த திருப்தி தரும் பதிலாக மாட்டாது. அவர்களின் உளநிலை அறிந்தே செயல்களை நமது இல்லங்களில் புரிய வேண்டும். அதுவே நற்சிந்தனைக்கு வழி காட்டியாக அமையும்.

(தொடரும்...)



# மானுட விடிவை நோக்கி நகர மனித மனங்களின் வன்முறை அறிவுச் சாளரத்தை மூட வேண்டும்!!!

எஸ். நதிபரன் B.A (Hons)

உலகில் உள்ள எல்லாப் பிறப்புக்களிலும் மனிதப் பிறப்பானது மகோன்னதமானது. மனிதப் பிறவி எடுத்த மனிதன் வாழ்க்கைச் சக்கரச் சகட ஓட்டத்தில் சிக்கிச் சுழலுகின்றான். இயற்கை சொல்லும் பாடத்தை விளங்கிக் கொள்ளத் தெரியாத மனிதன் இன்று செயற்கையின் கவர்ச்சியினால் கவரப்பட்டுத் தனது மனிதப் பிறவியின் பயனைத் தூயதாக்கத் தவறுகின்றான். இதனால் அவன் அடையும் துன்பங்களோ-வேதனைகளோ ஏராளம். சாதனைகள் படைக்கும் முயற்சியில் இயற்கையைப் புறமொதுக்கி மேற்கொள்ளும் எந்த செயற்பாடும் வெற்றி பெறாது. அவ்வாறு வெற்றி பெற்றாலும் அந்த வெற்றி நிரந்தரமாக அமையாது. நிரந்தரமற்ற அந்த வெற்றியின் பின் பல அழிவுகள் இயற்கையின் தண்டனையாக ஏற்படுகின்றது என்ற தத்துவத்தை அறியாத மனிதனின் மூடத்தனமான செயற்பாடுகளால் இயற்கையின் பெறுமதிமிக்க வளத்தை-கட்டுமானத்தை சிதைக்க முற்படுகின்றான். அச்சிதைவுகளின் விளைவாகப் பல இயற்கை அழிவுகள் பரிணமிக்கின்றதை இன்று உலகில் உள்ள மக்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இன்று உலக நாடுகளுக்கு இடையில் இடம்பெறும் பகைமை உணர்வுகள், குரோதங்கள் மற்றும் குழப்பங்கள் ஒரே நாட்டுக்குள் இடம்பெறும் வன்முறைகள், சண்டைகள் மற்றும் சமூகங்களுக் கிடையில், இனங்களுக்கிடையில், குடும்ப அங்கத்தவர் களுக்கிடையில் பதிந்திருக்கும் பழிவாங்கும் எண்ணம் வக்கிர சிந்தனைகள், போட்டி மனப்பான்மைகள் இடம்பெற்று வருகின்றதை பிரத்தியட்சமாக காண்கின்றோம். அந்த வகையில் எமது நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தமும் அத்தகையதே.

இந்த யுத்தத்தின் கோரத் தாண்டவத்தினால் மக்களின் சமூக, பொருளாதா வாழ்வின் பல பரிணாமங்களில் இருள் கவ்விக் காணப்படுகின்றது. எத்தனையோ அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப் பட்டுள்ளன. மக்களின் வீடுகள், சொத்துக்கள் அழிந்தும் குடும்பங்கள், உறவுக் கட்டமைப்புகள் உடைந்தும் போயுள்ளன. இதனால் மக்களின் அன்றாட வாழ்வே சிதைந்து சின்னாபின்னமாகிப் போயுள்ளது. உள்நாட்டில் எத்தனையோ மக்கள் வீடுகளின்றி இடம்பெயர்ந்து ஏதிலிகளாக அல்லாடுகின்றனர். வசதியான குடும்பங் களில் பிறந்த பலர் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து வேற்று நாடுகளில் வாழ்ந்து தமது இன அடையாளத்தை மறந்து அந்நிய மோகத்தால் எற்றுண்டு கிடக்கின்றனர். இத்தனைக்கும் மூல காரணம் முடிவில்லாமல் தொடர்ந்த யுத்தமே அன்றி வேறில்லை.

எந்த ஒரு நாட்டிலும் யுத்தம் நடைபெற்றால் எந்தவொரு அபிவிருத்தியிலும் முன்னேற்றம் அடைந்ததாகச் சரித்திரம் இல்லை. அரசியல், பொருளாதாரக் கட்டுமானங்களில் ஏற்படும் சிதைவுகளால் பாதிக்கப்படுவது வெறும் அப்பாவி மக்களே என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு நாட்டின் தேசிய அரசியலில் இரு முக்கியமான துறைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை,

1) நீதித்துறை
2) பொருளாதாரத்துறை

இவ்விரு துறைகளின் வகிபங்கைக் கொண்டே அந்நாட்டு அரசியலையும் அரசியல் சார்ந்தோரையும் மக்கள் தீர்மானிக்கின்றனர். இத்துறைகளில் பிறழ்வுகள் ஏற்படும் போது அந்நாடு அதல பாதாளத்தை நோக்கியே செல்வதைத் தடுக்க முடியாது. அதே நேரம் மேற்படி துறைகளில் முன்னேற்றம் ஏற்படும்போது அந்நாட்டில் அபிவிருத்தியில் செழுமை நிலை ஏற்படும்.

இந்த அபிவிருத்தியின் செழுமை நிலையை ஒட்டுமொத்த இலங்கை மக்களும் அனுபவிக்க வேண்டுமாக இருந்தால் முதலில் அனைத்து இனமக்களும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். தற்போது யுத்தம் நடைபெற்றது ஒரே நாட்டிற்குள். அதுவும் சிறியதொரு நாட்டிற்குள் ஏனைய நாடுகளுடன் அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். எனவேதான் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த இக்கொடிய யுத்தத்தால் ஏற்பட்ட, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவுகளைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அந்தளவிற்கு இந்த முடிவற்ற யுத்தத்தின் மூலம் எத்தனையோ மோதல்களில், சம்பந்தப்படாத பெண்கள்,

குழந்தைகள், முதியோர்கள் உள்ளடங்கலாகப் பல இலட்சக் கணக்கான பொதுமக்கள் செத்து மடிந்தும் அங்கவீனமடைந்துமுள்ளமை நெஞ்சைப் பிழியும் வேதனை மிகுந்த சோகங்களாகும்.

எனவேதான் முடிவற்றுத் தொடர்ந்த இக்கொடிய யுத்தத்திற்கு முடிவுகட்டி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும் என்பதே ஒட்டுமொத்த மக்களின் வேண்டுதல்களாகும்.

யுத்தம் எவ்வளவு தூரம் மக்களைப் பாதிப்படையச் செய்துள்ளது என்பதைக் காட்டக் கம்பராமாயணத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது எனக் கருதுகின்றேன். இராமன் தந்தை இட்ட கட்டளைப்படி 14 ஆண்டுகள் வனவாசம் முடித்தபின் முடிசூட்டு விழாவின்போது தவமுனிவரான வசிட்டர் கூறிய கருத்து எமது நாட்டிற்கும் பொருத்த முடையதாக அமைகிறது. ஓர் அரசன் எப்படி நாட்டை ஆள வேண்டும் என வசிட்டர் கூறியதாகக் கம்பன் பேசுகின்றான்.

"யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போரொடுங்கும் புகழ் ஒடுங்காத தன்
தார் ஒடுங்கல் செல்லாது அது தந்தபின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமா?"

இப்பாடல் மூலம் ஒரு நாட்டை அரசாட்சி செய்யும் மன்னன் யாருடனும் பகை கொள்ளாதுவிட்டால் போர் என்பதே இராது. இதனால் மன்னனின் புகழ் மங்காது மாறாக அவன் புகழ் ஓங்கும். இதனால் மக்கள் மன்னனின் ஆட்சி முடிய வேண்டும் என விரும்பமாட்டார்கள் என்பதே இப்பாடலின் பொதுவான கருத்து. இதிலிருந்து போர் என்பது அந்தக் காலத்தில் இருந்து அனைவராலும் வெறுக்கப்பட்டது என்பதை வசிட்ட மாமுனிவர் மூலம் கம்பர் பேசுகின்றார். உலகியல் வாழ்வின் நியதியை உணராது கரும்பிருக்க இரும்பயிலும் மூடர்களாக மக்கள் வாழ்கின்றனர்.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூவகை ஆசைகளுக்கு அடிமைப்பட்டு எமது வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்றது. இதனால் வாழ்க்கையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. அத்தகைய வாழ்வியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றது. இத்தகைய சூழலில் தகவல் ஊடகத்தின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகின்றது. எம் சமூகத்தின் மத்தியில் அச்சு ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் எம்மை வழிநடத்து மளவிற்கு அதன் தாக்கம் மிக ஆழமாகவே வேரூன்றி விட்டது. சமூகத்தின் போக்கையே மாற்றுமளவிற்கு இன்றைக்கு இத்தகைய ஊடகங்கள் முக்கியம் பெறுகின்றன. அதன் வரிசையில் சஞ்சிகைகளின் வரவும் அதன் நிலைபெறுகையும் குறைவாகவே காணப்படு கின்றன. இன்றைய சூழலில் சஞ்சிகைகளை அச்சிட்டு வெளியிடும் பணி மிகவும் கடினமானது. இன்று சஞ்சிகைகளின் வரவும் அதன் நிலைபெறுகையும் புற்றீசல்கள் போல வந்த வேகத்திலேயே குறுகிய ஆயுளுடன் தமது வரவை சுருக்கிக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்கு இன்றைய சஞ்சிகைகள் தள்ளப்பட்டுள்ளமை வேதனையானது.

இது இவ்வாறிருக்க, இன்று பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதில் பல்வேறு இடர்களை எதிர்கொள்ளும் மனிதன் தனது ஆற்றலில் வாழ்வியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றான். அண்டவெளியில் மண்டையைக் குடையும் மனிதனுக்கு மாறாக சொந்த வாழ்வியல் நெருக்கடிகளால் மண்டையைப் போட்டுடைக்கின்றான். இதனால் உடல், உள ரீதியான பாதிப்புக்கு ஆட்படுகின்ற விஞ்ஞானத் துறையின் அசுர வளர்ச்சியால் கவரப்பட்டு மனித மூளையின் விசித்திரமான ஆற்றலைப் பயன்படுத்திப் பல்வேறு தளங்களில் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் என அனைத்துத் துறையிலும் மனிதனது மூளையின் தாக்கம் பிரதிபலிக்கின்றது. இத்தாக்கம் ஒருபக்கம் நன்மையைத் தந்தாலும் மறுபக்கம் தீமையையே தருகிறது. எனவே இயற்கையுடன் எமது வாழ்க்கையை ஒன்றிணைக்க வேண்டும். இதனால் எமது வாழ்க்கையைச் செம்மையுற அமைத்துக் கொள்ளலாம் என்பதே இயற்கை நமக்குச் சொல்லும் பாடமாகும்.



15 வருஷமா தீராத உங்க வியாதிக்கு ஒரு வழியா மருந்து கண்டு பிடிச்சுட்டேன். ஆனா பேட் லக் எழுதி வெச்ச என்னோட கையெழுத்தை என்னாலேயே படிக்க முடியல!

# நாட்டிய சாஸ்திரம் கூறும் ரஸக்கோட்பாடு

ஆக்கம் :
பு. கணேசராஜா

இந்தியாவின் செந்நெறி அரங்காக நாட்டிய சாஸ்திர அரங்கு காணப்படுகிறது. இந்துக்களின் அரங்கு, சமஸ்கிருத அரங்கு என்றும் இவ் அரங்கினை அழைப்பர். நாட்டிய சாஸ்திரம் எனும் நூலினை எழுதியவர் பரதர் ஆவர். தொன்மை வாய்ந்த இந்திய அரங்கு பற்றி இந்நூல் தெரிவிக்கின்றது. கி.மு 2ஆம் நூற்றாண்டிற்குப் பின் எழுந்த நூலாக இந்நூல் கருதப்படுகின்றது.

நாட்டிய சாஸ்திரம் ரஸம் என்னும் அழகியற் கோட்பாட்டை முன்வைக்கின்றது. ரஸம் என்பது சுவை எனப் பொருள்படுகிறது. அரங்கின் சுவையாக ரஸம் அமைகிறது. பரதர் கூறும் கோட்பாட்டினை இந்தியாவின் அழகியற் சிந்தனையாகக் கருதுவர். நாட்டிய சாஸ்திரத்தின் ரஸக்கோட்பாடு, அழகியற் சிந்தனைகள் என்ற வகையில் கிரேக்க அவலச்சுவை நாடகத்தின் அழகியல் சிந்தனையான கதாசிஸ் உடனும் யப்பானிய நோ நாடகத்தின் அழகியல் சிந்தனையானயூகனுடனும் ஒப்பிடப்படுகிறது.



பரதர் "விபாவ அனுபாவ வியபிச்சாரிபாவ சம்யோக ரஸ நிஷ்பத்தி" என ரஸத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகின்றார். விபாவம், அனுபாவம், வியபிச்சாரி பாவம் என்பன ஒன்றுடன் ஒன்று இணையும் போது ரஸம் தோற்றம் பெறுகிறது என இது பொருள் படுகின்றது. இருப்பினும் ரஸம் தோற்றம் பெற வேண்டுமாயின் ஸ்தாயி பாவமும் அவசியமானதாகும்.

ஸ்தாயி என்ற பதம் அடிப்படையானது, நிலையானது என்ற பொருளைத் தருகிறது. ஒவ்வொரு ரஸங்களும் தோற்றம் பெற ஒவ்வொரு ஸ்தாயி பாவம் அடிப்படையாக அமைகின்றது. ரதி என்ற ஸ்தாயில் இருந்து சிருங்காரம் எனும் ரஸம் தோற்றம் பெறுகிறது. பீபத்சம் எனும் அருவருப்பு ரஸம் யுகுப்சை என்ற ஸ்தாயில் இருந்து தோற்றம் பெறுகிறது. வீரம் எனும் ரஸம் 'சாகம் என்ற ஸ்தாயில் இருந்து மலர்கிறது. பயம் எனும் ரஸம் பயானகா என்ற ஸ்தாயில் இருந்து பிறக்கின்றது. கருணை என்ற ஸ்தாயில் இருந்து கருணா எனும் சோகரஸம் ஊற்றெடுக்கின்றது. ஹாஸ்யம் எனும் நகைச்சுவை ரஸம் 'ஸ்யம் எனும் ஸ்தாயில் இருந்து உருவாகின்றது. ஆச்சரியம் என்ற ஸ்தாயில் இருந்து அற்புதம் எனும் ரஸம் பிறக்கின்றது. கோபம் என்ற ஸ்தாயில் இருந்து ரௌத்திரம் என்ற ரஸம் ஊற்றெடுக்கின்றது.

ஸ்தாயி பாவம் தானாகத் தொழிற்பட மாட்டாது. ஸ்தாயி, பாவத்தைத் தூண்டும் போது அது தொழிற்படுகின்றது. ஸ்தாயி பாவத்தைத் தூண்டும் தூண்டியாக அமைவது விபாவம் ஆகும். விபாவம் என்ற சொல் காரணம். அது நிமித்தம் என்ற பொருளைத் தருகிறது. ரஸம் தோன்றக் காரணமாக அமைவது விபாவம் ஆகும். விபாவம் ஒரு உணர்வு வெளிப்பாடு அன்று. உணர்வு வெளிப்படுத்துவதற்குரிய சூழ்நிலையினை அது வழங்குகின்றது. ஆலம்பன விபாவம், உத்தீபனவிபாவம் என விபாவத்தினை இரு வகையாக வகுப்பர். ஆலம்பன விபாவத்தில் கதாநாயகன், கதாநாயகி காணப் படுகின்றனர். உத்தீபனவிபாவத்தில் கதை நிகழும் இடம், காலம் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

காளிதாசரின் அபிஞ்ஞான சாகுந்தலம் நாடகத்தில் 3ஆவது அங்கத்தில் துஷ்யந்தன், சகுந்தலை, காடு, தனிமையான சூழல் என்பன விபாவமாக அமைந்து சிருங்கார ரஸத்தினை தோற்றுவிக்கின்றன. ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டும் போது அனுபாவம் தோற்றம் பெறுகிறது. அனுபாவத்தை இரு வகையாகப் பிரிக்கலாம். நடிகனிடத்தே இயல்பாகத் தோற்றம் பெறும் அனுபாவம் ஒரு வகையாகவும், நடிகனால் தோற்றுவிக்கப்படும் அனுபாவம் இன்னொரு வகையாகவும் காணப்படுகிறது. நடிகனால் உருவாக்கப் படும் அனுபாவத்திற்கு உதாரணங்களாக, கண் சிமிட்டுதல், பற்களை நெறுமுதல், புருவங்களைச் சுருக்குதல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். நடிகனிடத்தே இயல்பாகத் தோற்றம் பெற்ற அனுபாவம் எண் வகைப்படுகிறது. கண்ணீர் வருதல், மெய் மயிர் சிலிர்த்தல் (மயிர்க்கூச்செறிதல்) நிலைக் குத்தி நிற்றல் (ஸ்தம்பித்து நிற்றல்), உடல் நடுக்கமுறல், நிற மாற்றம், குரல் மாற்றம், வியர்வை, மூர்ச்சை (மயக்கம்) என்பன நடிகனிடத்தே இயல்பாகத் தோற்றம் பெறும்

அனுபாவங்களாகும். இவற்றை சாத்வீக பாவம் என்றும் அழைப்பர்.

ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டும் போது வெளிப்படுத்தப்படும் அனுபாவத்துடன் வியபச்சாரி பாவம் இணைகின்றது. வியபிச்சாரி பாவம் இணைகின்றபோது ரஸம் உருவாகின்றது. வியபிச்சாரி பாவம் ஒரு நிலையற்ற பாவம் ஆகும். "கடலில் அலைகள் தோன்றி மறைவது போன்று வியபிச்சாரி பாவமும் நடிகனிடத்தே தோன்றி மறைகின்றது" என பரதர் குறிப்பிடுகின்றார். தோன்றிய கணமே மறைந்து செல்வதால் வியபிச்சாரி பாவத்தை சஞ்சாரி பாவம் என அழைப்பர். 33 வகையான உணர்வு வெளிப்பாடுகள் வியபிச்சாரி பாவத்தில் காணப்படுகின்றன.

இவ்வாறு நடிகனிடத்தே காணப்படும் ஸ்தாயி பாவத்தினை விபாவம் தூண்டுகின்றது. அவ்வாறு தூண்டும் போது வெளிப்படும் அனு பாவத்துடன் விய



பிச்சாரி பாவம் இணைகின்றது. இதன் அடியாக ரஸம் உருவாகின்றது. நடிகனிடம் உருவாகிய ரஸம் பார்வையாளரை தொற்றுவதை பரதர் "சஹிருதயன்" என குறிப்பிடுகின்றார். சக இருதயன் என்று இது பொருள் படுகின்றது. நடிகனைப் போன்று பார்வையாளரும் ஒத்த மனதை உடையவராகக் காணப்படும் போது நடிகனால் வெளிப்படுத்தப்படும் ரஸம் பார்வையாளரை சென்றடைய வாய்ப்பு ஏற்படுகின்றது. 'காய்ந்த விறகில் தீப்பொறி பற்றி விறகே தீக்குழும்பாவது" போன்று நடிகனால் வெளிப்படுத்தப்படும் ரஸம் பார்வையாளரது மனங்களைப் பற்றி அவர்களையும் ரஸ மயமாக்குகின்றது எனலாம். எனவே ரஸம் தோற்றம் பெறுவதற்கு நடிகன் எவ்வாறு அவசியமானவரோ அவ்வாறே பார்வையாளரும் அவசியமானவர் எனலாம்.

பரதர் ' ஒரு நாடகத்தில் ஒரு பிரதான ரஸமே மேலோங்கிக் காணப்படுதல் வேண்டும்" என்று குறிப்பிடுகின்றார். பிரஹசனம் என்ற நாடக வகையில் "ஹாஸ்ய" ரஸம் முதன்மைப்படல் வேண்டும். பிரசரணம், நாடகம் ஆகிய வகைகளில் சிருங்கார ரஸம் முதன்மைப் படல் வேண்டும் என்று நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது. இவ்வாறு ஒரு நாடக வடிவத்தில் ஒரு ரஸம் மட்டும் மேலோங்கிக் காணப்படும் போது பார்வையாளர் இலகுவாக ரஸ அனுபவத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

"முரண்பட்ட ரஸங்களை ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தல் கூடாது" எனப் பரதர் கூறுகின்றார். சிருங்காரமும் பீபத்ஸமும், கருணாவும், ஹாஸ்யமும், பயமும் வீரமும் ஒன்றுக்கொன்று எதிரான ரஸங்களாகக் காணப்படுகின்றது. இவற்றுக்கிடையே துணை ரஸத்தை அமைப்பதன் மூலம் ரஸவெளிப்பாட்டினை தடங்கல் இன்றி மேற்கொள்ள முடியும். உதாரணமாக:- பயத்திற்கும், வீரத்திற்கும் இடையில் ரௌத்திர ரஸத்தினை அமைக்க முடியும். கருணாவிற்கும் ஹாஸ்யத்திற்கும் இடையில் சிருங்கார ரஸத்தினை அமைக்க முடியும்.

"நாட்டிய தர்மி லோகதர்மியுடன் ஒட்டிப் பிணையும் போது ரஸம் தோற்றம் பெறுகிறது" எனப் பரதர் கூறுகிறார். நாடகத்தில் அமைக்கப்படும் நிகழ்வுகள் உலகத்தில் காணப்படும் நிகழ்வுடன் ஒத்து அமையும் போது ரஸம் தோற்றம் பெறுகின்றது என்பது இதன் பொருளாகும். அந்தணன் வேட்டையாடினான் என்றால் ரஸம் தோற்றம் பெறமாட்டாது. ஆனால் அரசன் வேட்டையாடினான் என்றால் அங்கு ரஸம் தோற்றம் பெறும். இதே போன்று அரசன் தானம் பெற்றான் என்றால் ரஸம் தோற்றம் பெறமாட்டாது. ஆனால் அந்தணன் தானம் பெற்றான் என்றால் ரஸம் தோற்றம் பெறும். ஆகவே ரஸம் என்னும் அனுபவம் பார்வையாளர் இடத்தில் பெறப்படுவதற்கு நாடகத்தின் காட்சிகள் வாழ்வினை ஒத்து அமைதல் அவசியமானதாகும்.

நாட்டிய சாஸ்திரத்தில் விருத்தி என்ற வடிவம் முக்கியத்துவம் பெறுகின்றது. 4 வகை விருத்திகளை நாம் இங்கு காணலாம். விருத்தி எனும் வெளிப்பாட்டு முறைமையில் ரஸம் செல்வாக்குச் செலுத்தி நிற்கிறது. கைசீகி என்னும் விருத்தியில் சிருங்காரம் எனும் ரஸம் முதன்மைப்படுத்தப்படுகிறது. ஆர படி என்னும் விருத்தியில் பயம், ரௌத்திரம் ஆகிய ரஸங்கள் வெளிப்படுகின்றன. சாத்வதி விருத்தியில் கருணா ரஸம் முதன்மைப்படுகிறது. பாரதி விருத்தியில் எண் வகை ரஸங்களும் சுட்டப்படுகின்றன. எனவே ரஸ வெளிப்பாட்டில் விருத்திகளை தீர்மானிக்கின்றது எனலாம்.

பரதர் எண் வகை ரஸங்களையே குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் பௌத்த மதத்தின் எழுச்சியுடன் சாந்தம் ஒரு ரஸமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தனஞ்சயர் என்பவர் எழுதிய தசரூபகம் என்ற நூலில் சாந்தம் ஒன்பதாவது ரஸமாக குறிப்பிடப்படுகிறது. இந்திய அழகியலின் சிறந்த வெளிப்பாடாக ரஸம் அமைகிறது. நாடகத்தில் மட்டுமன்றி இந்திய நடனங்கள், இந்துக்களின் சிற்பங்கள் என்பவற்றிலும் ரஸ வெளிப்பாட்டினை நாம் கண்டு கொள்ள முடிகின்றது.


# விளையாட்டுக் கோட்பாடுகள் பற்றிய ஓர் அறிமுகம்

# *An Introduction to Theory of Play*

திரு.கே.கணேசநாதன்
பணிப்பாளர்,
உடற்கல்வி அலகு



விளையாட்டு என்பது தன்னார்வச் செயற்பாடாகும். இது உயிரிகளிடம் இயல்பாகவே உள்ள ஓர் ஆர்வமாகக் காணப்படுகின்றது. விளையாட்டுக்கள் உடல், உள செயற்பாடுகளுடன் தொடர்புறுவதுடன் உடல், உள வளர்ச்சிக்கும் ஆரோக்கிய வாழ்வுக்கும் உறுதுணையாக அமைகின்றன. "சிறார்கள் எத்தகைய செயல்களில் மகிழ்ச்சியாக ஈடுபடுகின்றனரோ அல்லது மகிழ்ச்சியை எச்செயல் களில் அனுபவிக்கின்றனரோ அதுவே விளையாட்டு ஆகும்" என Nic Nilson என்ற அறிஞர் குறிப்பிடு கிறார். அவர் மேலும் "எது ஒருவருக்கு வாழ்க்கைப் பற்றினை தோற்றுவிக்கின்றதோ அதனை விளையாட்டு எனக் கூறலாம்" என வும் கூறியுள்ளார். எனவே விளையாட்டு என்பது ஒரு பரந்த பொருளுடைய செயற் பாடாக அமைகின்றது. ஒருவருக்கு விளை யாட்டாகக் கருதப்படும் ஒரு செயல் மற்றொருவருக்கு தொழிலாக அமையலாம். உதாரணமாக: தேகப்பயிற்சி மாணவருக்கு ஒரு விளையாட்டாகவும், உடற்கல்வி ஆசிரியருக்குத் தொழிலாகவும் அமைந்திருக்கும்.



விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கான இயல் பூக்கம் எல்லோரிடமும் காணப்படுகின்றது. விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் நாம் ஒருவகை மனத்திருப்தி யினையும், மனநிறைவினையும், மன மகிழ்ச்சி யினையும் அனுபவிக்க முடிகிறது. சிறார்கள் விளையாட்டை நேசிப்பது அவர்களிடம் இயல்பாகவே நிறைந்திருக்கும் உள்ளுணர்வான விளையாட்டிலீடு படுவதற்கான தன்னார்வத்தினாலாகும். இவர்கள் இயல்பான உந்துகையினால் விளையாட்டுக்களில் தன்னிச்சையாக ஈடுபட விரும்புகின்றனர். இதனால் கல்வியில் விளையாட்டு ஓர் முக்கிய அம்சமாக அமைகின்றது. குறிப்பாக முன்பள்ளிக்கல்வி, ஆரம்பக் கல்வி, கலைத்திட்டத்தில் விளையாட்டுச் செயற்பாடுகளுடனான கல்வி முக்கியத்து வப்படுத்தப்படுகின்றது.

உடல் அவயவங்களின் செயற் பாடுகளை ஒரு கட்டுக்கோப்புடன் செயற்படுத்துவதற்கு மனதை ஒத்திசை வாக்கும் திறன் விளையாட்டுக்களின் மூலம் விருத்தி செய்யப்படுகின்றது. சிறார்கள் விளை யாட்டுக்களின் மூலம் உடல், உள, சமூக மற்றும் ஒழுக்க விருத்தி களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதனால் சிறார்களை விளை யாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்து வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றோரும் உற்றோ ரும் குடும்பம், பாட சாலை, சமூக அமைப்புக் கள் என்பவற்றினூடாக ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். விளை யாட்டுக்களின் பெறு மானங்களைப் பல்வேறு பரிமாணங்களில் விளையாட்டுத் தொடர்பான கோட்பாட்டாளர்கள் எடுத்து விளக்கியுள்ளனர். இத்தகைய கோட்பாடுகளை நாம் விளங்கிக் கொள்வதன் மூலம் சிறார்களின் முன்னேற்றத்தில் விளையாட்டின் முக்கியத்துவத்தினை உணர்ந்து அவர்களுக்கு விளையாட்டுக்களுக்கான வசதியினையும் வாய்ப்பினையும் உருவாக்கிக் கொடுக்க முடியும்.

விளையாட்டுத் தொடர்பாக இதுவரை வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடுகள்:

01. மிகையாற்றல் கோட்பாடு (Surplus Energy Theory)
02. காலுதற் கோட்பாடு (Cathartic Theory)
03. பொழுதுபோக்குக் கோட்பாடு (Recreation Theory)
04. புனராக்கற் கோட்பாடு (Recapitulation Theory)

05. எதிர்பார்ப்பு அல்லது ஆயத்தப்படுத்தல் கோட்பாடு (Anticipation or Preparatory Theory)
06. போட்டி மனப்பான்மைக் கோட்பாடு (Rivalry Theory)
07. சுயவெளிப்படுத்தல் கோட்பாடு (Self Expression Theory)

### மிகையாற்றல் கோட்பாடு (Surplus Energy Theory)

இக்கோட்பாடு "Herbert Spencer" என்பவராலும் "Schiller" என்பவராலும் முன்வைக்கப் பட்டது. இது சிறார்களிடம் காணப்படும் மிகையான உடல், உள சக்திகளுக்கு ஒரு வெளிப்போக்கு வழியாக (Outlet) விளையாட்டுச் செயற்பாடுகள் அமைகின்றது என விளக்குகின்றது. "Mc Dougall" என்ற அறிஞர் "நன்கு ஊட்டம் பெற்ற நல்ல ஒய்வு பெறும் விலங்குகள் மிகைச் சக்தியைப் பெறுகின்றன. இவை தமது இயக்க தொழிற்பாடுகள் (Motor Mechanism) மூலம் இவற்றைச் செலவிடுகின்றன" எனக் கூறியுள்ளார்.

சிறார்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவும் நல்ல ஓய்வும் அவசியமாகின்றது. இது அவர்களிடத்தில் மிகைச் சக்தியைத் தோற்றுவிக்கும். இதனைச் செலவிடுவதற்கு அவர்களை விளையாட்டுச் செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

### காலுதற் கோட்பாடு (Cathartic Theory)

இது உளவியலாளர்களினால் முன்வைக்கப்பட்ட கோட்பாடாகும். மனிதர்களிடம் காணப்படும் காழ்ப் புணர்ச்சிகள் விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் சாந்தப் படுத்தப்படுகின்றது என இக்கோட்பாடு விளக்குகின்றது. எம்மிடம் காணப்படும் பயம், கோபம், பொறாமை போன்ற காழ்ப்புணர்ச்சிகள் விளையாட்டிலீடுபடுவதன் மூலம் விடுவிக்கப்படுகின்றது. எனவே மனநிலை சீராக்கம் பெற விளையாட்டுக்கள் உதவுகின்றன என இக்கோட்பாடு கருதுகின்றது.

பிறருக்கு தீங்கு விளைவிக்கும் இரக்கமற்ற செயல்களில் ஈடுபடும் எண்ணம் மனிதர்களிடம் முழு அளவில் அற்றுப்போகவில்லை எனவும் இதனை அகற்றுவதற்கான சிறந்த ஒரு உளச் சிகிச்சை முறையாக விளையாட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. சிறார்கள் காழ்ப் புணர்ச்சி அற்ற மனிதர்களாக எதிர்காலத்தில் மிளிர்வதற்கு அவர்களை விளையாட்டுச் செயற்பாடுகளில் பங்குபற்ற வைப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

### பொழுதுபோக்குக் கோட்பாடு (Recreation Theory)

இக்கோட்பாடு "Lord-Kames" என்பவரால் முன்வைக்கப்பட்டது. இது விளையாட்டின் பொழுது போக்குப் பெறுமதியை விளக்குகின்றது. இது நாம் தொடர்ச்சியாக செயற்பாடுகளில் ஈடுபட்டு சக்தியை இழந்து சோர்வடையும்போது விளையாட்டுச் செயற்பாடுகள் எமக்கு இழந்த சக்தியை மீட்டுக்கொண்டு உற்சாகமடைய உதவுகின்றது எனக் கூறுகின்றது.

சிறார்கள் கல்விச் செயற்பாடுகளில் அல்லது வேறு செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடும்போது அவர்கள் சக்தியை இழந்து சோர்வடைந்து தேக்க நிலைக்கு உட்படுகின்றனர். இதிலிருந்து அவர்கள் உற்சாகமடைவதற்கு அவர்களை விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் வேண்டும்.

### புனராக்கற் கோட்பாடு (Recapitulation Theory)

"Stanley Hall" என்பவர் இக்கோட்பாட்டை முன்வைத்தார். இது சிறார்கள் விளையாட்டுக்களின் மூலம் தமது மூதாதையரின் செயல் அனுபவங்களை மீளப்பெற்றுக் கொள்கின்றனர் என விளக்குகின்றது. எறிதல், பாய்தல், ஓடுதல் போன்ற மூதாதையர்களின் செயல்கள் பிற்காலத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட விளையாட்டுக்களாகப் பரிணமித்தன. விளை யாட்டுக்களின் மூலம் இப்பாரம்பரியங்கள் தலைமுறை தலைமுறையாக அடுத்த சந்ததிக்குக் கையளிக்கப் படுகின்றன.

சிறார்கள் தமது மூதாதையர்களது பாரம்பரியத்தை அறியவும் அனுபவிக்கவும் அடுத்த சந்ததிக்குக் கையளிப்பதற்கும் அவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவது இன்றியமையாததாகும்.

### எதிர்பார்ப்பு அல்லது ஆயத்தப்படுத்தல் கோட்பாடு (Anticipation or Preparatory Theory)

"Karl Goors" என்பவரால் இக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இது சிறார்கள் தமது எதிர்கால வாழ்க்கைக்காக விளையாட்டு அனுபவங்களூடாக தம்மைத் தயார்படுத்துவதாக எடுத்துக் கூறுகின்றது. எதிர்கால வாழ்வில் சிறார்கள் எதிர்கொள்ள வேண்டிய வகிபங்கினை (Roles) ஒத்த அம்சங்களில் விளையாட்டு செயற்பாடுகள் மூலம் அனுபவம் பெற்றுக் கொள்ள

முடிகின்றது என்பதே இக்கோட்பாடாகும். மனிதன் தனது வாழ்நாளில் அதிக காலத்தை இளமைப் பருவத்தில் கழிப்பதால் இக்காலப் பகுதியில் விளையாட்டு செயற்பாடுகளின் மூலம் தனது எதிர்கால வாழ்விற்கான அனுபவங்களைப் பெற்றுத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதாக இக் கோட்பாடு கருதுகின்றது.

சிறார்கள் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் தலைமைத்துவப் பண்புகளையும் சமநிலை ஆளுமை விருத்தியினையும் பெற்றுக்கொள்ள முடிவதால் அவர்களை எதிர்கால சிற்பிகளாக்குவதற்கு விளையாட்டு அவர்களுக்கு மிகவும் அவசியமாகின்றது.

## போட்டி மனப்பான்மைக் கோட்பாடு (Rivalry Theory)

போட்டி மனப்பான்மை எல்லா உயிரிகளிடமும் காணப்படுகின்றது. இதற்கான வெளிப்போக்கு வழிகாலாக விளையாட்டுக்கள் அமைவதினை இக்கோட்பாடு எடுத்துக் கூறுகின்றது. இது போட்டியிடும் திறனை விளையாட்டுக்கள் விருத்தி செய்வதாகக் கருதுகிறது.

இன்றைய உலகு போட்டிமிக்க உலகாகக் காணப்படுகின்றது. எனவே ஒவ்வொருவரும் தம்மை நிலைநிறுத்தப் போட்டியை எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்ய வேண்டியுள்ளது. சமமானவர்களில் முதலானவர் (First Among the Equals) என்ற நிலை இன்று வலுப்பெற்றுள்ளது. இதனை அடைவதற்கு சிறார்கள் விளையாட்டுக்கள் மூலம் போட்டியிடும் திறனை (Competency) விருத்தி செய்தல் அவசியமாகின்றது.

## சுயவெளிப்படுத்தல் கோட்பாடு (Self Expression Theory)

இக்கோட்பாடு மனிதனொரு சிந்தித்துச் செயற்படும் உயிரி என்பதால் மனிதன் எல்லா செயற்பாடுகளிலும் தனித்துவமாக செயற்பட முடிகின்றது எனவும், இது மனித குலம் நிலைத்திருப்பதற்கான காரணமாக அமைகின்றது எனவும் கருதுகின்றது. விளையாட்டுச் செயற்பாடுகள் வெற்றி, தோல்வி, ஆபத்து, அச்சத்தை எதிர்கொள்ளல் போன்ற பல்வேறு அனுபவங்களை உட்கிடையாக உணர்வதற்கு உதவுகின்றன எனக் கூறுகின்றது. அதாவது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்த விளையாட்டுக்கள் மனிதர்களுக்கு உதவுவதாகக் கருதுகின்றது. இதன் மூலம் மனிதன் தனது உடல், உள, சமூக தேவைகளை ஈடுசெய்ய முடிவதாகவும் இது கருதுகின்றது.

எனவே, சிறார்கள் தமது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தி தமது உடல், உள, சமூக தேவைகளை ஈடு செய்வதற்கு அவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்துவது அவசியமாகின்றது.


மேற்படி கோட்பாடுகள் விளையாட்டுத் தொடர்பான அறிஞர்களினால் வெவ்வேறு கால கட்டங்களில் முன்வைக்கப்பட்டவையாகும். இவை தொடர்பான அறிவை நாம் எம்மத்தியில் பரிட்சயப்படுத்திக் கொள்வதன் மூலம் சிறார்களின் வளர்ச்சியிலும் விளையாட்டின் மகிமையை அறிந்து அவர்களுக்கான விளையாட்டு வாய்ப்புகளை வசதிகளையும் எமது சமூகத்தில் அதிக விழிப்புணர்வுடன் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் உடல், உள ஆரோக்கியமான சமூக மயப்படுத்தப்பட்ட சந்ததி உருவாக்கத்திற்கு எமது பங்களிப்பை நல்க முடியும்.

## பூக்களின் பலன்கள்

| | | |
|---|---|---|
| ரோஜா | — | குறைகள் விலகும். தடைகள் அகலும். வெற்றி தரும் |
| மல்லிகை | — | சோதனைகள் நீங்கும், இன்பம் பெருகும். |
| துளசி | — | மனத்தூய்மை பெருகும், பக்தி சிறக்கும் |
| சாமந்தி | — | வலிமை, புது சக்தி உண்டாகும். பகைகள் விலகும். |
| செம்பரத்தை | — | தெய்வீக அன்பு கிடைக்கும். |
| நித்திய கல்யாணி | — | முன்னேற்றம் தரும். |
| எருக்கம்பூ | - | வல்லமை, தைரியம், மனஉறுதி தரும் |
| செந்தாமரை | — | தெம்பு, வலிமை, புத்துணர்ச்சி, உணர்வு தரும் |
| வெண்தாமரை | — | தெய்வீக உணர்வு மேம்படும், மன மாசுக்கள் அகலும் |
| காகிதப்பூ | - | பாதுகாப்பு உணர்வு மிகும். |
| வாடாமல்லி | — | நோயற்ற தன்மை, ஆயுள் விருத்தி, ஆபத்துக்கள் விலகும் |
| செவ்வரளி | — | தவறுகள் விலகி, ஒழுங்குகள் ஏற்படும். |
| மரிக்கொழுந்து | — | வெற்றியைத் தரும். |
| பவள மல்லி | — | நியாயமான ஆசைகள் நிறை வேறும். |
| நந்தியாவட்டை | — | புத்துணர்ச்சி தரும், மனத் தூய்மை உண்டாகும். |

ஸ்ரீ அன்னை

# இராமராஜ்ஜியம்



கடந்த கால் நூற்றாண்டு காலமாக அடிக்கடி தமிழ் மக்கள் மத்தியில் உச்சரிக்கப்படும் ஒரு வார்த்தை இராம ராஜ்ஜியம் என்பது.

நாட்டின் கலாசாரச் சீர்குலைவு, குறிப்பாக பெண்கள் மத்தியிலான பலாத்காரம், கற்பழிப்பு, வல்லுறவு என்பன அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே தமிழ்நாட்டில் இராமராஜ்ஜியம் ஒன்று உருவாக வேண்டுமென இலக்கிய வாதிகளும் புத்திஜீவிகளும் வலியுறுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக இந்தியாவில் தமிழ் நாட்டில் இந்த வார்த்தை எல்லோர் உதடுகளிலும் தவழ்வதை அவதானிக்க முடிகிறது

“இராமராஜ்ஜியம்” இந்த வார்த்தையின் அர்த்தம் சாதாரண மக்கள்பலருக்குப் புரிவதும் இல்லை. அதை அவர்கள் சரியாக விளங்கிக்கொள்ளவும் இல்லை.

ஏனெனில் இராமன் வாழ்ந்த இராமாயண காலத்துக்கும் அவர்கள் போக விரும்பவில்லை என்பதுடன் அந்தக் கற்பனைக் கதை தேவையுமில்லை என்பதுதான். மனித வாழ்க்கைக்கு தேவையான மகத்தான ஒரு சில விடயங்கள் என்றாலும் அதில் புதைந்துள்ளன என்பதை அவர்கள் எண்ணிப் பாக்கவில்லை. கற்பனைப் பாத்திரமான இராமன் அவர்களின் எண்ணத்திலிருந்து விலக்கப்பட்டான்

இராமனின் மனைவியான சீதாப்பிராட்டியை இராவணன் அசோகவனத்தில் சிறை வைத்தான். அவன் அத்துடன் நின்று விடவில்லை. சீதையின் பேரழகு அவன் சிந்தையைக் கிளறியது. எப்படியாவது சீதையை அடைந்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் பித்துப்பிடித்தவன் போல அலைந்து திரிந்தான். அவளிடம்சென்று தன்பெருமைகளை எடுத்துக் கூறித் தன்னை மணந்து கொள்ளும்படி கேட்கிறான். “உன்னை மகாராணி ஆக்குகிறேன்.உலகத்தையே உன்காலடியில் வீழ்த்து கிறேன் என் ஆசைக்கு இணங்கிவிடு” என்று பல்வேறு விதமான பசப்பு வார்த்தைகளைக் கூறுகிறான். மிரட்டிப் பாக்கிறான். சீதை எதற்குமே அசைய வில்லை. இதன்பின் சீதைக்குக் காவல் காக்க நியமித்த ஏவல் பெண்களின் உதவியை நாடி அவளைத் தன் சார்பில் அறிவுரை வழங்கித் தன் எண்ணத்திற்கு இசைய வைக்குமாறு உத்தரவிடுகிறான். எதுவுமே சீதையிடம் பலிக்க வில்லை. இராவணன் இத்துடன் நின்று விடவில்லை. அவன் மாயாஜால வித்தை யில் கைதேர்ந்தவன். இதனால் வேறு சில யுத்திகளைக் கையாண்டான். எந்தப் பெண்ணுமே மயங்கக்கூடிய மன்மதனைப் போல வேடம் எடுத்துக்கொண்டு சீதையை நெருங்கினான் எண்ணம் கைகூடவில்லை. இந்திரனை போன்று வேடத்தை எடுத்துக்கொண்டு சீதையை நெருங்கினான். எண்ணம் கைகூடவில்லை. இன்னும் பல வேறுவிதமான வேடங்களை எடுத்துக்கொண்டதுடன் பல்வேறு தந்திரங்கள் யுத்திகளைக் கையாண்டு தோற்றுவிட்டான். செய்வது அறியாது பித்துப்பிடித்து அரண்மனை மேல் மாடியில் குறுக்கும் நெடுக்கமாக நடந்து திரிந்தான். மந்திரி எல்லாவற்றையும் அவதானித்துப் பயபக்தியுடன், அவனை அணுகி அவன் கிட்டவந்து பணிவுடன் பின் வருமாறு கூறுகிறான்

“அரசே தங்கள் மனச் சலனத்திற்கான காரணத்தை நன்கு அறிவேன். தாங்கள் நினைக்கு மளவிற்கு சீதை சாதாரண பெண்ணில்லை. அவள் சிறந்த கற்பரசி. மன்மதனின் வேடத்திற்கோ இந்திரனின் வேடத்திற்கோ மசியமாட்டாள். அவள் மசியும் ஒரேஒரு வேடம் இராமன் தான். நீங்கள் ஒருதரம் இராமனைப் போல வேடம் எடுத்துப் பாருங்கள். விடயம் சரிவரும்” என்றான் இதைக்கேட்ட இராவணன்



கோபத்துடன் கூறுகிறான். "முட்டாள் எனக்கா நீ புத்தி சொல்கிறாய்? இராமனைப் போல வேடத்தையும் எடுத்துத்தான் பார்த்து விட்டேன். இராமனைப்போல வேடம் எடுத்தவுடன் சீதையை நினைக்க மனம் வரவில்லை" இங்குதான் மகா உண்மை ஒன்று புலப்படுகிறது. இங்குதான் "இராமராஜ்ஜியத்தின்" அத்திவாரமே அமைகிறது


தமிழ்க் காப்பியங்களில் பெண்களின் கற்பை எடுத்து இயம்ப சீதை, கண்ணகி, அருந்ததி என எத்தனையோ பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. ஆண்களின் கற்பை எடுத்துப் புலப்படுத்த "இராமன்" என்ற பாத்திரத்தை தவிர எதுவும் படைக்கப்படவில்லை. இராமன் 'ஏகபத்தினி விரதன்'. தன் மனைவியைத் தவிர எந்தப் பெண்ணையும் மனதால்கூட நினைத்துப் பார்க்காதவன்.

அவன் உருவத்தை இராவணன் எடுத்தவுடன் இன்னொருவனின் மனைவியை எண்ணிப்பாக்க முடியவில்லை. அதனால் சீதையை நினைக்க இராவணனால் முடியவில்லை. அவன் உருவத்துக்கு இவ்வளவு மகத்துவம் என்றால் இராமனாக இருந்தால் எப்படி இருக்கும். இதைக் கவிஞர் கண்ணதாசன்சினிமாப் பாடல் மூலம் பின் வருமாறு எடுத்துக்கூறுகிறார்.

எண்ணம் போல கண்ணன் வந்தான் அம்மம்மா.....
கண்ணன் மடியில் இராதை இருந்தாள் அம்மம்மா..
கண்ணன் வேறு பெண்ணைஅங்கு
எண்ணி மகிழ்ந்தான்
ராமன்மடியில் சீதை இருந்தாள்
இராமன் வேறு பெண்ணை அங்கு
எண்ண மறந்தான்
கண்ணன் என்பது மோக வடிவம்
இராமன் என்பது காதல் வடிவம்

கிருஷ்ணனின் பத்து அவதாரங்களில் இரண்டு தான் இராமன், கண்ணன். இரு அவதாரங்களிலும் குணாதிசயங்கள் வேறு பட்டவை. கண்ணன் பல பெண்களுடன் காமலீலை புரிபவன். இராமன் ஏகபத்தினி விரதன். எல்லோரும் இராமனாக இருந்தால் வேறு பெண்களை நினைத்துப்பார்க்க முடியாது. பெண்கள் எல்லோரும் தனித்து எந்த நேரமும் நடமாடலாம். அப்போது வல்லுறவு, கற்பழிப்பு சம்பவங்கள் இடம் பெறாது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ் நாட்டில் இராமராஜ்ஜியம் உருவாக வேண்டும் என்ற எண்ணக்கரு உருவாகியது. இப்போது இராமராஜ்ஜிய அர்த்தம் புரிந்திருக்கும் எல்லோருக்கும்.

வடவரணி - சி.சபா



தமிழருவி சஞ்சிகை நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளின் பரிசளிப்பு


இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு.அ.சதானந்தனிடமிருந்து நா. கீர்த்திகா பரிசினைப் பெற்றுக் கொள்கிறார். தமிழருவியின் இயக்குநரும் உதவி ஆசிரியருமான திரு. த. கணேசமூர்த்தி அருகில் நிற்கிறார்.



சே! சரியா ஒன்பது மணிக்கு ஆபீஸ்ல இருக்கனும்னு நினைக்கிறேன் ஆனா முடியமாட்டேங்குதே.

ஏன்?

எனக்குத்தான் இன்னும் வேலையே கிடைக்கலையே.



ஏன் டாக்டர் மருந்தோடு சேர்த்து ரெண்டு இட்லி, நாலு வடை, போண்டான்னு எழுதி இருக்கிறீங்க?

ஆஸ்பத்திரி கேன்டீனுக்கும் வியாபாரம் நடக்க வேண்டாமா? அதனாலதான்.

# இயற்கை மருத்துவம்

மாம்பழச் சாறு

இரவு உணவுக்குப் பின் மாம்பழச் சாறு சாப்பிட்டு வந்தால் முகம் பளபளக்கும். மலட்டுத் தன்மையைப் போக்கி ஆண்மையை அதிகரிக்கும்.

பலாச் சுளைகள்

பலாச் சுளைகளை தேனில் நனைய விடுங்கள், சிறிது நேரம் கழித்து சிறிது நெய்விட்டுக் கலக்கவும். மீண்டும் சிறிது நேரம் ஊறவைக்கவும். மாலை வேளையில் இதனைச் சாப்பிட்டால் மூளை நரம்புகள் பலப்பட்டு எப்போதும் மனம் புத்துணர்வுடன் காணப்படும்.

செவ்வாழைப்பழம்

நீண்ட நாட்கள் குழந்தைப் பேறு இல்லாதவர்கள் ஆணும், பெண்ணும் செவ்வாழைப் பழத்தை சாப்பிட்டு வந்தால் மலட்டுத் தன்மை நீங்கி குழந்தைப் பேறு கிடைக்கும்.

உருத்திராட்சம்

நீங்கள் புது இடங்களுக்கு செல்லும் போது அங்கிருக்கும் அதிர்வுகள் உங்களுக்கு ஏற்றதாக இல்லையென்றால் உங்களால் அமைதியாக இருக்க முடியாது. ஆனால் உருத்திராட்சம் அணிந்தால் எவ்விதமான பாதிப்பும் நம்மைத் தீண்ட முடியாது. மனநிலை சாந்தமாகவே இருக்கும். சக்தி வட்டம் நம்மைக் கவசம் போல் பாதுகாக்கும்.

மனஅழுத்தம் நீங்கத் துளசி

மன அழுத்தத்தைப் போக்கும் குணம் துளசிக்கு உண்டு. துளசி இலையை நன்கு மைபோல் அரைத்து அதனுடன் வில்வ இலைச் சாறு சேர்த்து லேசாகச் சூடாக்கி அருந்தினால் மன அழுத்தம் நீங்கும்.

துளசியின் பயன்கள்

இருதயம், ரத்த நாளங்கள், கல்லீரல், நுரையீரல் ஆகியவற்றைப் பலப்படுத்தும் தன்மையும் ரத்த ஓட்டத்தைச் சீராக்கும் தன்மையும், ரத்தத்தில் சர்க்கரையின் அளவைச் சீர்படுத்தும் தன்மையையும் கொண்டது.

துளசி உடற் சூட்டைச் சீரான நிலையிற் பாதுகாக்கிறது. நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கிறது. மன அழுத்தத்தைப் போக்கும் தன்மை கொண்டது. உடலுக்குப் பலத்தைக் கொடுக்கிறது. இருமல் மற்றும் சுவாச நோய்களுக்கு அருமருந்தாகப் பயன்படுகிறது. கொழுப்பைக் குறைக்கும் தன்மை கொண்டது. ஜுரத்தைக் குறைக்கும் குணம் கொண்டது. வயிற்றுப் புண், வாய்ப்புண்களைக் குணப்படுத்தும்.

முல்லைப்பூ

முல்லைப்பூ கொண்டு தயாரிக்கப்பட்ட கஷாயம், கருப்பை நோய்களைப் போக்கும் தன்மை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தலையில் சூடிக் கொண்டு, அதன் மணத்தை முகர்ந்தாலே மனோ வியாதிகள் நீங்கி மனத்தெளிவு உண்டாகும் என்று கூறப்படுகிறது.

வெள்ளை அல்லி

வெள்ளை அல்லி மலரின் இதழ்களைக் காயவைத்துப் பொடித்துக் கஷாயம் செய்து காலையும் மாலையும் அருந்தி வர நீரிழிவு நோயின் பாதிப்பு நீங்கும்.

இளைத்தவனுக்கு எள்ளு.... கொழுத்தவனுக்குக் கொள்ளு

இருமல், தடிமன், உடல்வலி, சோர்வு ரத்த அழுத்தம், சிறுநீரகத்தில் கற்கள் சேருதல் போன்றவற்றைப் பெருமளவில் குறைக்கும் கொள்ளு, கடும் உழைப்பிற்குப் பின் ஏற்படும் உடல் அயர்ச்சியையும் உடனடியாகக் குறைக்க உதவும். இளைத்தவனுக்கு எள்ளு கொழுத்தவனுக்கு கொள்ளு என்பர்.

தயிர்

சூரிய ஒளியில் பாதிக்கப்படும் நரம்புகளையும், தோல் பகுதிகளையும், தயிர் தனது ஆரோக்கியமான கலவைகளால் பாதுகாக்கிறது.



# பனையோலை இராமன் க(ர)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

**ம.பா.மகாலிங்கசிவம்**

(தெனாலிராமன் கதை மாதிரித்தான் பனையோலை இராமன் கதையும் இருக்கும். அதைக் கொப்பியடிச்சுத்தான் இவர் தாழிக்கிறார் எண்டு பூதக் கண்ணாடி போட்டுத் தேட நினைக்கும் 'குறை காணிகள்' தயவு செய்து இதைப் படிக்க வேண்டாமாய்க் கேட்டுக் கொள்கிறேன்)

எங்கள் பக்கத்து வீட்டில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் இருந்தார். (வாழ்ந்தார் என்று சொல்லாமல் இருந்தார் என்று சொல்லுவதற்குரிய காரணம் பின்னர் சொல்லுகின்றேன்.)

அவரது பிள்ளைத் திருநாமம் யாதென்பதை அடியேன் அறிந்திலேன் ஆயினும் 'பனையோலை இராமன் சேர்' என்று என் ஊரவர்கள் அழைத்துக் கேட்ட காதுப்பழக்கத்தால நானும் அந்தத் திரு நாமத்தாலேயே அவரை எப்போதும் அழைப்பேன்.



வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் இரண்டுடன்தான் அவர் எப்போதும் காட்சியளிப்பார். நான் வெள்ளை என்று சொல்லிறது அவர் அந்த உடுப்பை முதல் நாள் போடேக்கை இருந்த நிறத்தைத்தான். அவர் என்னோட சம்பாஷிக்கின்ற வேளைகளிலை அடிக்கடி எனக்குச் சொல்லிறது. "எனக்கு இந்த உலகத் திலை இரண்டே ரண்டு பூக்களைத்தான் பிடிக்காது. ஒண்டு குளிப்பு. மற்றது தோய்ப்பு" இந்த இரண்டு காரணங்களுக் காகவே ஊரவர் அவரை அதிகம் அண்டுவதில்லை.

தடிமன் காரணமாக மூக்கடைப்பு உள்ள சிலர் அவருடன் அடிக்கடி சென்று கதைப்பதாக ஊரினுள் அலர் தூற்றுவதுமுண்டு.

அவரவர் குளிப்பு அவரவர் இஷ்டம். நாம் அதற்குள், வீணாக மூக்கை நுழைப்பானேன்? இருந்தாலும் எப்போதும் அவர் திருநீற்றுப் பூச்சுடன் 'ஞானப் பழமாகவே' காட்சியளிப்பார்.

வேறு வேலை வெட்டி இல்லாது வெளிநாட்டுக் காசில் சாப்பிட்டுக் கொண்டு மற்றவர் சங்கதிகளை நோண்டுவதையே பொழுது போக்காகக் கொண்டவர்களுக்கு மட்டுமே ஓர் இரகசியம் தெரியும்.

கோவில் திருநீற்றைத்தான் அசுக்கிடாமல் சரைகளாகச் சுற்றி வந்து வீட்டில் வைத்து பூசுகிறார் என்பதுதான் அந்த இரகசியம். என்றாலும் அவரது ஏனைய கஞ்சத்தனங்களை ஊர் அறியும்.

அவரை ஒரு 'தெருப் பொறுக்கி' எண்டு கூடச் சொல்லலாம். ஓர் ஆசிரியரை இப்படிக் கேவலமாக பேசுவதா? எண்டு சண்டைகிண்டைக்கு வந்து விடாதீர்கள். தெருவில் உள்ள பொருட்களையெல்லாம் (மற்றவர்கள் இனிமேலும் பயன்படுத்த முடியாது என்று வீசியவை) பொறுக்கிச் சேர்ப்பதாலேயே அவருக்கு இந்த பெயரை வைத்தேன்.

பனையோலை இராமன் சேர் எப்போதும் தெருவில் கண்டெடுக்கப்பட்ட பிளேடுகளைக் கொண்டுதான் சேவ் எடுப்பார். இதை விடக் குண்டூசி, சட்டைக்குக் குத்தும் ஊசி போன்ற வகையறாக்களைக் கண்டால் அலாதிப் பிரியம். பூனைக் கண்களை குவித்துப் பார்த்து நடுநடுங்கும் கைகளை ஓரிடத்தில் நிலைப்படுத்தி ஊசியை அவர் பொறுக்கி எடுப்பதே தனி அழகு தான்.

பொறுக்கப்பட்ட ஊசிகள் தொலைந்து விடாமல் இருக்க பனியன் முழுவதுமே குறுக்கும் மறுக்குமாக அதனை குத்தியிருப்பார். அவை தோய்ப்புக்குள் அகப்படா விட்டாலும் பல இடங்களில் மழைத் தண்ணீர்பட்டுக் கறள் பிடித்திருக்கும்.

கியூவில் பொருட்களுக்காகக் காவல் நிற்கும் சந்தர்ப்பங்களில் குண்டூசிக் குத்தல், அவருக்குப் பிடிக்காத பூ என்பவற்றால் எல்லோரும் அவரை மனமொத்து முதல் ஆளாக அவரை விட்டு விடுவார்கள். தனது ஆசிரியர் தொழிலுக்குக் கிடைத்த மகத்தான மதிப்புத்தான் இது என்று அவர் அப்பாவித்தனமாகப் பெருமையடிப்பதைப் பலமுறை கேட்டிருக்கிறேன்.

அவரது மனைவி திருமணமான மறுவாரமே ஓடிப் போனதற்கு ஊசிக் குத்தல் காரணமா? அவருக்கு பிடிக்காத பூக்கள் காரணமா? என்று ஊருக்குள் பெரும் பட்டிமன்றமே நடந்து கொண்டிருக்கும்.

ஒருவரது எந்த விபரீதமான பழக்கத்திற்கும் சிறு வயதில் இருந்த நிறைவேறாத ஆசைகளே



காரணம் எனச் சிக்கின் பராட்டாவோ, சிக்மன் புரொட்டோ யாரோ சொன்னதாக ஞாபகம். அவர் அதிகளவில் ஊசிகளைக் குத்திக் திரிவதற்கான காரணத்தை அறிய நைஸாகக் கதை விட்டுப் பார்த்தேன்.

"ஓம் தம்பி. சின்ன வயசில் சரியான கஷ்ரம் ஒரு நாள் காற்சட்டையின் தெறி அறுந்து ஊசிக்கும் வழி யில்லாமல் ஒரு கையாற் பிடித்துக் கொண்டே பள்ளிக்குப் போனேன். அண்டைக்கு வீட்டு வேலை செய்து கொண்டு போகேல்லை, எண்டு சண்முகம் சட்டம்பியார் ஒரு கையில் அடித்துக் கோபம் தீராமல் மற்ற கையையும் நீட்டச் சொல்ல... நான் பட்ட அவமானம் இருக்கே... அதை எண்டைக்கும் மறக்க முடியாது" என்றார்.

அவர் சொன்ன கதைகளைச் சொல்ல முன்னம் அவரை வாழ்ந்தார் எண்டு சொல்லாமல் இருந்தார் எண்டு ஏன் சொன்னேன் என்பதற்கான காரணத்தைச் சொல்லி விடுகிறேன். திருமணமான அடுத்த வாரமே மனைவியை ஓட வைத்துவிட்டுச் சாப்பாட்டையும் தெருவோரப் பழம் பொருட்களைப் பொறுக்குவதையுமே நோக்கமாகக் கொண்டவரை எப்படி வாழ்ந்தார் என்று சொல்லுவது?

பனையோலை இராமனுக்கு ஒருநாள் கடுமையாக உடம்பிற்கு முடியாமல் வந்து விட்டது. மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். உலோபியான அவரது சக "வாசமே" வேண்டாம் என்று ஊரவர்கள் ஒதுக்கி வைத்துவிட்ட நிலையில் எவரும் எட்டிப் பார்க்க வில்லை. பக்கத்து வீட்டுக்காரனான நான் ஒதுங்க முடியுமா? "உண்மையிலே இரக்கமான பக்கத்து வீட்டுக்காரன் என்று நீங்கள் பாராட்டுவது காதிற் கேட்கிறது. (பிறகென்ன காதிலை கேட்காமல் கண்ணிலையா கேட்கும்?) உண்மையில் அவர் வீடுக்கு என்னை இழுத்துச் சென்றது அவரிடம் இருந்த 2 பவுண் சங்கிலி தான்.

தொடர்ந்து கவனித்துப் பார்த்த பிறகுதான் கண்டு பிடித்தேன். சுங்கிலியைப் போடமாட்டார். மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையிற் காலை ஒரு ஏழரை மணி போல எடுத்துத் துடைத்துப் போட்டு அழகு பார்த்துவிட்டு எங்கேயோ பதுக்கி விடுவார். பல மாதங்களாக முயன்றும் அந்த இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. எண்டாலும் ஒரு ஆறுதல். அவரிடம் சங்கிலி இருப்பதே தெரியாத ஊராரின் மத்தியில் அதை வைக்கும் இடம் மட்டும் தெரியாத நான் அறிவாளிதானே? (தயவுசெய்து Amongst the blind the one eyed man is the king என்ற ஆங்கிலப் பழமொழியைத்தான் மாத்தி அடிக்கிறேன் எண்டு நக்கல், நளினம் வேண்டாம்)

பனையோலை இராமன் சேரின் மரணத் தறுவாயில் அவர் பக்கத்தில் இருந்தால் விஷயம் முடிந்த கையோடு சங்கிலியை அமுக்கி விடலாம் என்று என் நிழலுக்கும் கூடத் தெரியாமல் இரகசியமாய் நினைத்தேன்.

கட்டிலைச் சுற்றியிருந்த குப்பைகளோடு குப்பையாகக் 'குட்பாய்' சொல்லக் காத்திருந்தவர் போல அவர் காணப்பட்டார். மூக்குக்குள் புண்ணாக்குப் போனால் மாடு மூசுமே? அந்த மாதிரி ஒரு மூசல் மூசிக் கொண்டிருந்தார்.

"தம்பி இஞ்ச பாரும். நான் நாளையிண் டைக்கோ அடுத்த நாளைக்கோ எண்டு இருக்கிறன். அதுக்கிடையில சின்ன வயதிலையும், படிப்பிக்கிற காலத்திலையும் விட்ட பகிடியள் கொஞ்சம் இருக்கு. ஒரு வேலைக்கு போக வேணுமெண்ட அவசரம் இல்லாமல் இருந்து கேட்கக் கூடிய ஆள் நீர்தான். கவனமாகக் கேளும்" எண்டு ஒவ்வொரு க(ா)தையாகச் சொல்லத் தொடங்கினார்.

அதுக்குள்ள வம்பு தும்புப் பகிடியளும் அடக்கம். பொன்னகையை எதிர்பார்த்துப் போன எனக்கு பரிசாக கிடைச்சது இந்தப் புன்னகைக் கதைதான். இதை வைச்சு என்ன செய்யிறது எண்டு $5^0$, $10^0$, $15^0$ எனப் பல கோணங்களிலையும் யோசிச்சுக் கொண்டிருந்தன்.

அப்பத்தான் நண்பர் ஒருவர் தமிழருவி சஞ்சிகைக்கு அனுப்புங்கோ பிரசுரிப்பினம் எண்டு சொன்னார்.

"அப்படி அனுப்பினாக் காசு தருவினமோ?" எண்டு சாடையாகக் கேட்டுப் பாத்தன்.

"காசு வராட்டியும் பெயர் வருமல்லே" எண்டார். "பெயரை வைச்சு தம்பிஜயா கடைக் கடனை கட்டலாமோ? இல்லாட்டி பிள்ளையின்ரை ரீயுசன் காசைத் தன்னும் கட்டலாமோ?" எண்டு பதில் கேள்வி போட்டன்.

அவர் என்னை ஒரு மாதிரி பாக்காமலே விட்டார். அந்தச் சங்கிலியைக் கடைசியா ஆரெடுத்தது எண்டு தெரியாத வயித்தெரிச்சலோடை தான் இந்தக் கதையினைத் தமிழருவி வாசகர்களுக்குச் சொல்லிறன் எண்டதைத் தயவு செய்து நினைவில வைச்சிருங்கோ.

**(தொடரும்)**

**(அடுத்த சஞ்சிகையில் "மருமோளுக்கு நகையெடுத்த காதை" ஆவலுடன் எதிர் பாருங்கள்)**



# மாணவர்களை முரண்பாடுகளிலிருந்து மீண்டெழச் செய்வதில் ஆசிரியரின் பங்கு

திருமதி. விஜிதா பிரதாபன்
யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை

முரண்பாடுகள் வயது வேறுபாடின்றி பால் வேறுபாடின்றி எந் நிலையினரிலும் ஏற்படக் கூடியன வாகும். குடும்பம், பாடசாலை, வேலைத்தளம், சமூகம் எனப் பல்வேறு இடங்களிலும் பல விதங்களிலும் முரண்பாடுகள் காணப்படும். அந்த வகையில் மாணவ சமுதாயத்திலும் முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. அவற்றைக் களைந்து நல்ல தீர்வுகளை வழங்க வேண்டியது அவசியமானதாகும். இன்றைய மாணவ சமுதாயமே நாளைய சமூகத்தினதும், நாட்டினதும் வளர்ச்சிக்கு வித்திடுபவர்களாக இருப்பதனால் நல்ல மாணவ விதைகளை சமூகத்திற்கு உருவாக்கிக் கொடுப்பது இன்றைய ஆசிரியர்களின் பெருங்கடமையாக உள்ளது.

விலங்கியல் விஞ்ஞானியாகிய கொன்ராட் லோறன்ஸ் என்பவர் முரண்பாடுகளையும், வன்முறைத் தன்மைகளையும் குறைக்க நான்கு வழிகளைக் குறிப்பிடுகின்றார்.

1. தன்னை உணர்தல், தன்னைப்பற்றிய நினைவோடு இருத்தல், பல்வேறு நடத்தைகளுக்காகத் தம்மை உள்ளூரச் செயற்படுத்துவன, உந்துதல்கள், எழுச்சிகள், எண்ணங்கள், உணர்வுகள் என்பவற்றை இனங்கண்டு கொண்டால் முரண்பாட்டைத் தவிர்க்கலாம்.
2. வரைதல், இலக்கியம், நடனம், நாடகம், விளையாட்டு போன்ற செயற்பாடுகள் வாயிலாக ஆழ்மன உந்துதல்கள் மற்றும் எழுச்சிகளை விடுவிக்கலாம்.
3. குழுக்களிடையே, இனப்பிரிவுகளிடையே தோழமையை விருத்தி செய்வதால் சிறந்த சமாதான சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம்.
4. சமூகத்தில் மானிட முன்மாதிரிகைகள் எண்ணக் கருக்கள், உணர்வுகளைப் பரப்புதலும், அவற்றின் மீது சமூகத்தைக் கட்டியெழுப்புதலும் ஆகும். இதற்கு கல்வி மிகப் பிரதானமானதாகும்.

மேற்கூறப்பட்ட முரண்பாடுகளைத் தவிர்க்கும் அல்லது குறைக்கும் செயற்பாடுகளை மாணவர்கள் மத்தியில் மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். இதில் பெரும் பங்காற்ற வேண்டியவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்கள் பின்வருமாறு செயற்படுவதன் மூலமாக மாணவர்களில் பெரும்பாலானவர்களை முரண்பாடுகளில் இருந்து மீண்டெழச் செய்ய முடியும்.

## கற்பிப்பதை விட கற்றலுக்கு உதவுபவராக செயற்படல்

நேரடியான பாட விடயம், மனப்பாங்குகள், சிறப்புக்கள் என்பவற்றை கற்பிப்பதற்குப் பதிலாக அவற்றைப் பிள்ளைகளிலிருந்து தோற்றுவித்து கொள்ளக்கூடிய பல்வேறு செயல்களைக் கல்வியாகக் கொள்ளலும் சுதந்திரமான நிலையை ஏற்படுத்துதலும் வேண்டும். மேலும் மாணவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்து ஒழுங்குபடுத்தி பின்னூட்டல் செய்வதும் சிறப்பானதாகும்.

## ஜனநாயகமாகச் செயற்படல்

சுதந்திரமாகக் கருத்துக்களைப் பிள்ளைகள் வெளிப்படுத்தவும், அதிகமானவர்களின் விருப்பத்திற்கு அமைவாக முடிவுகளை மேற்கொள்ளவும் இடமளிக்க வேண்டும். பிள்ளைகளின் கருத்துக்கள் அபிப்பிராயங் களுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும்.

## பிள்ளைகளின் கற்றல் திறன்களை நம்பிக்கையோடு நோக்குபவராகச் செயற்படல்

பிள்ளைகள் வெற்றுப் பாத்திரங்கள் அல்லர். பொருத்தமான ஆர்வத்தை உருவாக்கினால் அவர்களுக்கு தம்மில் நம்பிக்கை ஏற்படும். ஆசிரியர்கள் மாணவர்களைத் தூண்டுபவராகவும் வழிகாட்டுபவரா கவும் செயற்படுதல் சிறப்பானது. அந்தவகையில் மாணவர் தம்மைத்தாமே நம்பவும் திறமைகளை வளர்த்து உறுதியுடன் செயற்படவும் ஆசிரியர் துணை புரியவேண்டும்.

### உலகளாவிய கண்ணோட்டத்துடன் மானிடப் பிரச்சினையை நோக்குபவராகச் செயற்படல்

ஆசிரியர் உலகளாவிய தொடர்பை தாம் கற்பிக்கும் எந்தவொரு பாடத்தின் வாயிலாகவும் வெளிக்காண்பிக்கும் திறன் படைத்தவராகச் செயற்படுதல் அவசியம். இவ்வாறு பாடத்தை நடத்திச் செல்வதால் பிள்ளைகளைக் குறுகிய வட்டத்திலிருந்து வெளியேற்றி வளர்ச்சியின் பாதையில் இட்டுச் செல்லமுடியும்.

### தனிநபர் அபிவிருத்தியாளராகச் செயற்படல்

தனிநபர் வளர்ச்சி, அபிவிருத்தி என்ற எண்ணக்கருக்களை மாணவர்களில் கட்டியெழுப்புவதும், அதன் வாயிலாகத் தெளிவான தனித்துவத்தை உருவாக்கிக் கொள்வதும் அதனோடு சார்ந்த தமது வெகுசனத் தொடர்பு நிலைப்பாடு விமர்சனப்பாங்கு ஆகிய தனிநபர் திறன்களை கூர்மையாக்கிக் கொள்வதும் சிறப்பானதாகும். இதனால் அவர்களின் ஆளுமை விருத்தியடைய வாய்ப்பு உண்டாகும்.

### தொழிலுக்கான வழிகாட்டியாகச் செயற்படல்

வேலையற்ற பட்டதாரிகள் கூட முரண்பாடுகள் காரணமாக வன்முறையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் இன்று பரவலாக அதிகரித்து வருகின்றன. இதற்கு அடிப்படைக்காரணம் தொழிலுக்கான கல்வி வழுங்கப்படாமையே ஆகும். மாணவர்களின் கற்றல் தொழில் நோக்கம் கருதியதாக அமையுமாயின் எதிர்காலத்தில் விரக்தி மனப்பான்மையில் இருந்து அவர்கள் விடுபடமுடியும். ஆதலால் மாணவர்களின் பாடத்தெரிவானது கற்று முடிந்ததும் வேலை உலகில் பிரவேசிப்பதற்கான படிக்கல்லாக அமைவதற்கு ஆசிரியா வழிகாட்டுவது அவசியமாகும்.

நிறைவாக முரண்பாடுகள் வன்முறைகளைத் தோற்றுவிக்கும் காரணிகளாக இருப்பதனால் அவற்றிலிருந்து சிறுவர்களை மீண்டெழச் செய்வது பெற்றோர், ஆசிரியர்களின் கடமையாக உள்ளது. சிறுவர்களின் கட்டாயக் கல்வி முறையானது பாடசாலைகளில் அவர்களை ஒன்றுகூடச் செய்கின்றது. மாணவர்களை வழிநடத்துவதற்கேற்ற களமாக பாடசாலைகள் அமைவதால் முரண்பாடுகளிலிருந்து அவர்களை மீண்டெழச் செய்வது சாத்தியமானதாக அமைகின்றது.

### உலகுக்கு ஒரு கைம்மாறு

ஒருவனுக்கு ஒருத்தி
இருவர்க்கு ஒருத்தர்
மூவர்க்கும்
வயிற்று நில நிழல் - ஏன்
உலகுக்கு ஒரு கைம்மாறு
ஒரு மரம்

பசிதணிக்க மருந்து
வானப்பெண் நாண வண்ணம்.
நீயும் நானும் இட்ட கருதளைக்க
ஓசோன் குடைகாக்க
உயிர்ச்சுனை ஊக்கமாய்
பார் காக்க பருப்பு விதை கூட
இடமுடியாதா உன்னால்?

மு.வேதான்

உடம்பு சுடுகுதெல்லோ?
உணர்வு உறைய எல்லாம்.
நோய்கள் துரத்து தெல்லோ?
காசு கரைதல் மெல்ல
தூசும் ஒடு தெல்லோ?
தடுப்பார் மாசாய் செல்ல
வாயை அடக்கலாமே
மூச்சை அடக்கலாமோ?
நிறை செல்வம் பெறுவோம்
இருப்பதே போதும் என்று.
உயர் புகழ் சூடி நிற்போம்
பிறர் துன்பம் துடைக்க என்று
பாவத்தைத் தாண்டி - மெல்லக்
காமத்தை கடந்து செல்ல
மூலத்தை நாம் உணர
நாதத்தை நலமாக்கி
காயத்தைக் கற்பமாக்கி
நீளமாய் ஆயுளோடு = கட + உள் ஆக
முற்றமெங்கும் மூலிகைச் செடி-வளர்போம்
முற்றறிந்தவர் துணையோடு
முழு மூச்சாய் கரைந்து போக.

மு. வேதான்

# நீரிழிவு நோயும் யோகாசனப் பயிற்சியும்

நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துவரும் நிலையில் யோகாசனப் பயிற்சியினால் நீரிழிவு நோயை எவ்வாறு கட்டப்படுத்த முடியும் என்பது பற்றி நோக்கினால், நீரிழிவு நோயானது மனித உடலின் அனுசேபத் தொழிற்பாட்டில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக ஏற்படும் வியாதியாகும். அதாவது வயிற்றுப் பகுதியின் உட்பகுதியில் காணப்படும் கணையம் என்ற நாளமில்லாச் சுரப்பியின் தொழிற்பாடு குறைவதாலும் அல்லது அதன் இயக்கம் நடைபெறாமையால் இன்சுலின் என்ற ஓமோன் சுரக்காது விடுவதால் இந்த நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. இன்சுலின் (Insulin) ஓமோன் ஆனது உடலிலுள்ள குளுக்கோசை கிளைக்கோசனாக மாற்றி இரத்தத்தின் மூலம் தேவையான பகுதி களுக்கு சென்றடைகின்றது. இவ்வாறு குளுக்கோசைக் கிளைக்கோசனாக மாற்றுவது இன்சுலின் என்ற ஓமோன் ஆகும். எனவேதான் இன்சுலின் ஓமோனின் தொழிற்பாடு குறைவடைந்தோ அல்லது சுரக்காமல் விட்டாலோ குளுக்கோஸ் நேரடியாகவோ இரத்தத்துடன் கலந்து உடல் தொழிற்பாட்டில் பல்வேறு சிக்கல் நிலைகளை ஏற்படுத்துகின்றது.

நீரிழிவானது ஒருவருக்கு வந்தால் சரியான சிகிச்சை செய்யாமல் இருந்தால் நோய் முற்றிப் பலவிதமான நோய்கள் தோன்ற ஆரம்பித்து விடும். நோய் முற்றிய நிலையில் கல்லீரல் வீக்கம், பித்தப்பையில் கற்கள் தோன்றல், சிறுநீரகக் கோளாறுகள், கலர்ப்பார்வை மங்குதல் உட்படப் பலவித உடல் உபாதைகள் தோன்றி இறுதியில் இறப்பு வரை செல்லும்.

## நீரிழிவு நோய் தோன்றுவதற்கான காரணிகள்

1. முன்னர் குறிப்பிட்டவாறு இன்சுலினைச் சுரக்கும் கணையம் என்ற சுரப்பி கல்லீரலின் பின்புறமாக சிறுநீரகங்களுக்கு அருகில் இருக்கிறது. இச்சுரப்பியில் ஏற்படும் பாதிப்பால் நீரிழிவுநோய் வரலாம்.
2. இரத்தம் ஆரோக்கியமற்று இருத்தல்.
3. நாளாந்த வாழ்க்கைமுறைகளில் மாற்றம்.
4. மரபணுக் காரணிகள்
5. பரம்பரைக் காரணிகள்
6. உணவுப் பழக்கவழக்கங்கள் அதாவது உடலுக்கு உதவாத உணவுகளை உண்பதால் நீரிழிவு நோய் தோன்றும்.
7. நச்சுப்பொருட்கள் உணவுமூலமோ அல்லது வேறு ஏதாவது முறை மூலமாகவோ உடலுள் செல்லல்.
8. கர்ப்ப காலத்தில் தாயின் உணவுப்பழக்கத் தினால் நீரிழிவு ஏற்படல்.

போன்ற காரணங்களால் ஒருவருக்கு நீரிழிவு நோய் தோன்ற வாய்ப்புள்ளது.

உணவின் மூலம் வந்து சேரும் சக்கரைச் சத்து இரத்தத்தில் கலக்கும் போது அதனைக் கிளைக்கோசனாக மாற்றிச் சக்தியாக மாற்றுவது இந்த இன்சுலின் என்ற திரவம். இந்தத் திரவம் சுரப்பது நின்றுவிட்டால் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு கூடி இறுதியில் கழிவுப் பொருளாகச் சிறுநீருடன் வெளியேறுகிறது. இதனால் சக்தி இழப்பு ஏற்படுகின்றது. களைப்பு, கை கால்கள் விறைப்பு, பதட்டம், நடுக்கம் போன்ற உடல் உபாதைகள் ஏற்படும்.

நமது உடலில் ஆறு வகையான சர்க்கரைப் பொருட்கள் உண்டு. அவை

1. லக்டோஸ் (Lactose)
2. புரக்டோஸ் (Froctose)
3. சுக்குரோஸ் (Sucrose)
4. பென்ரோஸ் (Pentose)
5. மால்டோஸ் (Moltose)
6. குளுக்கோஸ் (Clucose)

இரத்தத்திலுள்ள சர்க்கரைக்கு குளுக்கோஸ் என்று பெயர். உடலிலுள்ள கலங்களில் மிகுதியான வற்றுக்கு சக்தியைத் தரும் எரிபொருளாகப் பயன் படுவது. மூளை இருதயம் போன்ற சில உறுப்புக்கள் மட்டுமே இன்சுலின் உதவியின்றிக் குளுக்கோசைப் பயன்படுத்துகின்றன. ஆகவே போதிய அளவு இன்சுலின் இல்லாவிட்டால் இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் வெளியேறத் தொடங்குகின்றது. காரணமில்லாமல் அடிக்கடி சிறுநீர் வெளியேறினால் அது நீரிழிவுடன் குளுக்கோஸ் உட்பட வேறு சில முக்கியமான பொருட்களும் உடலிலிருந்து வெளி யேறுவதனால் உடல் எடை குறைவதுடன் பலவித உடல்ரீதியான பிரச்சினை களுக்கும் உட்பட நேரலாம்.

இந்த நீரிழிவு நோய்க்குப் பத்மாசனம், யோக முத்ரா, சர்வாங்காசனம், மத்தியாசனம், தனுராசனம், மயூராசனம், பஸ்சிமோத்தாசனம், சக்கராசனம் முதலிய சில ஆசனங்கள் சிறந்த பலனைக் கொடுக்கும். மேற்படி ஆசனங்களை ஒரு சிறந்த குருவின் வழிகாட்டலுடன் கிரமமாகப் பயிற்சி செய்துவரின் நீரிழிவு நோயின் தாக்கம் குறைந்து ஆரோக்கியமாக வாழமுடியும்.

இங்கு யோகப்பயிற்சி செய்யும் போது சரியான சுவாச முறையுடன் நல்ல உணவுப் பழக்க வழக்கங்களையும் பின்பற்றிவரின் நிச்சயமாக நீரிழிவு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபடலாம்.




1) அவுஸ்ரேலியகிரிக்கெட் அணியில் ஓய்வுபெற்றசகோதரர்கள் யார்? யார்? இந்நாளில்அதேஅணியில் விளையாடும் சகோதரர்கள் யார்? யார்? முன்னாள் சகோதரர்கள் - ஸ்ரீவோ, மாக்வோ.
இந்நாள் சகோதரர்கள் - மைக்கசி, டேவிட் கசி.

2) அரசியலிலே சமூக ஒப்பந்தக் கோட்பாட்டைஉருவாக்கியவர்கள் யார்? யார்? தோமஸ் கொப்ஸ், ஜோன் லொக், ரூசோ.

3) பழம் பெரும் நடிகை, பாடகி கே. பி. சுந்தராம்பாளின் கணவன் பெயர் என்ன? கிட்டப்பா.

4) மிகப் பெரிய ஜனநாயகநாடொன்றில் அந்தநாட்டின் தலைநகரம் அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் பெயரில் அமைந்துள்ளது. என்ன பெயர்? நாடுஎது? அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதியான ஜோர்ஜ்-வாசிங்டன் என்பவரது பெயரில் அமைந்துள்ளது. அமெரிக்கதலைநகரம் வாஷிங்டன்.

5) தமிழ் மன்னனான எல்லாளமன்னனை வெற்றி கொண்ட சிங்களமன்னன் யார்? துட்டகைமுனு.

6) ஊழியர் சேமலாபநிதியம் (EPF) ற்குமுதலாளியின் பங்குஎவ்வளவு, தொழிலாளியின் பங்குஎவ்வளவு?
முதலாளி – 12%
தொழிலாளி - 8%
மொத்தம் - 20%

7) வடமாகாணத்தில் மூன்று மாவட்டங்களுக்கு அரச அதிபராக கடமையாற்றி தற்போதும் மூன்றாவது மாவட்டத்திலே அரச அதிபராக சேவைபுரியும் நிர்வாக அதிகாரியார்? திரு.வேதநாயகன் அவர்கள்

8) உற்பத்திக் காரணிகள் எவை? நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி

9) யாழ்ப்பாணத்தில் ஓடுகின்ற ஆறு எது? அதுஎங்குஉற்பத்தியாகிஎங்குமுடிகின்றது?
வழுக்கையாறு – கந்தரோடையில் உற்பத்தியாகி அராலிக் கடலில் கலக்கின்றது.

10) ரேடியத்தைகண்டுபிடித்தவர் யார்? மேரிகியூரிஅம்மையார்

11) "அன்பில்லாமல் கொடுக்கலாம் கொடுக்காமல் அன்புசெய்யமுடியாது" என்று கூறியஅறிஞர்? றிச்சாட் பிறவுண்சன்

12) இந்தியாவின் தமிழ் நாட்டின் மலைப்பிரதேசமும், குளிர் பிரதேசமுமான" ஊட்டியில்" சேவைபுரியும் புகையிரதத்தின் பெயர் என்ன? நீலகிரி எக்ஸ்பிரஸ்

13) மனித நடத்தை பற்றிய ஆய்வே உளவியல் என்று கூறியவர்? H – C–வோரன் அவர்கள்

14) இஸ்ரேல் உதயமான ஆண்டு? 1948

15) சிகரெட்டில் உள்ளநச்சுத் தன்மையான பொருள் எது? நிக்கொட்டின்

16) தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வர் அறிஞர் சீ.என். அண்ணாத்துரை அவர்களது கல்லறையில் என்ன எழுதப்பட்டுள்ளது? எதையும் தாங்கும் இதயம் இங்கு உறங்கிக் கொண்டிருக்கிறது என்று.

17) ஒருதலையை வெட்டினால் இரு தலைவரும் பாம்புஎது? கிரேக்கர் கதையில் வருகின்ற கைட்றா

18) சிந்துநதிகலக்கும் கடல் எது? அரபிக்கடல்

19) ஓடிக்கொலோன் என்று பெயர் வரக் காரணம்? ஜேர்மனியின் கொலோன் நகரில் தயாரிக்கப்பட்டதால்

20) 07 திருமுறைகளிலும் பாடப் பெற்றதிருத்தலம் எது? சிதம்பரம்

21) 01 நாளுக்கு ஒரு மனிதனின் இதயம் எத்தனை தடவை துடிக்கிறது? 10368 தடவை

22) திருமறைக் காட்டின் மறுபெயர்? வேதாரணியம்

23) பரசூட்டைகண்டுபிடித்தவர் யார்? பிரான்ஸ் நாட்டைசேர்ந்த A - J கனேரின் என்பவர். 1792ல் கண்டுபிடித்தார்.

24) குன்றத் தமிழ் மாலை என்பது? திருப்புகழ்



சி.சிறிதரன்
சமுர்த்தி பதில் முகாமையாளர்
B.A (dip-In-Psychology)


றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டைச் சந்தி 0776624386